பக்கங்கள்: இருபத்தெட்டு + 2

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 07 புதன்கிழமை (24.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 271



03 சிகிச்சை பெறும் அப்பாவி இளைஞர்கள்



10 வதந்திகளை நம்பாது விழிப்புடன் இருங்கள்



14 குமுறும் நாவாந்துறை மக்கள்



25 பிரேசில் சம்பியன்

### நாவாந்துறையில் நேற்று அதிகாலை

# கைதானோரின் கை, கால்களை அடித்து முறித்தனர் படையினர்

### சிகிச்சைக்கு அனுமதிக்காது 8 மணி நேரம் தடுப்பு
### 102 பேர் வைத்தியசாலையில் நேற்றுப் பகலே சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 23

நாவாந்துறையில் படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட மோதலை அடுத்து, வீடுவீடாகச் சென்ற இராணுவத்தினர் ஆள்களை இழுத்துச் சென்று கண்மூடித்தனமாகத் தாக்கியதில் இரு பெண்கள் உட்பட 102 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களின் 20க்கும் மேற்பட்டவர்களுக்கு கை, கால்கள் அடித்து முறிக்கப்பட்டுள்ளன. இராணுவத்தினரே தம்மை இழுத்துச் சென்று ஈவுஇரக்கமின்றித் தாக்கி கை, கால்களை முறித்தனர் என்று பாதிக்கப்பட்ட மக்கள் உதயன் பத்திரிகையிடம் நேரில் தெரிவித்தனர்.

கை, கால்கள் முறிக்கப்பட்ட நிலையிலும் மண்டைகள் உடைக்கப்பட்டு இரத்தம் வழிந்தோடிய நிலையிலும் சுமார் 8 மணிநேரமாக - காலை 10 மணி வரைக்கும் - அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை மறுக்கப்பட்டுள்ளது. இது அனைத்துலகச் சட்டங்களை மீறும் செயல் என்று மனித உரிமை ஆர்வலர்கள் சுட்டிக் காட்டி உள்ளனர்.



நாவாந்துறையில் கைது செய்யப்பட்ட பின்னர் கை கால்கள் அடித்து முறிக்கப்பட்டு, மண்டை உடைக்கப்பட்ட அப்பாவி இளைஞர் ஒருவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டு ஆறுதல் கூறுகின்றார்.

யாழ்ப்பாணம் நகரை அண்டிய நாவாந்துறையில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிய சிலரால் நேற்றுமுன்தினம் இரவு பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் வெடித்தது. மேலதிக படையினரும் பொலிஸாரும் வரவழைக்கப்பட்டு கூட்டம் கூடிய மக்கள் அடித்து விரட்டப்பட்டனர். இதன்போது காயமடைந்த ஒரு பெண் மற்றும் பொலிஸார் ஒருவர் ஆகியோர் நேற்றுமுன்தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலையில்

பக் 27

### பொலிஸார் நால்வருக்கு சிறு காயம்

நாவாந்துறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் 4 பொலிஸார் காயமடைந்தனர் என்று சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவா தெரிவித்தார்.

பொலிஸ் கான்ஸ்டபிள்கான சேனாரத்ன, கோகன, கேமரத்ன, றோஷான் ஆகியோரே சிறுகாயங்களுக்கு உள்ளானார்கள் என்று அவர் கூறினார். அத்துடன் இரு பொலிஸ் வாகனங்களும் இத்தாக்குதலில் சேதமடைந்ததாக அவர் மேலும் கூறினார். (த)

### சட்டத்தரணிகள் ஒரேயடியாக 24 பேர் ஆஜர்

நாவாந்துறையில் பொதுமக்கள் இராணுவத்தினரால் கண்மூடித் தாக்கப்பட்ட போதும், படையினரைத் தாக்கினர் என்று அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்ன சிங்கம் தலைமையில்

பக் 25

## நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட 100 பேருக்கும் விளக்கமறியல்

### 26ஆம் திகதி வரை காவலில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக.24

நாவாந்துறையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அசம்பாவிதங்களைத் தொடர்ந்து பெலிஸாரினால் கைது செய்யப்பட்ட பொதுமக்கள் நூறுபேர் நேற்று மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்

இவர்கள் கைது செய்து தடுத்துவைக்கப்பட்டிருந்த யாழ். பொலிஸ்நிலையம், சுற்றுவட்டாரம் மற்றும் யாழ். நீதிமன்ற வளாகம் முழுவதும் இராணுவப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

நீதிமன்றம் கூடுவதற்கு முன் மாவட்ட நீதிபதி சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த மஜிஸ்திரேட் நீதிமன்ற அறைக்குச் சென்று அவர்களைப் பார்வையிட்டார்.

**18 பேர் வைத்தியசாலைக்கு**

சந்தேகநபர்கள் தாம் தாக்கப்பட்ட விதம் தொடர்பாகவும், தமக்கு ஏற்பட்ட காயங்களையும் அவரிடம் காட்டினர். இதனைத்

பக் 27

## ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதன் மூலம் இராணுவத்தை வெளியேற்ற முடியாது

### இப்படிச் சொல்கிறார் மாவட்ட கட்டளைத் தளபதி

யாழ்ப்பாணம், ஒக.24

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதன் மூலமோ தாக்குதல் நடத்துவதன் மூலமோ இராணுவத்தை வெளியேற்ற முடியாது. அதை மக்கள் சொல்ல முடியாது. தேசிய பாதுகாப்புச் சபையே அதனை முடிவு செய்யும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க.

நாவாந்துறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இராணுவம் - பொதுமக்கள் மோதல் சம்பவம் தொடர்பாக விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க, மேஜர் ஜெனரல் வல்கம, வடபிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபர் நீல் தளுவத்த, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவா, யாழ். தலைமைப்

பக் 25

## காணாமற்போன சிறுமி சுழிபுரத்தில் சடலமாக மீட்பு

### கொன்று விசியதாகச் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஒக.24

கடந்த 17ஆம் திகதி புதன்கிழமை சுழிபுரப் பகுதியில் காணாமற்போன 8 வயதுச் சிறுமியின் சடலம் சுழிபுரம் மத்தியில் உள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து ஏழுநாள்களின் பின்னர் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

சுழிபுரம் பாண்டாவெட்டை காட்டுப்புலம் மகா வித்தியாலயத்தில் கற்கும் கிருஷ்ணமூர்த்தி சாலினி என்ற சிறுமியே சடலமாக மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சிறுமி காணாமற்போனது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த சிறுமியின் சடலம் அவரின் வீட்டில் இருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஆள் நடமாட்டம் இல்லாத வீட்டு வளவில் உள்ள பாழடைந்த கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

பக் 25



மீட்கப்பட்ட சிறுமியின் சடலம்

## கொதிப்பு அடங்காத மக்கள் கடும் சீற்றம்

### நாவாந்துறையில் நேற்றும் பதற்றம்

யாழ்ப்பாணம், ஒக.24

நேற்றுமுன்தினம் யாழ்.நகர்ப்பகுதி நாவாந்துறையில் மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் மற்றும் அசம்பாவிதங்களை அடுத்து நேற்றைய தினமும் நாவாந்துறைப் பகுதியில் பதற்றமான சூழலே காணப்பட்டது. மக்கள் கொதிப்படைந்த நிலையில் காணப்பட்டனர்.

பிரதேசத்தில் உள்ள ஆண்கள் வயது வேறுபாடற்ற முறையில் தாக்கப்பட்டு இராணுவத்

பக் 27

## அரசியல்வாதிகளின் திட்டமிடப்பட்ட சதி

### பிரதிப் பொலிஸ் மா அதிபர்

யாழ்ப்பாணம், ஒக.24

நாவாந்துறையில் நடந்த மோதல் சம்பவம் அரசியல் வாதிகள் சிலர் திட்டமிட்டுச் செய்த சதி கிறீஸ் மனிதர்கள் என்று எவரும் இல்லை.

- இவ்வாறு கூறினார் வடபிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் நீல் தளுவத்த.

யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பக் 27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழைக்கான கூடுதல் சாத்தியம் உள்ளது.

# ஈழத்தமிழர் பிரச்சினையை இந்திய அரசு தீர்த்துவைக்க அடித்தளம் அமைப்போம்

## ஒருமித்து முடிவெடுக்குமாறு தமிழ்க் கட்சிகளிடம் டில்லி மாநாட்டில் காங்கிரஸ் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஓக. 24

இலங்கையில் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றாக இணைந்து இதுதான் தமிழர்களது பிரச்சினை என்ற ஒரே முடிவை எமது நாடாளுமன்றக் குழுவிற்குத் தெரிவிக்க வேண்டும். அப்போது ஈழத் தமிழர்களுக்கு இதுதான் தேவை என்பதை ஒரே குரலில், எந்த விதஎதிர்ப்பும் இல்லாமல், அனைத்துக் கட்சிகள் ஆதரவோடு, இந்திய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, இந்திய அரசு உடனடியாக ஈழத்தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க வலுவான அடித்தளம் அமைப்போம்.

- இவ்வாறு இலங்கைத் தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் இந்தியக் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் உறுதியளித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் தொடர்பான ஈழத் தமிழர் மாநாடு புதுடில்லியில் உள்ள இந்திய அரசமைப்பு அரங்கத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.

இம்மாநாடு இந்திய காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சன நாச்சியப்பன் தலைமையில் ஆரம்பமானது.

இலங்கைத் தமிழர்களை பிரதிநிதித்துவமாகக் கொண்ட எட்டு தமிழ்க் கட்சிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டன.

இந்த மாநாட்டின் ஏற்பாட்டாளர் சுதர்சன நாச்சியப்பன் தனது அறிமுக உரையில் தெரிவித்தவை வருமாறு -

இந்தியா முழுவதும் பிரச்சினைகள் இருந்தாலும், அண்டை நாடான இலங்கையில் வாழும் தமிழர்களின் பிரச்சினையை அனைத்துக் கட்சிகளின் சார்பாக புதிய நோக்கத்துடன் பார்க்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்றைத் தொடங்கியுள்ளோம்.

எனவே, இங்கு வருகை தந்திருக்கும் இலங்கையில் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றாக இணைந்து தமிழர் பிரச்சினைகளைப் பற்றி பேசி இதுதான் தமிழர்களது பிரச்சினை என்ற ஒரே முடிவை நீங்கள் எங்கள் நாடாளுமன்றக் குழுவிற்குத் தெரிவிக்க வேண்டும். அதை எங்கள் அனைத்துக் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேரந்து நாடாளுமன்றம் கொண்டு சென்று இதை இந்தியா நடைமுறைபடுத்துவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம்.

வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நல்ல முறையில் வசதியான வாழ்க்கை வாழ்கிறார்கள். அவர்கள் ஒரு கோரிக்கையை வைக்கின்றார்கள். ஆனால், துன்பப்பட்டு, துயரப்பட்டு, பாதிக்கப்பட்டு, அல்லற்பட்டுக் கொண்டு தாய்மண்ணே கதி என்று கிடக்கும் இலங்கையில் வாழும் முப்பது இலட்சம் தமிழ் மக்களுக்கு என்ன தேவை, அவர்களுக்கு என்ன தீர்வு வேண்டும் என்று அவர்களது பிரச்சினை தொடர்பாக அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நீங்களாகவே பேசுங்கள். ஒரு நல்ல முடிவை எடுங்கள்.

நாங்கள் உங்களைக் கட்டாயப்படுத்தவில்லை, யாரும் எங்களுக்கு வழிகாட்டவில்லை, உங்கள் மக்களது பிரச்சினை நீங்கள்தான் பேசவேண்டும். ஒருமனதாக ஒரு தீர்மானத்தை எடுக்க வேண்டும். அதை நாங்கள் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு நாடாளுமன்றத்தில் எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் கொண்டுவருவோம். அதை நிறைவேற்ற அனைத்துக் கட்சிகளும் இணைந்து இந்திய அரசை நடவடிக்கை எடுக்கவைப்போம்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களில் எந்தத் தனிக்கட்சியையும் சாராத பல குழுக்கள் இருக்கின்றன. ஒரு தடவை, மியான்மர் சம்பந்தமாக ஒரு கூட்டம் நடத்தினோம். அதில் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து ஒரு தீர்மானம் எடுத்தோம். அதை நாடாளுமன்றத்திற்குப் கொண்டு சென்றோம். அந்தத் தீர்மானத்தை எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினோம்.

அதுபோல் பாகிஸ்தான், நேபாளம் சார்பாக பேசுவதற்கு நாடாளுமன்ற குழுக்கள் உள்ளன. அதன் மூலம் ஒரு கொள்கையை ஒரு முடிவாக வகுக்க முடிகிறது. ஆனால் இலங்கைத் தமிழர்களுக்கு மட்டும் இந்திய நாடாளுமன்றத்தில் வலுவான குழு இல்லை. அதனால்தான் நாங்கள் இலங்கைத் தமிழர்களுக்காக முதன் முறையாக 'பார்லிமென்ட் போரம்' என்ற அமைப்பை உருவாக்கியிருக்கிறோம்.

இதன் மூலம் இந்தியாவின் அனைத்துக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து ஈழத் தமிழர்களின் பிரச்சினைகளை, இந்த மாநாட்டின் தீர்மானமான ஒரே முடிவின் மூலம், ஈழத் தமிழர்களுக்கு இதுதான் தேவை என்பதை ஒரே குரலில், எந்தவித எதிர்ப்பும் இல்லாமல், அனைத்துக் கட்சிகள் ஆதரவோடு, இந்திய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, இந்திய அரசு உடனடியாக ஈழத்தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்க, வலுவான அடித்தளம் அமைப்போம் என்று தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

- இப்படி அவர் தெரிவித் தார்.

மாநாட்டில் இலங்கைத் தமிழரசு கட்சியின் சார்பாக மாவை சேனாதிராசா எம்.பியும் சுமந்திரன் எம்.பியும் கலந்து கொண்டனர்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பாக செல்வராசா கஜேந்திரனும், கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கலந்து கொண்டனர்.

தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ) சார்பாக அதன் தலைவர் அடைக்கலநாதனும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பாக அதன் தலைவர் ஆனந்தசங்கரியும் கலந்து கொண்டனர்.

பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் சார்பாக அதன் தலைவர் இரா. துரைரெத்தினம், செயலாளர் சிறீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எப். (பிரேமச்சந்திரன்) கட்சியின் சார்பாக அதன் செயலாளர் சுரேஷ் பிரேமச்சந்திரனும், சிவசக்தி ஆனந்தனும் கலந்து கொண்டனர்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் சார்பாக உபதலைவர் கந்தையா சிவநேசனும், பெனடிக் தனபாலசிங்கமும் கலந்து கொண்டனர்.

ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி சார்பாக அதன் தலைவர் ஞா.ஞானசேகரனும், ரவீந்திரனும் கலந்து கொண்டனர். (சி)

# உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பதவி: இன்றும் நாளையும் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக.24

உதவிப்பொலிஸ் பரிசோதகர் பதவிக்கு தமிழ் இளைஞர்களை இணைத்துக்கொள்வதற்கான இரண்டாவது நேர்முகப் பரீட்சை இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் யாழ். பொலிஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

முதலாவது நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட 60 இற்கும் மேற்பட்டோர் இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.இந்த நேர்முகப் பரீட்சையை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நோயல் பிரான்சிஸ் தலைமையிலான குழுவினர் நடத்தவுள்ளனர். (த)

# மண்ணித்தலைக்கு இன்று முதல் விசேட படகுச் சேவை ஏற்பாடு

இன்று புதன்கிழமை தொடக்கம் பூநகரி, மண்ணித்தலைக்கு தினமும் இயந்திரப் படகுச் சேவை மணியந்தோட்டத்தில் இருந்து நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம்-திகதி வரை நடைபெறவிருக்கும் மண்ணித் தலை புனித செபஸ்தியார் தேவாலய திருநாள்களை முன் னிட்டு இச் சேவை ஏற்பாடாகி உள்ளது.

மணியந்தோட்டத்தில் இருந்து தினமும் பி.ப. 1.30 மணிக்கும் பி.ப. 4.30 மணிக்கும் மண்ணித்தலையை நோக்கிச் செல்லும் இயந்திரப் படகுச் சேவை அங்கிருந்து காலை 6.30 மணிக்கு மணியந்தோட்டம் நோக்கிப் பயணிக்கும்.

இந்தச் சேவை திருநாள் கொண்டாட்டங்கள் முடிந்து யாத்திரிகர் திரும்புவதற்கு வசதியாக இம்மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை வரை நீடிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-160)

# 780 இலக்க பஸ் சேவை காலையில் இடம்பெறாமையால் மக்கள் சிரமம்

யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்குச் செல்லும் 780 ஆம் இலக்கப் பேருந்துச் சேவை காலை 7.30 மணிக்கு சேவையில் ஈடுபடாததால் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 7.30 மணிக்கு சேவையில் ஈடுபடும் இந்தப் பேருந்து சேவை தற்போது சேவையில் ஈடுபடுவ தில்லை.

இதனால் பரீட்சைக்குச் செல்லும் பாடசாலை மாணவர்களும் உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் வேறு பாதைகளைப் பயன்படுத்திப் பயணம் செய்தி வேண்டியுள்ளது. இதனால் குறித்த நேரங்கள் தவறி கடமைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு முன்னறிவித்தல் இன்றி இடைநிறுத்தப்பட்ட இந்த பஸ் சேவையை குறிப்பிட்ட நேரத்தில் சேவையில் ஈடுபடுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-313-26)

# நிகழ்வுகள்

### இப்தார் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஓக.24

புனித ரமழான் இப்தார் நிகழ்வு யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் இன்று புதன்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணிவரை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வை முன்னிட்டு "நோன்பின் சிறப்புக்கள்" என்ற தலைப்பில் சமய உரை இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்ட சமாதான சர்வமத பேரவையின் சர்வமத தலைவர்களும் மற்றும் சமூக தலைவர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-23)

### மருத்துவப் பரிசோதனை

நல்லூர் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு பாட் லீட் பினான்ஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் தினமும் மாலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை [illegible] சேவைகள், ஆலோசனைகள் என்பன இடம்பெற்று வருகின்றன. இதில் அனைவரையும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-313)

### ஆண்டு நிறைவு விழா

சம்பத் வங்கியின் யாழ்.கிளையின் 2 ஆவது ஆண்டு நிறைவு தினவிழா இன்று புதன்கிழமை காலை 7.15 மணிக்கு கிளை முகாமையாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவாந்துறையில் திங்கள் இரவு அடாவடிக்கு இலக்காகி சிகிச்சை பெறும் அப்பாவி இளைஞர்கள்


ஏ.ஜெயராஜ்
வயது - 23


பி.லக்ஸ்மன்
வயது - 37


டபிள்யூ. கில்டர்
வயது - 28


எம்.மனோகரன்
வயது - 33


ஜெ.ஜெயானந்தன்
வயது - 23


ஜெ.சிவகுமார்
வயது - 24


ஏ.தமிழ்மாறன்
வயது - 29


எஸ்.ராஜ்குமார்
வயது - 23
(பார்வையற்றவர்)


எஸ்.மைக்கல் ஜோன்
வயது - 19


காயமுற்றவர்களை வைத்தியசாலையில் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன் பார்வையிட்டபோது...




உட்காயங்களுக்கு உட்பட்டு கதிர்வீச்சுப் பரிசோதனைக்காக நேற்றிரவு 10.30 மணிக்கு வேதனையுடன் காத்திருக்கும் இளைஞர்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாவகச்சேரி நகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பதவி ஏற்கும் நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன. இதில் நகரசபைச் செயலாளர் கொன்சன்ரன் ஜக்சீன் வரவேற்புரையாற்றுகிறார். உறுப்பினர்கள் மேடையில் அமர்ந்துள்ளனர். (ம-207)

## வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்க 21 ஆவது ஆண்டு நிறைவும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம், ஒக.24

யாழ்ப்பாணம் வலுவிழந்தோர் புனர் வாழ்வுச் சங்கத்தின் 21 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் அடுத்த மாதம் 10 ஆம் திகதி சனிக் கிழமை நடைபெறவுள்ளன.

மாற்றுவலுவுடையோரை ஒன்று திரட்டிப் பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுத்து சமுதாயத்தில் அவர்கள் அங்கீகரிக்கப்படும் அளவுக்கு வழிப்படுத் தும் இந்த நிறுவனம் 21 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு கடந்த மார்ச் மாதம் பல்வேறு போட்டிகளை நடத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

நிறைவு தினவிழாவன்று இறுதிப் போட்டி நிகழ்வுகளாக காலை 6.30 மணிக்கு மாற்று வலுவுடையோர்களுக் கான சைக்கிள், மூன்று சில்லு சைக்கிள் ஓட்டப் போட்டிகளும், வினோத உடைப் போட்டிகள் என்பன இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து கவிதை, நடனம், பாட்டு ஆகிய போட்டிகள் வெற்றி பெற்றவர்களின் நிகழ்வுகளும் ஆர்க் பாடசாலை, சிவபூமி பாடசாலை, வாழ்வகம், நவீல்ட் பாடசாலை, விழிப் புலனற்றோர் சங்கம், வலுவிழந்தோர் புனர் வாழ்வுச் சங்கம் ஆகியன பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் மாற்றுவலுவுடை யோரைக் கலந்து கொள்ளுமாறு வலு விழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத் தலை வர் வைத்திய கலாநிதி ந.சிவராஜா அறி வித்துள்ளார்.

(ம-313)

## இலவச குருதிப் பரிசோதனை

யாழ்ப்பாணம், ஒக.24

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையம் உதயன் ஊடக அனுசரணையுடன் நடத்தும் சுகாதார விழிப்புணர்வு நிகழ்வில் இன்று புதன் கிழமை முதல் இலவச குருதிப் பரி சோதனை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நல்லூர் ஆலயத்தின் வடக்கு வீதி யில் அமைந்துள்ள மனோன்மணி ஆலயத் தின் அருகில் சுகாதார விழிப்புணர்வு நிகழ் வுகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் வைத்து இன்று புதன்கிழமை முதல் இலவச குருதி வெல்லப் பரிசோதனை யும் குருதி அமுக்க சோதனையும் நடை பெறவுள்ளது. அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையம் அறிவித்துள்ளது.

(ம-313)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஒக.24

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம் பெற்றுவரும் ஆன்மிக நிகழ்வில் இன்று ''மந்திரங்களின் பயன்'' எனும் தலைப்பில் இரா.கேதீசன் சிறப்புச் சொற் பொழிவு நிகழ்த்துவார். கோண்டாவில் வேதபாராயண அற நெறிப் பாடசாலை, புங்குடுதீவு தல்லைப்பற்று சங்கர முருக மூர்த்தி அறநெறிப் பாடசாலை, சங்கானை மாவடி ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை ஆகியன பங்குபற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

(ம-313)

***

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று திருமதி சுகன்யா அரவிந்தன், எ.ஜெயராமன், வி.ரமணா, கே.நந்தகுமார் ஆகியோர் பங்குபற்றும் பாட்டு இடம்பெறும். (ம-313)

***

நல்லூர் மகா சபையின் ஏற்பாட் டில் நல்லை ஆதீன குரு மூர்த்த மண்டபத்தில் இடம்பெற்றுவரும் கம்பராமாயணம் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு ''விபீ ஷணன் சர ணாகதி'' எனும் தலைப்பில் பிரம் மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா பேருரையை நிகழ்த் துவார்.

(ம-313)

***

யாழ்ப்பாணம், ஒக.24

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப் பின் ஏற்பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தினமும் ஆன்மிக சொற்பொழிவுகள் நடைபெற்றுவருகின்றன.

நல்லூரில் அமைந்துள்ள 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் சொற் பொழிவில் இன்று புதன்கிழமை 'ஆறுமுகம்' எனும் தலைப் பில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(ம-311)

***

இந்தியா சின்மயா மிஷனைச் சேர்ந்த வதிவிட ஆச் சாரியார் சுவாமி கிருஸ் ணாத் மானந்தா இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு நல் லூர் நடராஜா பர மேஸ்வரி மண்ட பத்தில் விசேட ஆன் மிகச் சொற் பொழி வை நிகழ்த்தவுள்ளார்.

நல்லூர் திரு விழாவை முன் னிட்டு யாழ். சின் மயா மிஷ னின் ஏற்பாட்டில் இடம் பெறும் இந்த நிகழ் வில் ''வாழ்க்கைப் பயணம்'' எனும் தலைப்பில் அவர் சொற் பொழி வாற்ற வுள்ளார். (ம-313)

## மரண அறிவித்தல்



### தம்பு மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)

அத்தாய், பூநகரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு மயில்வாகனம் 21.08.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சௌந்தரேஸ்வரியின் அன்புக் கணவரும் பாலசிங்கம் (நோர்வே), சௌந்தரராஜன் (4ஆம் கட்டை, பூநகரி), காலஞ்சென்ற குலேந்திரராஜா மற்றும் நிமலராணி (நோர்வே), காலஞ்சென்ற மகேந்திரராஜா மற்றும் ரவீந்திரராஜா (நோர்வே), நேசராணி (அத்தாய், பூநகரி), வசந்தராஜா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் சறோஜாதேவி (நோர்வே), பவானி, காலஞ்சென்ற விக்கினேஸ்வரி மற்றும் நடேஸ்வரன் (நோர்வே), மகாலட்சுமி (நோர்வே), சத்தியசீலன் (ஸ்ரீ) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.08.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூநகரி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அத்தாய், பூநகரி.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றிய இ.இராகவன் (முகாமைத்துவ உதவியாளர்) அவர்களின் தந்தை

**அமரர் செல்லையா இரத்தினகோபால்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை.

வலயக் கல்விப் பணிப்பாளரும், உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்.

(இ/3254)(38)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirampiyadi Lane, (off Stanly Road) Jaffna. 0212228250

A/L 2011 பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
05ம் திகதிக்கு முன் பதிவுசெய்துகொள்ளவும். 80% கட்டணக்கழிவுடன்...

Diploma in Microsoft office 3 Months ~~10000~~ 2000
Diploma in Desktop Publishing 3 Months ~~10000~~ 2000
Diploma in Web page Designing 3 Months ~~10000~~ 2000
Diploma in Graphic Designing 3 Months ~~10000~~ 2000
Diploma in Hardware Engineering 3 Months ~~10000~~ 2000
Diploma in Computerized Accounting 3 Months ~~15000~~ 3000
Diploma in Computer Science 4 Months ~~12500~~ 2500
Hon. Diploma in Computer Science 4 Months ~~12500~~ 2500
Hon. Diploma in Programming 3 Months ~~10000~~ 2000
AUTO CAD 3 Months 2000

Advanced Diploma Courses
Diploma in Video Editing ~~15000~~ 3000
Diploma in Multimedia ~~15000~~ 3000
Diploma in Networking ~~15000~~ 3000

Tally
You can Change Transaction Date

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch I - 26/08/2011
Batch II - 27/08/2011
Batch III- 28/08/2011
Batch IV- 31/08/2011
09AM or 3PM

வரையறையற்ற செய்முறைபயிற்சி, ஒவ்வொரு மாணவர்மீதும் தனிப்பட்ட கவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உள்ளும் புறமும் மனச்சுத்தியுடன் செயற்பட அரசு முன்வரட்டும்

முதலில் மலையகத்தில், இரண்டாவதாகக் கிழக்கில், இப்போது மூன்றாவதாக யாழ்ப்பாணத்தில் என்ற வரிசைக் கிரமத்தில் ''கிறீஸ் பூதம்'' எனப் பெயர் சூட்டப்பட்ட செயற்கைப் பயங்கரவாதம் தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மை இன மக்களை இலக்கு வைத்து, அவர்களை நசுக்குவதில் அடுத்துத் தொடுத்துத் தலைவிரித்தாடுகிறது.

வடக்கின் தலைநகரம் யாழ்ப்பாணத்தில், மாநகரத்தில் நேற்றுமுன்தினம் இரவு கிறீஸ் பூதத்தால் களேபரம் உண்டாக்கப்பட்டது. படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் உருவான முறுகல்நிலை, தடியடி, துப்பாக்கிச் சூடு, இராணுவ வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டமை என்று வன்செயல்களில் முடிவுற்றது.

தப்பிச் சென்ற திருடர்கள் (கிறீஸ் பூதங்கள்) இராணுவ முகாமுக்குள் புகுந்து தப்பிக்கொண்டனர் என்று செய்தி பரவ ஆரம்பித்ததால் பதற்றம் அதிகரித்துப் படையினர் மீது கற்கள் வீசப்பட்டன; இராணுவ வாகனம் அடித்து நொருக்கப்பட்டது; பொலிஸார் குவிக்கப்பட்டனர்; பொதுமக்கள் கொட்டன்களால் தாக்கப்பட்டனர்; பலர் பொலிஸ் நிலையத்துக்கு ஏற்றிச் செல்லப்பட்டனர் என்று சம்பவம் குறித்துத் தகவல்கள், தரவுகள் விரிந்தன.

மக்கள் தாக்கப்படுகிறார்கள், அசம்பாவிதங்கள் நடைபெறுகின்றன என்று மக்கள் தொலைபேசி மூலம் தெரிவித்த முறையீட்டுத் தகவல்களைப் பெற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், சம்பவம் நடைபெற்ற இடத்துக்குச் செல்வதற்காக, பொலிஸ் நிலையத்துக்குப் போய் நேரில் அனுமதி கேட்டார். வழங்கப்படவில்லை.

தம்மைத் தெரிவு செய்த மக்களின் நலன்களைப் பெற்றுக் கொடுப்பதிலும் உறுதி செய்து கொள்வதிலும் அவர்களுக்கு எந்தவித பாதிப்புகளும் ஏற்படாது தடுப்பதிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வேறு எவரையும் விட சிறப்பு உரிமையும் அதிகாரங்களும் உள்ளன. ஆனால் இங்கு அவை ஒழுக்காற்று முறைகளுக்கு அப்பால் நிராகரிக்கப்பட்டது. ஜனநாயக விழுமியங்களை முடக்கி, தாம் மேலோங்கும் அளவுக்குத் தமிழர் பகுதிகளில் அதிகாரத் தரப்புக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஓர் உதாரணம் இது.

நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும், பிரிவுகளிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் பிரசன்னமாக இருக்கும்போது, தமக்குப் பாதகமான, வாழ்க்கைக்குக் குந்தகமான சம்பவம் எதுவும் நடைபெறாமல், பாதுகாப்புப் படையினருக்கோ அல்லது பொலிஸாருக்கோ எதிராக மக்கள் வன்செயலில் ஈடுபடக் காரணம் ஏதுமில்லை. யாழ்ப்பாணத்தில் அமைதி பூரணமாக உண்டு என்பதை எவரும் மறுத்துரைக்கும் அளவுக்கு, இயல்பு வாழ்க்கை குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்குப் பாதிக்கப்படவில்லை. அத்தகைய ஒரு பின்புலத்தில், இரவு நேரத்தில் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் அளவுக்குக் குடிசனங்களுக்குத் துணிவு இருப்பதாகக் கணிக்க இடமில்லை; கூற முடியாது.

எந்தத் தரப்பினரது தூண்டுதலாலும் தாம் அனுபவிக்கும் அமைதியையும், இயல்பு வாழ்க்கையையும் கெடுத்துவிட அவர்கள் துணியமாட்டார்கள். இது எந்தவொரு சாமானியனுக்கும் தெரியும்.

மேலும் யாழ்ப்பாண நகரிலும், வடமராட்சியில் மூன்று பகுதிகளிலும் - கரவெட்டி, பொலிகண்டி, கரகத்தான்புலம் - என்ற மூன்று வட்டகைகளில் வாழும் பொதுமக்களை ஒரே நாளில் இரவு வேளையில் பீதியடைய வைத்ததையும் - அசம்பாவிதங்கள் உருவாக்கப்பட்டதனையும் மக்கள் திட்டமிட்டு நடத்திய குழப்பங்கள் என்று கருதுவதோ தர்க்கிப்பதோ பொருத்தமற்றது; ஏற்புடையதும் அல்ல.

எப்படியோ, யாழ்.நகரிலும், வடமராட்சியிலும் நடந்த குழப்பங்கள் மக்களால் திட்டமிடப்பட்டவை என்று கொள்ளமுடியாதவை. மலையகத்திலும் கிழக்கிலும் இடம்பெற்றவை முழுக்க முழுக்க இதனை ஒத்ததே.

தமிழ், முஸ்லிம் மக்கள் வாழும் பகுதிகளில் பெரும் குழப்ப நிலையை உண்டாக்குவதற்கு அடக்குமுறை என்ற சகதிக்குள் தள்ளி விடுவதற்குச் சக்திமிக்க தரப்பு அல்லது தரப்புகள் ''கிறீஸ் பூதம்'' என்ற பெயரில் சட்டம் ஒழுங்கைக் குலைக்கத் திட்டமிட்டு செயலாற்றுவதை எவரும் இலகுவில் ஊகித்து உணரலாம்.

மலையகம் மற்றும் வடக்கு, கிழக்கில் மக்கள் பாதிப்புறாமல் அந்தப் பிரதேசங்களில் அமைதி, சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படுவதற்கு, அரசாங்க உயர்மட்டங்கள் உரிய கரிசனையோடும் உண்மை விசுவாசத்துடனும் செயற்பட்டால் ''கிறீஸ் பூதம்'' யாரின் பிரசவம் என்று கண்டறிவது ஒன்றும் கடினமானதல்ல.

கிழக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள படையினருக்கு விசேட பயிற்சிகள் வழங்கும் செயற்பாட்டை, மக்கள் தங்களை ஒடுக்குவதற்கான நடவடிக்கை என்றே கருதுகிறார்கள். இதனை அரசு காதில் போட்டுக் கொள்ளாமல் தனது பக்கத்தில், கோணத்தில் வைத்தே நோக்குகிறது, பார்க்கிறது. ஆனால் மக்கள் நிலையில் நின்று ஆராய்வது மிக அவசியம்.

மக்கள் மனதில் வேண்டாத பீதிகளை உண்டாக்கி, அரசாங்கத்தைக் களங்கப்படுத்தும் வகையில் சில விஷமிகள் செயற்பட்டு வருகின்றார்கள். இதனை முறியடிப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் தத்தமது பகுதிகளில் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி தெரிவித்துள்ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

மக்களை பீதியிலிருந்து விடுவிக்க, சம்பந்தப்பட்ட பகுதிகளில் விழிப்புக் குழுக்களை பாதுகாப்பு மட்டத்தில் உருவாக்க வேண்டும் என்ற தீர்மானமும் அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுவும் மக்களைப் பாதிக்காத ஒரு செயற்பாடாக அமையும் என எதிர்பார்க்கலாம். கிழக்கில் படையினருக்கு விசேட பயிற்சி வழங்கும் முறை மேற்கொள்ளப்படுவது போன்ற செயற்பாடுகளை விட, இது ஓரளவிலேனும் பலன்தரும் என எதிர்பார்க்கலாம்.

அவசரகாலச் சட்டம் நீக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதால் அதற்குப் பதிலாக இராணுவ அதிகாரத்தைப் பலப்படுத்துவதற்கான முன்னோடியே ''கிறீஸ் பூத'' மோதல்கள் என்ற மக்களின் பலத்த சந்தேகங்களையும் இதன்மூலம் நீக்க இயலும் அல்லவா?

ஆனால் உள்ளார்ந்த நோக்கம் ஒன்றைக் கருவாக வைத்து, புறம் ஒன்று செய்வதால் மக்களின் மனங்களை வென்றுவிட முடியாது.

## கிளிநொச்சி மாவட்ட நிலையம் ஒன்றில்

# விண்ணப்பிக்காமல் புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய 8 மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஒக.24

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் நடந்த தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பிக்காத எட்டு மாணவர்கள் பரீட்சை எழுத அனுமதித்தது தொடர்பில் விசாரணைகள் மேற்கொண்டு வருவதாக பரீட்சை ஆணையாளர் தனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இந்த குளறுபடி குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கிளிநொச்சி மாவட்டத்தின் ஒரு பரீட்சை நிலையத்தில் புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பிக்காத 8 மாணவர்களைப் பரீட்சை எழுத பாடசாலை அதிபர் அனுமதித்துள்ளார். இது தொடர்பில் குறித்த அதிபருக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளரிடம் நான் தொடர்புகொண்டு கேட்டபோது அவ்வாறான முறைப்பாடுகள் எவையும் இதுவரை எனக்குகிடைக்கவில்லை என்றார்.

மேலும் நுகேகொட அனுலா வித்தியாலயத்தில் தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் பாடசாலை அபிவிருத்திச் சங்க கலந்துரையாடலுக்கு ஒலிபெருக்கி பயன்படுத்தியுள்ளனர். இதனால் மாணவர்களுக்குப் பரீட்சை எழுதுவதக்கு இடையூறு, சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதனைவிட தற்போது இடம்பெற்று வரும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் முறைகேடு நிகழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. பரீட்சை நிலையங்களிருந்து விடைத்தாள்களைப் பிராந்திய நிலையங்களுக்கு எடுத்துச் செல்வதற்குப் பொலிஸ் பாதுகாப்புடன் எடுத்துச் செல்ல வேண்டும். இருப்பினும் மன்னாரில் ஒரு அதிகாரி அவ்வாறு செய்யாமல் தானே நேரடியாகச் சென்று எடுத்துச் சென்றுள்ளார். உடனடியாகவே அந்த அதிகாரி குறித்த பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் - என்றார் ஆணையாளர். (15)

# சீமானின் குற்றச்சாட்டுக்கு டக்ளஸ் மறுப்பு

கொழும்பு, ஒக.24

தமிழக மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்துக்கும் எனக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

சீமானின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்களில் எந்தவித உண்மையும் இல்லை எனவும் அதில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களைத் தாம் முற்றிலும் மறுப்பதாகவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

''நடுக்கடலில் 30 படகுகளில் வந்து தமிழக மீனவர்களைத் தாக்கியது இலங்கை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவின் அடியாளர்கள் தான்.

இந்தத் தாக்குதலை இலங்கை மீனவர்கள் தான் நடத்தினார்கள் என்று செய்திகள் கூறுகின்றன. ஆனால் உண்மை அதுவல்ல. டக்ளஸ் தேவானந்தா இலங்கை அரசின் சூழ்ச்சித்திட்டத்துக்கு உதவத் தனது அடியாள்களை அனுப்பி இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளார்''- என்று நாம் தமிழர் இயக்கத் தலைவர் சீமான் குற்றம் சாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

# சர்வகட்சிக் குழுத் தீர்மானத்தையும் தெரிவுக்குழு கவனத்தில் எடுக்கும்

## அமைச்சர் திஸ்ஸவிதாரண கூறுகிறார்

கொழும்பு, ஒக. 24

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக நியமிக்கப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும், நாடாளுமன்றத் தெரிவுக்குழு கவனத்துக்கு எடுத்துக்கொள்ளும். இதேவேளை, தெரிவுக்குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவித்துவரும் கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்படும். இவ்வாறு லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், சர்வகட்சிக் குழுவின் தலைவரும், சிரேஷ்ட அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண நேற்று முன்தினம் தெரிவித்தார்.

தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக நேற்று முன்தினம் கொழும்பு - கொட்டா வீதியிலுள்ள கலாநிதி என்.எம். பெரேரா ஞாபகார்த்த நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

சுதந்திரப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது சுதந்திர இலங்கையர் என்ற வகையில் இணைந்து போராடினோம். எமது நாட்டில் சிலர் குறிப்பாக தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் மத்தியில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்த முயற்சித்தனர். இதனால் போர் மூண்டது. இப்போது போர் முடிவடைந்துள்ளது. நாடு ஒன்றுபட்டுள்ளது. சிங்களத்தை மட்டும் தேசிய மொழியாகப் பிரகடனப்படுத்தினால் ஏற்படும் பிரச்சினைகளை நன்கு அறிவோம். இப்போது அபிவிருத்திப் பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல அதிகாரப்பகிர்வு வேண்டும். பொருளாதார வளர்ச்சி உட்கட்டுமானம், வேலைவாய்ப்பு வழங்குவதன் மூலம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் எனச் சிலர் நினைக்கின்றனர். அது தவறாகும். அதற்கும் மேலாக அதிகாரப்பகிர்வு வழங்கப்பட வேண்டும். இதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

ஜனாதிபதியின் ஆலோசனைப்படி சர்வகட்சிக்குழு அமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் 17 கட்சிகள் இணைந்தன. இறுதியில் 13 கட்சிகளே எஞ்சின. எவ்வித பிற தலையீடுகளின்றி 21 அரசியல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை முன்வைத்தனர். ஆனால், அவை தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - அரசுடன் பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றது.

அதன் பின்னரான நடவடிக்கையாக இப்போது தெரிவுக்குழு அமைக்கப்படவுள் ளது. இந்தத் தெரிவுக்குழுவுக்கு நாம் ஆதரவு வழங்குகின்றோம். அதேபோன்று ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பனவும் ஆதரவு வழங்க வேண்டும். இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறவர்கள் முயற்சிக்கு முட்டுக்கட்டை இடாமலும், விமர்சனங்களை பரப்பாமலும் இருக்கவேண்டும் எனக் கோருகிறோம்.

தேசியப் பிரச்சினைக்கு அதிகாரப்ப கிர்வு வேண்டும். மக்களுக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும். கிராம மட்டத்தி லிருந்து மக்களுக்கான அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். 'கம்சபா' போன்றதொரு கிராமமே தற்போது தேவைப்படுகிறது. மத்திய அரசிடமுள்ள அதிகாரங்கள் மாகாண சபைகள், பிரதேச சபைகள் ஊடாகப் பகிரப்பட வேண்டும். பிரிவினைவாதத்தை ஒழித்து நாட்டு மக்களை ஒன்றிணைக்க வேண்டும். அதே போன்று மனித உரிமைகள், ஜனநாயகம் என்பன பாதுகாக்கப்பட வேண்டும். அதன் மூலம் மக்களின் பயங்கள், சந்தேகங்கள் தீர்க்கப்படவேண்டும். எனவே, இந்தத் தெரிவுக்குழு முயற்சியானது வெற்றி பெறும் என நம்பிக்கை கொள்கிறேன் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தமிழ்ப்படுகொலை'யுடன் எங்கும் ஓடித்திரியும் வலி.வடக்குப் பிரதேச சபை 'பிக்கப்'




வலி.வடக்கு, ஓக.24

வலிவடக்குப் பிரதேச சபைக்குப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வழங்கப்பட்ட 'பிக்கப்' வாகனத்தில் தமிழ் மொழி படுகொலை செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு வழங்கப்பட்ட இந்தப் 'பிக்கப்' வாகனம் இதுவரை காலமும் பிரதேச சபையின் செயலரின் பாவனையில் இருந்து வந்தது.

ஆனால் சபையின் செயலாளர் இந்தத் தமிழ் படுகொலையை திருத்துவதற்கு முன்வரவில்லை. தற்போது சபைக்குப் பொது மக்களின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு பதவிகளைப் பொறுப்பேற்றுள்ள நிலையில் அவர்களுடன் இந்தப் பிழையுடன் வாகனத்தைப் பயன்படுத்துவார்களா? அல்லது அதனைத் திருத்திச் சரியாகப் பயன்படுத்துவார்களா? என்ற கேள்வி எழுந்துள்ளது. (த)

## மந்துவில் அ.த.க. பாடசாலையை மீண்டும் இயங்கவைக்க கோரிக்கை

தென்மராட்சி, ஓக. 24

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக மூடப்பட்டுள்ள மந்துவில் அ.த.க. பாடசாலையை மீண்டும் திறக்குமாறு அந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகளைக் கோரியிருந்த போதும் பலன் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

தரம் 5 வரையான ஆரம்பப் பிரிவு வகுப்புகளைக் கொண்ட இந்தப் பாடசாலை எதுவித சேதமும் ஏற்படாத நிலையில் உள்ளது. இந்தப் பாடசாலையை உடன் திறக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பல தடவைகள் அறிவித்தும் இதுவரை பலன் எதுவும் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாடசாலையை அண்டிய பகுதியில் 400 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதாகவும், இந்தப் பாட சாலை தொடர்ந்து மூடப்பட் டிருப்பதால் சுமார் ஒரு மைலுக்கு அப்பால் உள்ள பாடசாலை களுக்கு இங்குள்ள மாணவர்கள் நடந்து செல்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஆகவே இந்தப் பாடசாலையை மீண்டும் திறக்க உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க மாட்டார்களா? என மக்கள் கவலை தெரிவித்தனர். (எ-207)

## மீளாய்வுக் கூட்டம்

யாழ்.மாவட்ட அபிவிருத்தி திட்டங்களின் மீளாய்வுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் 2010-2011 ஆகிய ஆண்டுகள் முன்னேற்றம்- அபிவிருத்தி மற்றும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படவுள்ளன. மேற்படி அபிவிருத்திக் கூட்டத்தில் சகல திணைக்கள தலைவர்களையும் அபிவிருத்தித் திட்டங்களின் பிரதிநிதிகளுடன் சமுகமளிக்குமாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கேட்டுள்ளது. இதேவேளை-சகல திணைக்களத் தலைவர்களையும் வன்-மென் பிரதிகளுடன் நாளை வியாழக்கிழமை சமுகமளிக்குமாறு அரச அதிபர் கேட்டுள்ளார். (ம-302)

## முனீஸ்வரன் வீதியில் கடும் துர்நாற்றம்

யாழ்ப்பாணம், ஓக.24

யாழ்.முனீஸ்வரன் வீதியில் வீசும் துர்நாற்றத்தால் அந்த வீதியால் பயணிப்பவர்களும் அங்காடி வியாபாரிகளும் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

புல்லுக்குளத்துக்கு வடிகால் மூலம் செல்லும் கழிவு நீராலேயே இந்தத் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் துர்நாற்றத்தால் முனீஸ்வரன் வீதியால் பயணிக்க முடியாத நிலையில் மக்கள் மூக்கைப் பொத்தியபடி செல்கின்றனர்.

இந்த வாய்க்காலைத் துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை புல்லுக்குளத்துக்குச் செல்லும் கழிவு நீரைத் தடுத்து நேரடியாகக்கடலுக்கு வெளியேற்றுவ்தற்கான பெரிய குழாய்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. (த-26)

## மாநகர சபையின் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், ஓக.24

யாழ். மாநகர சபையின் இந்த ஆண்டுக்கான ஏழாவது பொதுக்கூட்டம் இன்று புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு மாநகர முதல்வரின் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளதாக செயலாளர் ரு.சத்தியானந்தன் அறிவித்துள்ளார். (த-15)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Applications will be received by me up to 23rd September 2011 from suitably qualified candidates for the following post.

**1. WORKS SUPERINTENDENT (ELECTRICAL) GRADE II**

Qualifications:

a) National Diploma in Technology (NDT) or equivalent qualifications and have at least four years experience in the relevant field after obtaining such qualifications.

Note: Period of in - plant training will not be counted for the four years' experience.

OR

b) National Certificate in Techology (NCT) or equivalent qualifications and have at least ten years experience in the relevant field after obtaining such qualifications.

Salary Scale: Rs.19,625-2x185;19x245-24,650/- p.m

Age limit: Not more than 45 years

Note: Age limit is not applicable to those who are in service

SELECTION: By Test and Interview

Application forms may be obtained from the Office of the Senior Assistant Registrar/Establishments (Non-Academic) of this University on payment of Rs.100/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's Counter of this University. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna, together with a self-addressed Rs.5.00 stamped envelope of 23x10 cm, in size.

The envelope containing duly filled application form must bear the name of the post to which they apply on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 23rd September 2011. Applications should be sent in the specified form. Incomplete and illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission.
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System.
3. Gratuity payment.
4. Employment Trust Fund benefits.
5. Free medical care.

Those who are in Public Service / Corporations / Statutory Bodies should forward their applications through their respective Heads of Departments / Corporations / Boards. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

**REGISTRAR**
**23.08.2011**


## கைதடி முதியோர் இல்லத்தில் 25 பேருக்கு 'கற்றாக்' நோய்

### இவர்களுக்கு சத்திரசிகிச்சை விரைவில்

யாழ்ப்பாணம், ஓக.24

கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியோர்களில் 25 பேருக்கு கண்ணில் 'கற்றாக்' ஏற்பட்டுள்ளதால் அதற்கான சத்திர சிகிச்சை விரைவில் நடைபெறவுள்ளது.

கொழும்பு முதி யோர் தேசிய செயலகத்தால் கடந்தவாரம் இந்த முதியோர் இல்லத்தில் கண் சிகிச்சை முகாம் ஒன்று நடத்தப்பட் டது. பிரபல கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் சந்திர குமார் தலைமையில் இந்தக் கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இந்தக் கண் சிகிச்சை யில் 25 வயோதிபர்களின் கண்களில் 'கற்றாக்' ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இவர்களுக்கான சத்திர சிகிச்சை விரை வில் மேற்கொள்ளப் படவுள்ளதாக முதியோர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன. (த-26)

## வடிகால் பெரும் சேதம்

குருநகர், ஓக.24

யாழ்ப்பாணம் நான்காம் குறுக்கு வீதியில் குருநகர் சின்னக்கடை இறைச்சி விற்பனை நிலையத்துக்குமுன்பாக கடைக் குறுக்கு வீதியில் உள்ள வடிகாலின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

இந்தச் சேதம் இவ் வீதியின் முக்கால் பகுதியைப் பிடித்துள்ளதால் இவ் வீதியின் ஒரு பகுதியே போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படுகின்றது. இப் பகுதியில் முன்னர் இராணுவத்தினர் நிலை கொண்டதனால் இந்த வீதியை மக்கள் பயன்படுத்தவில்லை.

ஆனால் படையினர் விலகி மக்கள் மீளவும் குறியேறியுள்ளதால் இவ் வீதி புனரமைக்கப்பட வேண் [illegible] இந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.


## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு
20.08.1920

இறப்பு
25.07.2011

அமரர் **மருதர் சின்னையா**
(ஓய்வு பெற்ற அதிபர் - துன்னாலை)

எங்கள் குடும்பத்தின் அணையா விளக்கு அன்புத் தெய்வம் இறையடி சேர்ந்ததை அறிந்து அகம் தேடி வந்து துயரில் பங்குகொண்டோருக்கும், வெளி நாடுகளிலிருந்து எமக்கு ஆறுதல் வார்த்தை கூறியவர்களுக்கும், அஞ்சல் மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியோருககும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி உரை நிகழ்த்திய கல்விசார் சமூகத்தினருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் அனுதாபம் தெரிவித்த அகில இலங்கை இளங்கோ கழகத்தினருக்கும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொண்டோருக்கும் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்ற (24.08.2011) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கோயிற் கடவை,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(சி/3268) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சைக்காக காய்ச்சலை கவனிக்காத மாணவன் டெங்குக்குப் பரிதாபப் பலி!



யாழ்ப்பாணம்,ஒக.24

இம்முறை ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர் ஒருவர் டெங்குநோய் காரணமாக உயிரிழந்துள்ளார். யாழ். இந்துக் கல்லூரி மாணவனான செல்வராசா ஜனகன் (வயது-18) என்பவரே நேற்று முன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார். இவர் அரியாலைப் பகுதியைச் சேர்ந்தவர்.

கணித பாடப்பிரிவில் கல்வி கற்றுவந்த இந்த மாணவர் கடந்த சனிக்கிழமை ஆங்கிலப் பாடப் பரீட்சைக்கும் தோற்றியிருந்தார். இதுவே அவர் இறுதியாக எழுதிய பரீட்சை.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:

கடந்த 7 தினங்கள் வரையில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த ஜனகன், தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மருந்து உட்கொண்டு வந்துள்ளார். டெங்கு நோய்த் தாக்கம் இருப்பது தெரிந்திருக்கவில்லை.

பரீட்சை எழுதுவதற்காக மாணவன் ஜனகன் மருந்துக் குளிகைகளுடன் சமாளித்து வந்துள்ளார். எனினும் நேற்று முன்தினம் அவரது நிலைமையில் திடீர் மாற்றம் காணப்பட்டது. காய்ச்சல் உக்கிரமடைந்து அவர் சோர்வடைந்தார். பலவீனமான நிலையை அடைந்தார் அவர் உடனடியாக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் நிலைமை மோசமடைந்து ஒரு சில மணிநேரத்தில் ஜனகன் உயிரிழந்தார்.

வைத்தியப் பரிசோதனையின் மூலம் அவர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. வைத்திய அறிக்கையிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவரது சடலம் உடற்கூற்று சோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ஒ-15-323)

# திருநெல்வேலிச் சந்தையின் புனரமைப்புப் பணி மந்தகதியில்

## மழை காலத்தில் வியாபாரிகள் சிரமம்

யாழ்ப்பாணம், ஒக. 24

திருநெல்வேலிச் சந்தையின் புனரமைப்புப் பணிகள் மந்த கதியில் நடைபெற்று வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மரக்கறிச் சந்தையின் மேல்தளத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சந்தையின் கட்டுமானப் பணிகள் ஆமை வேகத்தில் நடைபெற்று வருவதால் அங்கு பெரும் இட நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது.

மாரி காலம் ஆரம்பமாகவுள்ளதால் சந்தைக்குள் மழை வெள்ளம் தேங்கி நிற்கக் கூடிய சாத்தியம் உள்ளது எனவும் இதனால் தாம் வியாபாரத்தில் ஈடுபட முடியாத நிலை உருவாகக் கூடும் எனவும் அங்கு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கொட்டித் தீர்த்த மழையால் சந்தையில் வெள்ளம் தேங்கியது. இதனால் வியாபாரிகளும் நுகர் வோரும் சிரமப்பட்டனர். (த-26)

## கொண்டாட்டம்...



சேவை நயப்பு: யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரியின் பொன்விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கல்லூரியின் முன்னாள் அதிபர் செல்வி. ப.வீரகத்திப்பிள்ளை மங்கள விளக்கேற்றினார். (த-4)

# யாழ்.ஆஸ்பத்திரியில் நடந்த தாதியர் கல்லூரிப் பொன் விழா

யாழ்ப்பாணம், ஒக. 24

யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியின் பொன்விழா நிகழ்வும் மலர் வெளியீட்டு நிகழ்வும் யாழ். போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள தாதியக் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றன.

யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியின் போதனாசிரியர் சி. ஜெயக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகச் சுகாதார அமைச்சின் தாதியர் கல்லூரிப் பணிப்பாளர் திருமதி எஸ். ஸ்ரீவர்த்தனவும், கௌரவ விருந்தினராக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி பவானி பசுபதிராஜாவும் கலந்து கொண்டனர்.

மங்கள விளக்கேற்றல், இறை வணக்கம், தமிழ்த்தாய் வாழ்த்து, வரவேற்பு நடனம் மற்றும் மதத் தலைவர்களின் ஆசியுரையுடன் நிகழ்வு ஆரம்பமாகியது.

'விளக்கேந்திய சீமாட்டி' என வர்ணிக்கப்படும் 'புளோரன்ஸ் நைற்றிங்கேல் அம்மையாரின் சிலைக்கு யாழ். தாதியர் கல்லூரி அதிபர் செல்வி ரஜீலா தேவி வல்லிபுரநாதன் மங்கள விளக் கேற்றினார். தொடர்ந்து மங்கள விளக்கேற்றல் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள், வைத்தியர்கள், தாதிய கல்லூரி உத்தியோகத்தர்கள் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் கல்லூரியின் ஸ்தாபகர் அதிபர் திருமதி நவமணி வல்லிபுரநாதன் கலந்து கொள்ளமுடியாத போதும் அங்கு அவர் கௌரவிக்கப்பட்டிருந்தார். தாதியர் கல்லூரியின் முன்னை நாள் அதிபர்களான செல்வி பி. வீரகத்திப்பிள்ளை, திருமதி தேவமலர் அருளானந்தம், தற்போதைய அதிபர் செல்வி ரஜீலாதேவி வல்லிபுரநாதன் ஆகியோர் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது தாதிய மாணவர்களுக்கு மற்றும் வெளியாருக்கும் தனித்தனியே நடத்தப் பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (த-4-313)

# சாளம்பைத் தீவுக்கு படகில் செல்ல இறங்குதுறை

தென்மராட்சி, ஒக.23

கச்சாய் கடலேரியில் உள்ள சாளம்பைத்தீவில் படையினரால் இறங்கு துறை அமைக்கப்பட்டு வருகிறது.

இங்குள்ள ஆலயத்துக்கு வாராவாரம் செல்லும் பக்தர்கள் தீவுக்கு 150யார் தூரத்துக்கு முன் கடலுக்குள் இறங்கி நடந்து செல்கின்றனர். இந்தத் தீவுக்குப் படகுகளில் செல்வோருக்கென இறங்குதுறை அமைத்துத் தருமாறு தென்மராட்சி இளைஞர் அணித் தலைவர் கு.சர்வானந்தன் 521ஆவது படையணித் தலைமையிடம் கோரியிருந்தார். இதனை அடுத்து படையணிக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயரட்ணவின் பணிப்பின் பேரில் ஐம்பதுக்கும் மேற்பட்ட படையினர் கடந்த18ஆம் திகதி அங்கு இறங்கு துறை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். படையினருடன் ஆலய அடியார்கள் 60 இற்கும் மேற்பட்டோர் சென்று 150யார் தூரத்துக்கு பாலம் அமைத்துள்ளனர். (த-207)

# வட பகுதியில் மூடப்பட்டுள்ள 100 பாடசாலைகள் திறக்கப்படும்

யாழ்ப்பாணம், ஒக.24

வடபகுதியில் இயங்காமல் உள்ள 100 பாடசாலைகளை விரைவில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் அடங்கும் பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளை முதல் கட்டமாக இயக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

இலங்கை முழுவதும் இயங்கா்த பாடசாலைகளின் விவரம் பாதுகாப்பு அமைச்சால் திரட்டப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் வட மாகாணத்தில் இயங்காத பாடசாலைகளின் விவரங்களும் இதன் போது திரட்டப்பட்டு வருகின்றன.

வடமாகாணத்தில் தற்போது இயங்காத நிலையில் உள்ள 100 பாடசாலைகளை விரைவில் இயக்குவதற்கான நடவடிக்கைகளைக் கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த-15)

# சாவகச்சேரி ரயில் நிலையத்தில் மணல் அகழ்வு

## உத்தியோகத்தர்களின் விடுதிகள் இடிந்து வீழ்ந்தன

தென்மராட்சி, ஒக. 24

சாவகச்சேரி ரயில் நிலையத்துக்கு முன்பாக இரவு வேளைகளில் அண்மைக் காலமாக மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் ரயில் நிலைய உத்தியோகத்தர்கள் தங்கும் விடுதிகள் இடிந்து வீழ்ந்துள்ளன.

முன்னைய காலத்தில் இவ்விடத்தில் பெரிய மண் திட்டிகள் காணப்பட்டதாகவும் இந்த மண் கட்டட வேலைகளுக்கு பயன்படுத்துவதற்கு மாட்டு வண்டிகளிலும் பின்னர் வாகனங்களிலும் எடுத்துச் செல்லப்பட்டு இன்று மணல் திட்டி இருந்த இடமே தெரியாத அளவுக்கு மணல் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

1970 ஆம் ஆண்டுகளில் சாவகச்சேரி ரயில் நிலையத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர்களுக்கென ரயில்வே திணைக்களம் ஆறு பிரிவுகளைக் கொண்ட உத்தியோகத்தர்கள் விடுதிகளை இந்தப் பகுதியில் அமைத்திருந்தது.

கடந்த 1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ரயில் சேவை நிறுத்தப்பட்டு ஊழியர்கள் வெளியேறியதை அடுத்து இந்த விடுதிகளில் கூரைகள், கதவுகள், ஜன்னல்கள் இனந் தெரியாதோரால் அகற்றப்பட்டு வெறும் கட்டடமாகக் காணப்பட்டது.

கடந்த 1996ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தப் பகுதி படையினரின் முழுமையான கட்டுப்பாட்டில் இருந்ததால் எவரும் இங்கு அனுமதிக்கப்படவில்லை. அண்மைக் காலத்தில் இவற்றைப் ரயில்வே திணைக்களத்திடம் ஒப்படைத்து விட்டுப் படையினர் வெளியேறினர்.

படையினர் வெளியேறிய அன்றிலிருந்து இரவிரவாக இந்தப் பகுதிக்கு வரும் உழவு இயந்திரங்கள் மணலை ஏற்றிச் செல்வதாகவும் இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்த போதிலும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தெரிவித்தனர். (எ-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த கனேடியத் தலைவர் நேற்றுமுன்தினம் மரணம்

கனேடிய மத்திய அரசியலில் தாக்கம் நிறைந்தவராகவும் தற்போதைய நாடளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவும் தமிழர்களின் வாழ்வியலை மேம்படுத்த தன்னை முழுமையாக ஈடுபடுத்தியவருமான புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக் லெய்டன் புற்றுநோய் காரணமாக நேற்று முன்தினம் காலை 4.45 மணியளவில் மரண மடைந்துள்ளார்.

புற்றுநோய் தாக்கம் காரணமாக எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து கடந்த மாதம் 25 ஆம் திகதி தற்காலி கமாக விலகிக் கொண்ட இவர் பூரண குணமடைய வேண்டும் என தமிழர்கள் சார்பாக கனே டியத் தமிழ்க் காங்கிரஸ் உள் ளிட்ட அமைப்புக்கள் பிரார்த் தனை வேண்டுகோள்களை விடுத்திருந்தன.

கனேடியத் தமிழர்கள் தமது நாட்டில் அடக்கப்பட்டவர்கள். கனடாவில் அவர்கள் இரண்டாந் தரப் பிரஜைகளாக வாழ முடியாது தமது விருப்பு வெறுப்புக் களை கனேடிய அரசியலில் தெரிவிக்க வழி செய்யவேண்டும் என்ற நிலைப்பாட்டை நேரடியாகவே தெரிவித்து வந்த ஒரு சிறந்த அரசியல் தலைவராவார்.

சாதாரண ஒரு மனிதனாக வாழ்க்கையை ஆரம் பித்த ஜக் லெய்டன் கணிதத் துறைப் பேராசிரியராகப் பணி ஆரம் பித்து பின்னர் ரொறன்ரோ மாநகர சபை அங்கத் துவராக அரசியலுக்குள் நுழைந்தவர்.

அதிலிருந்து நேரடியாகவே மத்திய அரசியலுக்குச் சென்ற அவர் புதிய ஜனநாயகக் கட்சியை உத்தியோகபூர்வ எதிர்க் கட்சியாக்குமளவுக்கு மிகவும் திறம்படச் செயற்பட்டார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்களுக்கான விசாரணை தேவை யென்பதை கட்சியின் சார்பில் வலியுறுத்தியதோடு கனடா நேரடியாக யுத் தக் குற்றவிசாரணை விடயங் களில் ஈடுபட வேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றியவராவார்.



ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயத்தில் அண்மையில் இடம் பெற்ற தரம் 5 மாணவர்களுக்கான சுற்றாடல்சார் செயற்பாட்டு முகாமை செயற்பாடுகளை கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவு முன்னாள் பணிப்பாளரும் கோப்பாய் நவமங்கை நிலைய தாபகருமாகிய சுவர்ணா நவரட்ணம் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

# சீருடையில் இலக்கம் பொறிக்காத பொலிஸார் வெளியில் செல்ல தடை

மட்டக்களப்பு, ஓக.24

பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் சீருடையில் இலக்கத் தகடு பொருத்தாமல் வெளியே செல்லக்கூடாது என்று மட்டக் களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவீந்திர கரவிட்டவினால் மாவட்டத்தில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் எழுத்து மூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சீருடையில் இலக்கத் தகடுகள் பொருத்தாமல் பொலிஸ் கொன்ஸ்டபிள்கள் வெளியே உலாவுவதால் மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் ஏற்பட்டுள் ளது. இது குறித்து மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன். செல்வராசா, சீ.யோகேஸ்வரன், பா. அரியநேத்திரன் ஆகியோரால் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு தெரியப்படுத்தப்பட்டதை அடுத்தே இந்த உத்த ரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

# பேஸ்புக்கில் வதந்திகள்

நாட்டின் தற்போதைய நிலை குறித்து பேஸ் புக்கில் போலியான கணக்குகள் மூலம் பொய்யான வதந்திகள் பரப்பப்பட்டு வருவதாக இலங்கை கணினிப் பிரிவின் அவசரப் பொறுப்புக் குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறான போலிக் கணக்குகள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவசரப் பொறுப்புக் குழுவின் பிரதம பொறியி யலாளர் ரோஹன பல்லிய குருஹே தெரிவித்துள்ளார். (வ)

# பாலியல் ஊக்க மருந்து பாவனை அதிகரிப்பு

பாாலியல் ஊக்க மருந்துப் பாவனை அண்மைக்காலமாக இலங்கையில் அதிகரித்து வருவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தின் பிரதம வைத்திய அதிகாரி வைத்தியர் சாந்த ஹெட்டிஆராய்ச்சி இதனைத் தெரிவித்துள்ளார். பாலியல் ரீதியான குறைபாடுகள் இல்லாதவர்களும் இந்த மருந்து வகை களைப் பயன்படுத்துகின்றனர். வைத்தியர்களின் ஆலோசனையின்றி தனியார் மருந்தகங்களில் இந்த மருந்துகள் பெற்றுக் கொள்ளப்படுவதால் பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (வ)


## வேலணை பிரதேச சபை- வேலணை
# கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்குதல் : 25.08.2011 முதல் 07.09.2011 பிற்பகல் 3 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளுதல் : 09.09.2011 நண்பகல் 12 மணிவரை
கேள்வி திறக்கும் காலம் : 09.09.2011 பிற்பகல் 1 மணி

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்பிப்பத்திரப் பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| அல்லைப்பிட்டி கடற்கரை வீதி புனரமைப்பு - அல்லைப்பிட்டி | 12150.00 | 840.00 | C/10 |
| அல்லைப்பிட்டி உப அலுவலக திருத்தம் | 15500.00 | 840.00 | C/09 |

மீள் கேள்வி அறிவித்தல்

| வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்பிப்பத்திரப் பணம் (வற் உட்பட) | இக்ராட் பதிவுத் தரம் |
|---|---|---|---|
| நவக்கைவீதியில் பாலம் அமைத்தல் - வேலணை | 22900.00 | 840.00 | C/09 |
| கழிவகற்றும் எல்லைச்சுவர் அமைத்தல்- நயினாதீவு | 7500.00 | 840.00 | C/10 |
| நயினாதீவு இறங்குதுறையில் மலசலகூடம் அமைத்தல்- நயினாதீவு | 4100.00 | 840.00 | C/10 |
| வாகனத்தரிப்பிடம் அமைத்தல்- உப அலுவலகம் நயினாதீவு | 10500.00 | 840.00 | C/10 |
| குறிகாட்டுவானில் மலசலகூடக்குழி அமைத்தல் - புங்குடுதீவு | 1300.00 | 840.00 | C/10 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் இக்ராட் தரத்துக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து எம்மால் கோரப்படுகின்றன.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளை செயலாளர், வேலணை பிரதேசசபை, வேலணை என முகவரியிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விவரத்தைக் குறிப்பிட்டு எமது அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும். அல்லது பதிவுத்தபாலில் எமக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மூன்றாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும். மேலதிக விவரம் தேவைப்படுவோர் அலுவலக நேரத்தில் எமது அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி திறக்கும் போது கேள்விக்காரரோ அல்லது அவர் சார்பான பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

பிரதேச சபை
வேலணை.
22.08.2011

கெஜரெத்தினம் தவராசா
செயலாளர்,
பிரதேச சபை - வேலணை.

(சி/3263)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பேராசிரியர் கந்தையா குணரத்தினம் தங்கப்பதக்கம்

பேராசிரியர் க. குணரத்தினம் தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 06.10.2010 க்கு பின்னர் பட்டம்பெற்ற தூய, பிரயோக விஞ்ஞான பட்ட மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை: எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் விஞ்ஞானம், விவசாயம் மற்றும் பிரயோக விஞ்ஞானத்தில் நான்கு வருட இளமாணிப் பட்டம் பெறவிருக்கும் முதலாம் அல்லது இரண்டாம் (மேற்பிரிவு) வகுப்புக்களில் சித்தியடைந்தவர்கள்.

விண்ணப்பப்படிவங்களை கீழ்க் காணும் முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. சிரேஷ்ட உதவிப் பதிவாளர், வவுனியா வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைகலைக்கழகம், வவுனியா
3. w.w.w.jfn.ac.lk இணையத்தளம்

முடிவு திகதி: 09.09.2011

சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காத தெளிவற்றதும் பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவு திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர் (3251) (45)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## பேராசிரியர் அ.துரைராசா தங்கப்பதக்கம்

பேராசிரியர் அ.துரைராசா தங்கப்பதக்கத்தினை வழங்கும் பொருட்டு 06.10.2010 க்கு பின்னர் பட்டம்பெற்ற மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமை: எதிர்வரும் பட்டமளிப்பு வைபவத்தில் பட்டம் பெறவிருக்கும் முதலாம் அல்லது இரண்டாம் (மேற்பிரிவு) வகுப்புக்களில் சித்தியடைந்தவர்கள்.

விண்ணப்பப்படிவங்களை கீழ்க் காணும் முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

1. சிரேஷ்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
2. சிரேஷ்ட உதவிப்பதிவாளர், வவுனியா வளாகம், வவுனியா
3. w.w.w.jfn.ac.lk இணையத்தளம்

விருதுகள்: பல்கலைக்கழக மட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக ஒரு பதக்கமும், பீடமட்டத்தில் சகல துறைகளிலும் சிறப்பாக செயற்பட்டமைக்காக பீடங்களுக்கு ஒவ்வொரு பதக்கமும் வழங்கப்படும்.

முடிவு திகதி: 09.09.2011

சரியான, பொருத்தமான தகவல்களை உள்ளடக்காத தெளிவற்றதும் பூரணப்படுத்தப்படாததும் மற்றும் முடிவுத் திகதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர் (3251) (45)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியனம் கேட்டீர்களா?

## குட்டி ராஜாங்கம் உங்களிடம்; பெயர் விளங்கச் செய்யுங்கள்!

பிரதேச பரிபாலனத்தைக் கையேற்றிருக்கும் மக்கள் பிரதிநிதிகளே! வணக்கம்.

மாயமான் எனத் தோற்றங்காட்டிய தேர்தலும் வந்து, மக்கள் தந்த பலத்தினால் குட்டி இராச்சியத்தின் குறுநில மன்னர்களாகவும், பிரதானிகளாகவும் வந்துள்ளீர்கள். வாழ்த்துக்கள். தேர்தல் காலத்தில் நீங்கள் தாராளமாக வாக்குறுதிகளை அள்ளி வழங்கியுள்ளீர்கள். அவற்றை ஒருதரம் மீட்டுப் பாருங்கள். அந்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றக் கூடிய வாய்ப்பான சபைகளாக உள்ளூராட்சிச் சபைகள் இல்லை என்பதைக் கண்டு கொள்வீர்கள்.

ஏற்கனவே 1981இல் வந்த மாவட்ட அபிவிருத்திச் சபைகளாலோ,1987இல் வந்த மாகாண சபைகளாலோ அதிகம் சாதிக்க முடியவில்லை. மாகாண சபைக்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்படாமையாலும், சபையின் செயற்பாடுகளுக்குத் தடைகள் ஏற்படுத்தப்பட்டமையாலும் வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சராகப் பொறுப்பேற்ற வரதராஜப் பெருமாள் மாகாண சபையை நடத்த முடியாமல் திண்டாடினார். ஒரு கட்டத்தில் தமிழீழப் பிரகடனமே செய்தார். இந்திய அனுசரணை இருந்தும் அவர் தலைமையிலான சபையால் நல்லமுறையில் செயற்பட முடியவில்லை. அதுபோல இப்போது, கிழக்கு மாகாண முதலமைச்சர் சந்திரகாந்தனும் மாகாண சபையை ஒரு உப்புச்சப்பில்லாத சபையாக விளித்து, தமது இயலாமையை வெளிப்படுத்தி இருந்தார்.

எனவே, மிகச் சிறிய அமைப்பான உள்ளூராட்சி சபைகளால் அதிகம் சாதிக்க முடியும் என எண்ணி ஏமாந்து விடாதீர்கள். அரச ஆதரவு உள்ளூராட்சி சபைகளுக்குக் கிடைக்கக் கூடிய சில வரப்பிரசாதங்கள் உங்களுக்குக் கிடைக்காமல் போகும். அதே வேளை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களாக அரச நாடாளுமன்ற உறுப்பினர்களே உள்ளனர். எனவே, நீங்கள் போடும் திட்டங்கள் திசை மாறவோ, தவிடு பொடியாகவோ கூடும்.

ஆனாலும் தளர்ந்து விடாதீர்கள். உங்களுக்கென உங்கள் சபைகளால் பேணப்படும் சபை நிதி உள்ளது. அத்துடன் எல்லா உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் உதவிகள், நிதி என்பன உங்களுக்கும் கிடைக்கும். பிரதேசத் திட்டமிடலில் உங்களது உயரிய தொலைநோக்கினை முதலில் தீர்மானியுங்கள். எதிர்காலம் கருதிய, நாளைய சந்ததிகள் பயன்பெறக் கூடிய பேண்தகு அபிவிருத்திக்குத் திட்டமிடுவது உங்களது பிரதான பணி.

வருடாந்த அபிவிருத்திகளை தேவையின் அளவுக்கு முன்னுரிமைப்படுத்துங்கள். எனது மக்கள் என்னைத் தெரிவு செய்தார்கள். எனவே, எனது வீதியைத் திருத்தித்தர வேண்டும் என்று முரண்டு பிடித்து உங்களுக்குள் சண்டையிடாதீர்கள். பாதிப்பின் அளவுக்கு முன்னுரிமையளித்து வீதிகளைத் திருத்துங்கள். பிரதேசத்தின் சுகாதார மேம்பாட்டில் கரிசனை கொள்ளுங்கள். குறிப்பாக, கழிவகற்றல் செயன்முறை கிரமமாக, ஒழுங்காக நடைபெறுவதை உறுதிப்படுத்துங்கள். உங்களது பரிபாலனத்தின் கீழ் தூய்மையான சூழலை நாம் எதிர்பார்க்கிறோம். அவ்வாறே மயானங்கள், கொல்களங்கள் ஆகியவற்றிலும் சுத்தமும் வசதிகளும் இருப்பதை எதிர்பார்க்கின்றோம்.

உங்களால் பரிபாலிக்கப்படும் சந்தைகளில் நிலவும் சீர்கேடுகளை நீக்குவதும் உங்கள் பொறுப்பாகும். அதன் மூலம் சபைக்கு அதிக வருமானம் கிடைப்பதுடன், விவசாயிகளும் நன்மையடைய முடியும். அல்லங்காடிகள் எனப்படும் இரவுச் சந்தைகளையும் நீங்கள் செயற்படுத்தலாம். வேலைகளுக்குப் போகிறவர்கள் இரவில் பொருள்களை வாங்க அவை உதவும். பல இடங்களிலும் உங்கள் சபைகளால் முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சந்தைகள் செயற்படாமல் கட்டாக்காலி ஆடுகள், நாய்களின் இருப்பிடமாக மாறியுள்ளன. அவற்றை நல்ல முறையில் செயற்படுத்த முயற்சிக்கவும். இல்லையேல் சந்தைத் திட்டத்தை மாற்றி, பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்பயிற்சி நிலையங்களாக அவற்றை உருவாக்குங்கள்.

தண்ணீர்ப் போத்தல்களால் எறிபடுவதும், தகாத வார்த்தைகளால் திட்டுவதுமான மாநகரசபையில் அரங்கேறும் அசிங்கங்கள் உங்கள் சபைகளில் இடம்பெறாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கூட்டுப் பொறுப்புள்ள சபையில் உறுப்பினர்களுக்கு அறிவிக்காமல் தலைவர் தன்னிச்சையாகச் செயற்படும் மாநகர முன்னுதாரணத்தைப் பின்பற்றாதீர்கள்.

பிரதேசத்தின் பண்பாட்டுப் பேணலுக்கு உயர் முன்னுரிமை கொடுங்கள். உங்கள் சபை எல்லைக்குள் கலாசாரப் பாரம்பரியங்கள் பேணப்படுவதற்கும், கலாசார அமைவிடங்கள் பாதுகாக்கப்படுவதற்கும் நீங்கள் அக்கறையுடன் செயலாற்ற வேண்டும். பிரதேச வளங்கள் கபளீகரம் செய்யப்படும்போது அதைத் தட்டிக் கேட்பதும், தடுப்பதும் உங்கள் பொறுப்பாகும்.

பிரதேசத்தின் காவலர்களாக இருப்பீர்கள் எனக் கருதியே உங்களிடம் குட்டி ராஜாங்கத்தை ஒப்படைத்துள்ளோம். அதைக் கூத்தாடிப் போட்டுடைக்காமல் நல்ல முறையில் பெயர் விளங்கச் செய்வது உங்கள் கைகளில்தான் இருக்கிறது.

விழிச்சான் குஞ்சு.



இலங்கைக்கான 9 புதிய தூதர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரது செயலகத்தில் அவர் முன்பாகப் பதவி ஏற்றனர். அதன் பின்னர் சந்தித்துக் கலந்துரையாடுகின்றனர்.

# ஜனாதிபதி வேட்பாளர் புலிகளுக்கு நிதி உதவி

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.24

2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட ஒரு வேட்பாளரால் விடுதலைப் புலிகளுக்கு 200 மில்லியன் பணம் வழங்கப்பட்டது. இந்தப் பணத்தில் புலிகள் கடற்படைக்கான படகுகளை கொள்வனவு செய்ததாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது சிறைச்சாலை அதிகாரிகள் அவருக்கு தடைகளை ஏற்படுத்திய போதிலும் ஊடகவியலாளர்களிடம் அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2005ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தமிழர் வாக்களிப்பைத் தடுப்பதற்காக விடுதலைப் புலிகளுக்கு 200 மில்லியன் வழங்கப்பட்டது.

இதனைப்பயன்படுத்திய விடுதலைப் புலிகள் கடற்படைக்காக படகுகளைக்கொள்வனவு செய்தனர்.

இவற்றையெல்லாம் யார் செய்தனர். சுனாமிக்காக கிடைத்த பணத்தில் 300 மில்லியனைக் கொள்ளையிட்டு வைப்பலிட்டவர்கள் யார்? மக்கள் இதனைத் தேடி விவரங்களை அறிந்து கொள்ள வேண்டும்- என்றார். (ச)

# இரு அடுக்கு பஸ்கள் மீண்டும்

கொழும்பு, ஓக. 24

இலங்கையில் இரண்டு அடுக்குப் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த போக்குவரத்து அமைச்சர் குமார் வெல்கம நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்தப் பஸ்களை இறக்குமதி செய்வது தொடர்பிலான பேச்சு அண்மையில் இடம்பெற்றதாக அவர் கூறினார்.

மகளிருக்கான பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு பெண் பஸ் நடத்துநர், சாரதிகள் விரைவில் நியமிக்கப்படுவர்.

அந்தப் பணி முடிந்ததன் பின்னரே இரண்டு தட்டு பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவது தொடர்பில் தீர்மானிப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (சி)

# அவதூறுகளைக் கண்டு அஞ்சப்போவதில்லை இப்படிக் கூறுகிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஓக.24

அவதூறுகளைக் கண்டு அஞ்சப் போவதில்லை. சிலர் எனக்கு எதிராக சேறு பூசி வருவதாகவும் இவ்வாறான நடவடிக்கைகளினால் தாம் குழப்பமடையப் போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

திவுலபிட்டியவில் உள்ள விஹாரை ஒன்றில் மத வழிபாடுகளில் கலந்துகொண்ட போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

தினமும் காலையில் பௌத்த மத கருத்துக்களை வாசித்து பொறுமையைக் கற்றுக் கொண்டுள்ளேன்.

பௌத்த மத சிந்தனைகளை உள்ளடக்கிய தர்மசிந்தனைப் புத்தகத்தில் உள்ள கருத்துக்கள் வாழ்க்கையின் ஆழத்தை எளிமையாக விளக்கியுள்ளது.

வேறு ஓர் அரசியல் கட்சி தம்மை விமர்சனம் செய்தால் அதற்குப் பதிலளிப்பது பயனுள்ளதாக அமையும் எனினும், சொந்தக் கட்சியின் உறுப்பினர்களே விமர்சனம் செய்யும்போது அதற்குப் பதிலளிப்பது பொருந்தாது- என்றார். (ச)

# தெரிவுக்குழுவின் யோசனைகளை ஜனாதிபதி ஏற்றேயாக வேண்டும்

## அமைச்சர் வாசுதேவ வேண்டுகோள்

கொழும்பு, ஓக.24

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்வைக்கும் யோசனைகளை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

-இவ்வாறு தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பு என்.எம். பெரேரா ஞாபகார்த்த நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் திட்டத்தில் அரசு ஈடுபட்டுள்ள நிலையில், காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது என்று ஜனாதிபதி பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரிவித்திருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டி ஊடகவியலாளர்கள் இதன்போது கேள்விகளை எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கும் விடயத்தில் அரசு ஈடுபட்டுள்ளது.

இந்தத் தெரிவுக்குழுவுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்காமல் விலகியிருக்க முடியும். அவ்வாறு விலகியிருப்பவர்கள் யதார்த்தத்தை அறிந்துகொள்ள முடியாதவர்கள் என்ற பிரிவினராகவே கருதப்படுவர்.

இதேவேளை, ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பில் குழப்பமடையத் தேவையில்லை.

எனினும் அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து அமைக்கப்படவுள்ள தெரிவுக்குழு முன்வைக்கும் யோசனைகளை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ளவே வேண்டும். - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன
24 ஒகஸ்ட் 2011 புதன்கிழமை

# வீட்டினுள் நுழைய முற்பட்ட மர்ம நபரால் பேசாலையில் மக்கள் - கடற்படை முறுகல்

மன்னார், ஒக. 24

மன்னார் பேசாலைக் கிராமத்தில் கடற்கரைப் பகுதிக்கு அருகிலுள்ள வீடு ஒன்றினுள் மர்ம நபரொருவர் நுழைய முற்பட்ட சம்பவத்தால் பொதுமக்களுக்கும் அந்தப் பகுதிக் கடற்படையினருக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. வெள்ளை நிற ரீசேட் அணிந்த நபரொருவர் குறித்த வீட்டினுள் நுழைய முற்பட்டார். அப்போது அங்கு திரண்ட கிராம மக்கள் அவரைத் துரத்திச் சென்றனர். அவர் அந்தப் பகுதியிலுள்ள கடற்படைக் காவலரணுக்குள் நுழைந்து மறைந்து விட்டதாகத் தெரிகின்றது.

இதனைக் கண்ட கிராம மக்கள் அந்தக் காவலரணை முற்றுகையிட்டதோடு உட்பிரவேசிக்கவும் முற்பட்டனர். அப்போது மக்களுக்கும் கடற்படையினருக்குமிடையில் முறுகல் நிலை தோன்றியது. பின்னர் மக்கள் கற்களால் காவலரணைத் தாக்கினர். இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு இராணுவத்தினரும், பொலிஸாரும் வரவழைக்கப்பட்டனர். கடற்படையினர் வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். பின்னர்


காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில்

பொதுமக்களைத் துப்பாக்கியாலும், தடிகளாலும் கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

இதனால் பெண்கள், சிறுவர்கள் உட்படப் பொதுமக்களில் பலர் காயமடைந்தனர். சம்பவத்தைக் கேள்விப்பட்ட மன்னார் ஆயர் இராயப்பு யோசேப் உடனடியாக அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்.

பின்னர் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் மணி ஒலிக்கப்பட்டது. மக்கள் அனைவரும் அங்கு சென்றனர்.

இதனால் நிலைமை சற்று வழமைக்குத் திரும்பியது. கடற்படையினரின் தாக்குதலில் கடுமையாகக் காயமடைந்த ஒருவர் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

பேசாலைக் கிராமத்தில் பொலிஸாரும், இராணுவத்தினரும் குவிக்கப்பட்டுப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

(க-601)

## இராணுவத்தினர் குவிப்பு

மன்னார் பேசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஏற்பட்ட மோதல் சம்பவங்களைத் தொடர்ந்து நேற்று முன்தினம் காலை நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் இந்தக் கிராமத்தில் குவிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பேசாலையில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு மனித நடமாட்டமின்றிக் காணப்பட்டன. இதேவேளை கடற்படையினருக்கும் பொதுமக்களுக்குமிடையில் இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட மீனவர்களைக் கடற்படையினர் தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-601)

# வதந்திகள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

## மக்கள் தொடர்பாடல் பொலிஸ் அதிகாரி கூறுகிறார்

கிளிநொச்சி, ஒக. 24

கிளிநொச்சி மாவட்டத்திலும் வதந்திகள் பரப்பப்பட்டு மக்கள் மத்தியில் பீதிகளை ஏற்படுத்தும் வகையில் சில விசமிகள் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விடயத்தில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும். இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் நிலையத்தின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி எம்.எல். அரிப்டீன் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் நடைபெற்ற இடம்பெயர்சேவையின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போது அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். நாட்டின் பல்வேறு இடங்களிலும் கிறிஸ்மனிதன் கிறிஸ்பூதம் என வதந்தி பரப்பப்பட்டு வருகின்றன.

இதேபோல் கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் வதந்திகளும் பரவிவருகின்றன.

ஓர் அமைதியான-சூழலில் இருக்கின்ற இப்பகுதி மக்களைக் குழப்பிவிட்டுப் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். இந்தவிடயத்தில் பொதுமக்கள் விழிப்பாக இருக்வேண்டும். நீண்டகால உழைப்பின்மூலம் பெறப்பட்ட இந்த அமைதியை எல்லோரும் பாதுகாக்க வேண்டும்.

சந்தேக நபர்கள் யாரையாவது கண்டால் உடனடியாக எமக்குத்தகவல் தந்தால் நாம் உரிய நடவடிக்கை எடுப்போம்.

இவ்விடயம் தொடர்பான சுற்றுநிருபம் ஒன்று தமக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்த அவர் கிளிநொச்சி கனகபுரப் பகுதியில் வீதியால் பயணித்த சிறுமி ஒருவரைக் கடுமையாகத் தாக்கிவிட்டு அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியைப் பறித்துச் சென்றுள்ளனர்.



எனவே மக்கள் வதந்திகளை நம்பாது விழிப்புடன் இருக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

(க-6)

## சேதனப் பசளை தயாரிப்பதற்கான பயிற்சிகள்

முல்லைத்தீவு, ஒக. 24

ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையப் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளின் நன்மை கருதி சேதனப் பசளை தயாரிப்பதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதன் முதற் கட்டமாக கற்சிலைமடு, பண்டாரவன்னி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்குப் பண்டாரவன்னி கமக்கார அமைப்பினரின் ஒழுங்குபடுத்தலின் கீழ் பயிற்சிகள் வழங்கப்பட்டன. ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் அமிர்தலிங்கம் தலைமையில் கற்சிலைமடுப் பாடசாலையில் இந்தப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு சேதனப்பசளை தயாரிப்பதற்கான உபகரணங் களும் வழங்கப்பட்டன.

பயிற்சிகளை முத்துஐயன் கட்டு விவசாயப் போதனாசிரியர் கபிலன், ஒட்டுசுட்டான், கற்சிலைமடு விவசாயப் போதனாசிரியர் சிவகுமார் ஆகியோர் வழங்கினர்.

(க-500)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 24 | 25 |
| ★ | ★ |
| 11 | 07 |
| ★ | ★ |
| 1959 | 2011 |



### அமரர் நாராயணன் கமலாசினி (கமலா)

பாசத்தின் உறைவிடமே பண்பின் ஒளிவிளக்கே
உற்றவர் சுற்றமும் கூடிக் கழித்த உறவுகளை
கைவிட்டுச் சென்றதேனோ பிரிவால் வாடி நிற்கின்ற
உள்ளங்கள் தேற்ற மொழியின்றி
தவிக்கிறதே - நின் உறவுகள் அடிதேடித் துடிக்கிறதே

கடந்த 25.07.2011 இறைவனடி சேர்ந்த அன்புத்தாயின் மரணச் சடங்கின் போது எமக்கு உதவி செய்து உறுதுணையாய் நின்று மற்றும் பலவழிகளிலும் எமக்கு உதவி செய்து கண்ணீர் அஞ்சலி, தொலைபேசி, தந்திகள் மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் எம்முடன் துயர் பகிர்ந்த உற்றார் உறவினர், நண்பர்கள் அயலவர்கள் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (24.08.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

115, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.

(சி/3271)


### தேவை

கொக்குவில் மேற்கில் உள்ள தையல் கடை ஒன்றுக்கு பெண்ணுக்கான ஆடைகள் சரியான முறையில் வெட்டி தைக்கக் கூடிய பெண்கள் தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 0770427914

### வாகனம் விற்பனைக்கு

62-2543 - சுப்பர் Custom - Toyota LH 110 1992 மொடல் WP.PB 7374-1998 Mazda Browny ஜெஸ்ட் லோ D/Ac Full Seat, 5 Door. 1.9 WP.PB 6215, 5 Door, D/Ac, நிசான் வெனட் 2001 மொடல் 2.5. தொடர்பு- 0727360360. உடனடி விற்பனைக்கு.

### விற்பனைப் பிரதிநிதி தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்பாணத்தில் உள்ள வியாபார நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதி தேவை (Sales Rep)
வயது: 20-30, Motor Bike
அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
கீழ்க்காணும் முகவரிக்கு உங்கள் தொலைத்தொடர்பு இலக்கத்துடன் விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்கவும்.
RM MULTI TRADE
No.40, SCHOOL AVENUE, DEHIWALA.
E.mali- toramanan @ hotmail. Com


## துயர் பகிர்கின்றோம்

கரவெட்டி கமநல சேவை நிலையத்தில் பெரும்பாக உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி விசாலாட்சி தனபாலசிங்கத்தின் பாசமிகு கணவர்



### மாணிக்கம் தனபாலசிங்கம்

ஜேர்மனியில் 17.08.2011 அன்று காலமாகிவிட்டார். அவர்களின் மறைவால் ஆழ்ந்த துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு கரணவாய் வடக்கு கமக்கார அமைப்பு தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

தகவல்:
விவசாய சம்மேளனம்,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி இல்லாத குடும்பங்களுக்கும் இந்திய அரசின் வீட்டுத் திட்டங்கள்

வவுனியா; ஓக. 24

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தின் விசுவமடு மேற்கில், தொட்டி என்னும் இடத்தில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 26 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தில் காணி இல்லாத வறுமைக் கோட்டின் கீழுள்ள குடும்பங்களே இணைக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபர் ஜெயகாந் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு வருவதைத் தொடர்ந்து இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். யுத்தத்தால் வீடுகள் சேதமடைந்துள்ளதால் இவர்களுக்கான வீட்டுத் திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் விசுவமடு மேற்கு தொட்டி என்னும் இடத்தில் மீள்குடியமர்ந்த மக்களுக்காக முதற்கட்டமாக 26 வீடுகளைக் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வீட்டுத் திட்டத்துக்கான காணியை அரசு வழங்கியுள்ளது. ஒவ்வொரு வீடும் 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அரை ஏக்கர் காணியில் அமைக்கப்பட்டு வருகிறது.

கொத்தணி முறையிலான இந்த வீட்டுத் திட்டத்தில் இரு குழாய்க் கிணறுகள் அரசினால் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் விளையாட்டு மைதானம் நூல் நிலையம், வீதிகள் உட்படப் பொது வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தில் காணி இல்லாதவர்கள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-115)

## குரங்குகளின் தொல்லையால் விவசாயிகள் பாதிப்பு

மல்லாவி, ஓக. 24

அதிகரித்துக் காணப்படும் குரங்குகளின் தொல்லையால் மல்லாவிப் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாயிகள் பெரியளவில் நட்டத்தை எதிர்கொள்கின்றனர் என்ற தெரிவிக்கப்படுகின்றது.

நெல் வயல்களில் நெற்கதிர்களை நாசம் செய்யும் குரங்குகள் மேட்டுநிலப்பயிர்களையும் விட்டுவைக்கவில்லை, கத்தரி, வெண்டி, பயற்றை போன்ற மரக்கறி வகைப் பயிர்களைக் குரங்குகள் நாசம் செய்து வருகின்றன. அத்துடன் முருங்கை, வாழை, பப்பாசி, மாமரங்கள் போன்றவற்றையும் இவை துவம்சம் செய்கின்றன.

மல்லாவிப் பிரதேசம் முழுவதும் சுமார் 20 குழுக்களாகக் குரங்குகள் வலம் வருகின்றன. இவை வீட்டுக் கூரைகளின் மீதேறி அவற்றைச் சேதப்படுத்துவதுடன் வீடுகளுக்குள் புகுந்து உணவுப் பொருள்களையும் திருடிச் செல்கின்றன.

இவற்றைக் க்ட்டுப்படுத்துவதற்கு இங்குள்ள மக்கள் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்ட போதும் அவை பயனளிக்கவில்லை. குறிப்பாக வெடிகளுக்குக் கூட அவை அஞ்சாத நிலையே உள்ளது. வெடிகளைக் கொளுத்திப் போடும்போது இவை அலட்சியமாக இருக்கின்றன. இதனால் என்னசெய்வதென்று புரியாது மக்கள் விழிக்கின்றனர்.

மேலும் குரங்குகளைத் துரத்தும் போது அவை மனிதர்களைத் திரும்பித் துரத்திச் செல்கின்றன. இதனால் மக்கள் அச்சத்துடன் உள்ளனர்.

முன்னர் போன்று விவசாயிகள் கட்டுத் துப்பாக்கிகளை வைத்திருப் பதற்கான அனுமதியும் தற்போது வழங்கப்படுவதில்லை. இதனால் குரங்கு, பன்றி, யானை போன்ற விலங்குகள் தமது விருப்பம் போல நாசத்தை விளைவித்து வருகின்றன. பல்வேறு துயரங்களுக்கு முகம் கொடுத்து அல்லல்கள் அனுபவித்த இந்த மக்கள் தற்போது இத்தகையதொரு நிலையை எதிர்கொண்டு வருகின்றனர்.

(க-425)

## வன்னி மாணவர்களை அச்சுறுத்தி இருளில் விரட்டிய கிறீஸ் பூதங்கள்

முல்லைத்தீவு, ஓக. 24

நாட்டைக் கலக்கி வரும் கிறீஸ் பூதங்களால் மட்டக்களப்புப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வன்னி மாணவர்களும் பாதிப்படைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 17 ஆம் திகதி இரவு இந்த மாணவர்கள் பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்த போது மர்ம மனிதர்கள் சிலர் மின்சாரத்தைத் துண்டித்து விட்டு மரங்களினால் ஏறி ஓடுகளைப் பிரித்து உள்ளே இறங்க முயன்றனர். அப்போது பயத்தினால் மாணவர்கள் கூக்குரலிட்டதால் அந்த நபர்கள் ஓடித்தப்பி விட்டனர்.

இதனால் அச்சமடைந்த இந்த மாணவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வந்து விட்டனர். இதனால் இவர்களின் கல்வி பாதிப்படைந்த நிலையிலுள்ளது.

இந்த நாட்டிலே சிறுபான்மை மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதாகப் பலரும் கருத்து வெளியிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-500)

### உளத்துக்கு விருத்தி...



அவசியமான செயற்பாடு: கிளிநொச்சி, ஸ்கந்தபுரம் இல.2 பாடசாலையில் நடைபெற்ற மாணவர்களுக்கான உளவிருத்திச் செயற்பாட்டில் கலந்து கொண்ட பாடசாலை அதிபர், ஆசிரிய ஆலோசகர்கள், அந்தப் பகுதி இராணுவ அதிகாரி ஆகியோர் காணப்படுகின்றனர். (410)

## விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்தி வேலைகள்

முல்லைத்தீவு, ஓக. 24

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய விளையாட்டு மைதானம் அபிவிருத்தி செய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் மைய மைதானமாக விளங்கப்போவதாகத் தெரிய வருகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சகல வளங்களையும் உள்ளடக்கிய விளையாட்டு மைதானமொன்று இல்லாததால் விளையாட்டு வீரர்கள் தமக்கான பயிற்சிகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இதனால் சகல வளங்களையும் உள்ளடக்கிய மைதானமொன்றை அமைத்து வழங்குமாறு பலரும் வேண்டுகோள் விடுத்தனர். இதனைத் தொடர்ந்து ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய விளையாட்டு மைதானம் தேசிய மட்டத்திலான மைதானமாகப் பொருளாதார அமைச்சினால் சிபார்சு செய்யப்பட்டு இதன் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்ட நிலையிலுள்ளன.

இதில் சகல விளையாட்டுக்களையும் உள்ளடக்கிய வெளியக விளையாட்டு அரங்குகள் அமைக்கப்படவுள்ளன.

மேலும் இந்த மைதானம் முல்லைத்தீவு மாவட்டத்தின் மைய மைதானமாகத் திகழும் என்றும் கூறப்படுகின்றது.

(க-500)

## மன்னாரில் விழிப்புக் குழுக்கள்

மன்னார், ஓக. 24

மர்ம நபர்கள் மற்றும் கிறீஸ் மனிதர்களின் அச்சத்தால் மன்னார் மாவட்டத்தின் பல கிராமங்களிலும் விழிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இளைஞர்களைக் கொண்ட விழிப்புக் குழுக்கள் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டு இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து இரவு நேரங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் இந்த இணைப்புக் குழுக்களுக்கு இராணுவத்தினராலும் பொலிஸாராலும் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

இரவு நேரங்களில் இளைஞர் குழுக்கள் கிராமங்களுக்குள் சென்று புதிதாக யாராவது நடமாடுகின்றார்களா அல்லது சந்தேகத்துக்கிடமான முறையில் எவரும் உள்ளார்களா என்பதை அவதானித்து வருகின்றனர்.

இதனால் வீடுகளிலுள்ள பெண்கள் சற்று நிம்மதியடைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க-601)

# பேராறு நீர்த்தேக்கத் திட்டத்தால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நட்டஈடு

### வவுனியா அரச அதிபர் உறுதியளித்தார்

வவுனியா, ஓக. 24

பேராறு நீர்த்தேக்கத் திட்டம் முன்னிறுத்தப்படும் போது அதனால் பாதிக்கப்படும் 50 விவசாயிகளுக்கும் உரிய நஷ்டஈட்டினை உரிய காலத்தில் வழங்கிய பின்னரே திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

இவ்வாறு வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் உயர் வலயக் குடிநீர்த் திட்டத்தின் முன்னோடிக்கூட்டம் கடந்த 16 ஆம் திகதி வவுனியா மாவட்ட அரச அதிபர் தலைமையில் செயலக மண்டபத்தில் இடம் பெற்றது.

இதில் கலந்து கொண்ட வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மேலும் கூறுகையில்;

பேராறு நீர்த்திட்டத்தினால் விவசாயிகளின் நிலம் பாதிக்கப்படும் போது அதற்கு இணையான நேர்த்தியான மாற்றுக் காணிகளையும் - ஏனைய விசேட உட்கட்டுமான தேவைகளையும் மேலதிகமாக வழங்கி உதவுவேன்.

என்னைப் போலவே - உங்களையும் பார்க்கிறேன். இதனால் எந்த ஒரு விவசாயியையும் நான் பாதிக்கப்படவிட மாட்டேன்.

வவுனியா மாவட்டத்தில் நிலத்தடி நீர்ப் பாவனையினால் பெரும்பாலானவர்களின் சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதைக் கொழும்பு மற்றும் வவுனியா வைத்தியசாலைகளின் அறிக்கைகள்-எனக்குத் தெளிவுபடுத்தியுள்ளன.

ஆனால் பேராற்று குடிதண்ணீர் திட்டத்தை முன்வைக்கும் போது காணி பாதிக்கப்படும் நிலைமை விவசாயிகளுக்கு ஏற்படும்.

இந்தப் பாதிப்பினால் நஷ்டமடையும் விவசாயிகளுக்கு அதே தரத்திலான காணி பிரதேச செயலர் ஊடாக வழங்கப்படும்.

இன்று 8 லட்சத்து 70 ஆயிரம் குடிதண்ணீர் போத்தல்கள் ஒரு மாதத்துக்கு வவுனியாவில் நுகரப்படுகின்றன.

நாங்கள் இந்தப் பெரிய திட்டத்தை உடன் கைவிட முடியாது. குறுகிய சிந்தனைகளைத் தவிர்த்து- பரந்த சிந்தனை அடிப்படையில் இதனை நோக்குவோம்.

பேராறு குடிதண்ணீர்த் திட்டத்தை முன்னிறுத்தும் போது ஏனைய விசேட தீர்மானங்களையும் நான் விவசாயிகளுக்கு வழங்கி உதவுவேன்.

பேராறு அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபையின் உதவிப் பொதுமுகாமையாளரும் யாழ்-கிளிநொச்சி குடிதண்ணீர் விநியோகத் திட்டப் பணிப்பாளருமான எந்திரி தி.பாரதிதாசன் தெரிவித்ததாவது:

[illegible] வழங்கும்போது அந்தக் காணிக்கான மாற்றுக் காணியை அரச அதிபரும் பிரதேச செயலரும் வழங்குவது என்பது இங்கு உறுதியாகிவிட்டது.

பாதிக்கப்படும் விவசாயக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு வேலைகள் வழங்கப்படும். அத்துடன் சாரதி மற்றும் கணினிப் பயிற்சி வழங்கப்படும் என்றார்.

அத்துடன் மேலதிகமாக மின்சாரம், வீதி, சனசமூக நிலையம், பொதுநோக்கு மண்டபம் என்பவற்றை அமைத்துத்தந்த பின்னரே திட்டம் முன்னிறுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதில் கலந்துகொண்ட வவுனியா பிரதேச செயலர் ஏ.சிவபாலசுந்தரன் கருத்துக் கூறுகையில்;

பேராறு திட்டத்தினால் காணிகள் உள்வாங்கப்படும் போது விவசாயிகளுக்குக் கற்குளம், மேற்குளம், விளாத்திக் குளம் போன்ற பிரதேசங்களில் தரமான மாற்றுக் காணி வழங்கிய பின்னரே திட்டம் ஆரம்பிக்கப்படும்.

இதனைவிட நானும் அரச அதிபரும் உறுதியளித்தது போன்று உங்களை எக்காலத்திலும் பாதிக்கப்பட விடமாட்டோம் - என்றார்.

இதில் 50இற்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தமது நஷ்ட ஈட்டுக் கோரிக்கைகளைப் பலமாக முன்வைத்தனர்.

இதில் மாற்றுக் கருத்துக்கு இடமின்றி அனைத்துத் திட்டங்களும் உள்வாங்கப்பட்டு உதவியளிக்கப்படும் என அரச அதிபர் மேலும் உறுதியளித்தார்.

இந்தக் கூட்டத்தில் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், தேசிய நீர்வழங்கல் சபை அதிகாரிகள், காணித்திணைக்கள அதிகாரிகள், திட்டத்தின் தலைவர்கள் மற்றும் பொது மக்கள், எனப் பலரும் கலந்து ஆக்கபூர்வமான கருத்துக்களையும் தமது தேவைகள் - பாதிப்புக்களையும் விலாவாரியாகத் தெரிவித்தனர்.

(க-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுரையீரல் புற்றுநோயைக் கண்டறியும் மோப்ப நாய்கள்



மனிதர்களின் சிறந்த நண்பர்களாக நாய்கள் திகழ்கின்றன. இவை தங்களது எஜமானர்களுக்கு மிகவும் நன்றியுடனும், விசுவாசமாகவும் உள்ளன.
எனவே நாய்களைக் கொண்டு மனிதர்களின் நுரையீரல் புற்று நோயைக் கண்டுபிடிக்க முடியும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.
ஜேர்மனியில் உள்ள ஸ்கில்லர் ஜோக் வைத்தியசாலையின் நிபுணர்கள் நாய்களின் மூலம் ஆய்வு மேற்கொண்டனர். அவை தனது மோப்ப சக்தி மூலம் மனிதர்களின் மூக்கு வழியாக வெளியேறும் சுவாசத்தின் மூலம் நுரையீரல் புற்று நோயைக் கண்டறிய முடியும் எனக் கண்டுபிடித்துள்ளனர்.
இதன் மூலம் நோய் அறிகுறி தொடங்கும் நிலையில் உள்ள 71 சதவீதமானோரின் நுரையீரல் புற்றுநோயைத் தெரிந்துகொள்ளமுடியும்.
அதற்கு முன்னோடியாக புற்றுநோய் சிகிச்சைக்கான மாத்திரைகளை மோப்பம் பிடிக்கச் செய்து பயிற்சி அளித்தனர். நுரையீரல் புற்று நோயைக் கண்டுபிடிக்க 2 ஜெர்மன்ஷெப்பர்டு, ஆஸ்திரேலியன் ஷெப்பர்டு மற்றும் லாப்ராடர் ரக நாய்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றனர்.

# விரல் வடிவில் சவர்க்காரம்



விரல் வடிவில் சவர்க்காரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதைப் பார்க்கும் போது உங்களுக்கு உண்மையான விரல்கள் மாதிரி இருக்கும். ஆனால் இவை விரல்கள் இல்லை. இந்த சவர்க்காரம் நல்ல வாசனையாகவும் இருக்கும்.

# நீண்ட அலகுடன் கூடிய கோழிகளை உருவாக்கி ஆய்வாளர்கள் சாதனை



பொதுவாகக் கோழிகளுக்கு சிறிய அலகு இருக்கும். அதன் மூலம் உணவை அவை உட்கொள்கின்றன.

ஆனால் ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயிரியல் பரிணாம வளர்ச்சி விஞ்ஞானி அர்காத் அபாஷ்னேங் தலைமையிலான நிபுணர் குழுவினர் புதுவிதமாக ஆய்வு மேற்கொண்டனர்.

கோழிக் கருவில் உள்ள டி.என்.ஏ மூலக் கூறில் சிறிது மாற்றம் செய்து முதலையின் நீளமான தாடை போன்ற அலகை உருவாக்கியுள்ளனர்.

கோழி முட்டையில் சிறிய துவாரமிட்டு அதற்குள் சிறிய பாசிமணி அளவிலான புரோட்டீனை செலுத்தினர். அதைத் தொடர்ந்து முட்டைக் கருவின் வளர்ச்சியைக் கண்காணித்தனர். 14 நாள்களுக்குப் பிறகு கோழியின் அலகு முதலையின் தாடை போன்று நீளமாக வளர்ந்தது.

பறவைகள் மற்றும் விலங்குகளின் உடற்கூறு இயல் குறித்து அறிய இந்த ஆய்வு மேற்கொள்ளப் பட்டதாக விஞ்ஞானி அபாஷ்னோவ் தெரிவித்தார்.

இந்தச் சோதனை சுமார் 6 1/2 கோடி ஆண்டு பரிணாம வளர்ச்சி வரலாற்றில் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

# உயிரினங்கள் முதலில் செவ்வாய் கிரகத்தில் தோன்றின

ஆஸ்திரேலியாவின் மேற்குப் பகுதியில் உள்ள பில்பாரா மாகாணத்தின் கடைகோடி பகுதியில் ஸ்டெரெலி ஏரி உள்ளது. அங்கு சுமார் 3 கோடியே 40 லட்சம் ஆண்டுக்கு முந்தைய புதை பொருள்கள் கண்டெடுக்கப்பட்டன.
வெஸ்டர்ன் அவுஸ்திரேலியா பல்கலைக்கழகம் மற்றும் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக நிபுணர்கள் அவற்றை ஆய்வு செய்தனர்.
அப்போது அதில் நல்ல முறையில் வளர்ச்சி அடைந்த நோய் ஏற்படுத்தும் பாக்டீரியாக்கள் இருந்தன.
ஆனால் புதை பொருள்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட இந்த பக்டீரியாக்கள் 3 கோடி 40 லட்சம் ஆண்டுக்கு முன்பு வாழ்ந்தவை. அப்போது பூமியில் உயிர் வாழ்வதற்கான ஒட்சிசன் இருக்கவில்லை. கடல் நீரால் மட்டுமே பூமி சூழப்பட்டு இருந்தது.
உயிர் வாழக்கூடிய வெப்ப சூழ்நிலை இல்லை. எனவே உயிரினம் செவ்வாய்கிரகத்தில் தான் தோன்றியிருக்க வேண்டும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.
புதை படிவம் கண்டெடுக்கப்பட்ட பல்பாரா பகுதி செவ்வாய் கிரகத்தில் இருந்து விழுந்த வண்டல் மண் சார்ந்த பாறைகளாக இருக்கலாம்.
அவை மண்ணில் புதையுண்டு படிவங்களாக மாறியிருக்கின்றன. என்று கருதப்படுகிறது.

# 2000 ஆண்டுகளுக்கு முன்னைய மரச்சாலை கண்டுபிடிப்பு

இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் சுமார் 2 ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த அயர்ன் ஏஜ் எனப்படும் மரச்சாலை இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இந்தச் சாலை மிகவும் புராதனமானதாக இருந்தாலும் இதில் உள்ள வேலைப்பாடுகள் நவீன காலத்துக்குரிய கலை வேலைப்பாடுகளுடன் உள்ளன.
க்ளெட்ஸ்டென் அருகே வெவ்னே நதிக்கு அண்மையில் இந்த மரச்சாலை அமைக்கப்பட்டிருந்தது.
இந்தச் சாலை 13 அடி அகலமும், 1600 அடி நீளமும் கொண்டதாக உள்ளது.
இதன் மீது அடர்ந்த பாசிகள் படிந்திருந்தன. அதுவே அதற்குப் பாதுகாப்பாக இருந்துள்ளது.
மொத்த சாலையையும் ஆராய்ச்சியாளர்கள் சிறிதும் சேதமின்றிக் கவனமாக அகழ்ந்தெடுத்தனர்.
இந்தச் மரச்சாலை ஐஸ்னி பழங்குடியினர் காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது.
நார்ஃபோல்க் பகுதிக்குச் செல்ல வர்த்தகர்கள் இந்த வீதியைப் பயன்படுத்தி இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இது குறித்த தகவல்களைச் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
இதன் மூலம் அங்குள்ள பெரிய மரங்களின் வயது கணக்கிடப்பட்டு அதன் மூலம் இதர தகவல்களைத் துல்லியமாக அறிந்து கொள்ள முடியும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

# எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்த விரைவில் தடுப்பூசி



எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்த இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இது தொடர்பாக மருத்துவ அதிகாரிகள் பல்வேறு வித ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.
இப்போது நம்பிக்கைதரும் வகையில் விஞ்ஞானிகள் ஒரு தகவல் வெளியிட்டுள்ளனர். விரைவில் எய்ட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த தடுப்பூசியை உருவாக்கி விடுவோம் என்று அறிவித்துள்ளனர்.
மனிதன் உடலில் இயற்கையாகவே நோய் எதிர்ப்பு சக்திகள் உள்ளன. இதில் அதிக திறன் கொண்ட 17 மூலக் கூறுகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இதை மேலும் மேம்படுத்துவதன் மூலம் எய்ட்ஸ் நோயையும் மனிதர்களுக்கு ஏற்படாமல் தடுத்து விடலாம் என்று அவர்கள் கூறியுள்ளனர். எனவே இந்த மூலக்கூறுகளை மேலும் வீரியமாக்க தடுப்பூசி மருந்தை உருவாக்கி வருகின்றனர். விரைவில் இந்த மருந்து கண்டுபிடிக்கப்பட்டு பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்று அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.
இதனால் எய்ட்ஸ் நோயை முன்கூட்டியே தடுத்து முற்றிலும் விரட்டிவிடலாம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த தகவல் மருத்துவ அறிக்கை ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு.கிராமவாசிகள் விவரம் பொலிஸார் திடீரெனத் திரட்டல்

மட்டக்களப்பு, ஓக. 24

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சில கிராமங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை முதல் நண்பகல் வரை பொலிஸாரால் வீடுகளில் தங்கியிருப்போரின் விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பதிவு நடவடிக்கைகள் வட்டுவான், ஈரளகுளம், செங்கலடி, களுதாவளை, முனைக்காடு, மகிழடித்தீவு உட்பட 10 இற்கு மேற்பட்ட கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொலிஸாரும் இராணுவத்தினரும் ஞாயிற்றுக்கிழமை காலை இந்தக் கிராமங்களில் பரவலாகக் காணப்பட்டனர். அதனால் ஏற்கனவே மர்ம மனிதன் பீதிக்குள்ளாகியுள்ள மக்களிடையே அச்சமும் பதற்றமும் காணப்பட்டன.

இந்த விடயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. அப்போது பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர், இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு மக்கள் மத்தியில் குடிகொண்டுள்ள அச்சநிலை குறித்துத் தாம் விளக்கினார் என நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

''இந்தச் சம்பவம் சுற்றிவளைப்போ, தேடுதலோ அல்ல. வீடுகளில் தங்கியிருப்போர் விவரங்கள் மட்டுமே திரட்டப்படுகின்றன. இதுபற்றி மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை'' எனத் தனக்குப் பதில் அளிக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார்.

போர் முடிவடைந்து அமைதிச் சூழல் நிலவுகிறது என அரசு தெரிவிக்கும் இந்தத் தருணத்தில் எதற்காகத் தமிழ் மக்களின் விவரங்களை இராணுவத்தினர் திரட்டுகின்றனர் என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. (ச)

# ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு காத்தான்குடி மீடியா போரம் கண்டனம்

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் ரீ.எல். ஜௌபர்கான் மீது கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறது என காத்தான்குடி மீடியா போரம் அறிக்கையொன்றின் ஊடாகத் தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரியில் மர்ம மனிதனின் பீதி ஏற்பட்டு பதற்ற நிலை உருவானது. அப்போது இது தொடர்பாக செய்தி சேகரிப்பதற்காக ஊடகவியலாளர் ஜௌபர்கான் அங்கு சென்றிருந்தார்.

தாதியர் பயிற்சிக் கல்லூரிக்குள் நின்ற ஒரு சிலரினால் இவர் தாக்கப்பட்டுள்ளார். அத்துடன் அவரது வீடியோ கமெரா, ஊடக அடையாள அட்டை ஆகியவை பறிக்கப்பட்டுள்ளன.

அவர் மீது தாக்குதல் நடத்திய இவர்கள் அவரது கமெராவையும் ஊடக அடையாள அட்டையையும் திருப்பிக் கொடுத்துள்ளனர். எனினும் கமராவில் இருந்த ஒளிப்பதிவு நாடாவைப் பறித்துச் சென்றுள்ளனர்.

ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளும் அடாவடித் தனங்களுக்கு எதிராகவும் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகவும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீடியா போரம் வலியுறுத்துகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம், ஆழிப்பேரலை அனர்த்தம் ஆகியவற்றின் போது மாவட்டத் தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தமது ஊடகப் பணியைச் செய்து வந்திருக்கின்றார்கள் என்பதை சகல தரப்பினரும் உள்வாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

அவர் மாவட்டத்தின் சுதந்திர ஊடகவியலாளராக செயற்பட்டு, அனைத்து தரப்பு செய்திகளையும் பக்கச்சார்பின்றித் தான்சார்ந்த ஊடகங்களுக்கு வழங்கி வருகின்றார். இந்தச் சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இவருக்கு நடந்த சம்பவமானது கவலையளிக்கிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்று போரம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காரைதீவு சபையின் உறுப்பினர்களுக்கு வரவேற்பு நிகழ்வு

அம்பாறை,ஓக.24

காரைதீவு பிரதேச சபைக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வும் சபை உறுப்பினர்களின் ஆரம்ப ஒன்று கூடலும் இன்று புதன்கிழமை காலை காரைதீவு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுகள் காரைதீவு பிரதேச சபை செயலாளர் எஸ். இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளன.(ச-30)



கிரான் சித்திவிநாயகர் ஆலய புனரமைப்புக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் 500 சிமெந்து பைக்கற்றுகளை வழங்கிவைத்தார்.

## தமிழரசுக் கட்சி வேட்புமனுத் தாக்கல்

அம்பாறை,ஓக.24

கல்முனை மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமிழரசுக் கட்சி நேற்று செவ்வாய்க்கிழமை வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்டத் தேர்தல் முகவர் டாக்டர் வில்லியம் தோமஸ், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் செல்லையா இராசையா ஆகியோர் அம்பாறையில் உள்ள தெரிவத்தாட்சி அலுவலகத்தில் இந்த வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

தமிழரசுக்கட்சி மூத்த உறுப்பினர் கு.ஏகாம்பரத்தை தலைமை வேட்பாளராகக் கொண்டு 25 வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-30)

# அசாதாரண சூழலைக் கட்டுப்படுத்த திருமலையில் புதிய படையணி

திருகோணமலை,ஓக.24

கிண்ணியா பிரதேசத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவத்தில் புதிய படையணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பிரிகேடியர் அத்துல கொடிப்பிலி தலைமையில் 224ஆவது படையணி உருவாக்கப்பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ஹப்பு ஆரச்சி தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில் இடம் பெற்ற அசாதாரண சூழ்நிலையை அடுத்து அந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தி நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக மேலதிகமாக இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மேலதிக படையினரைக் கட்டுப்படுத்தி பிரதேசத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காகவே இந்தப் படையணி உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள படையணி, ஏற்கனவே அங்கு செயற்பட்டு வரும் படையணிகளுடன் இணைந்து செயற்படாது தனித்துவமாகவே பிரதேசத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் என்று அவர் மேலும்தெரிவித்துள்ளார். (ச)

# வதந்தி பரப்புவோர் பற்றி உடன் தகவல் தர கோரிக்கை

மர்ம மனிதர்கள் தொடர்பான பொய் வதந்திகளைப் பரப்புபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு பொய்யான வதந்திகளைப் பரப்புபவர்கள் தொடர்பாக பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கும்படி காத்தான்குடி பொலிஸார் ஒலி பெருக்கி மூலம் பொதுமக்களுக்கான அறிவித்தல் விடுத்துள்ளனர்.

கிறீஸ் பூதம் என்பது ஒரு பொய்யான வதந்தியே. இந்தப் பிரதேசங்களில் வசிக்கும் திருடர்கள், கொள்ளையர்கள் போன்றோரே மக்களை அச்சத்திற்கு உள்ளாக்கும் வகையில் இவ்வாறான வதந்திகளைப் பரப்பி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# கிண்ணியாவில் பாதுகாப்பு கெடுபிடி; பல இடங்களில் காவலரண்கள்

மூதூர், ஓக. 24

கிண்ணியாவில் பெருமளவு படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் கிண்ணியாவின் பல்வேறு பகுதிகளிலும் பாதுகாப்பு அரண்களை அமைத்து வருகின்றனர்.

பெரும்பாலும் மணல் மூடைகளைக் கொண்டு முக்கிய சந்திகளிலும், வீதியோரங்களிலும் இந்த அரண்கள் அமைக்கப்படுகின்றன. சில இடங்களில் வேகத் தடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கிண்ணியா - மூதூர் வீதியூடாகப் பயணம் செய்வோர் சோதனைக்குள்ளாக்கப்படுகின்றனர். அடையாள அட்டை மற்றும் பொதிகள் சோதனையோடு உடற்சோதனையும் இடம்பெறுகின்றன.

கடந்த 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு மர்ம மனிதன் சம்பவத்தோடு மறுநாள் திங்கட்கிழமை கிண்ணியாவில் இடம்பெற்ற தாக்குதல் கலவரத்தை அடுத்தே இந்த நடைமுறை பின்பற்றப் பட்டு வருகின்றமை குறித்து பொதுமக்கள் கடும் விசனமும், கண்டனமும் தெரிவிக்கின்றனர்.

# மர்ம மனிதன் பின்னணி விரைவில் வெளிவரும்; மக்கள் வதந்திகளை நம்பி கலவரப்படக்கூடாது

## அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

கம்பளை, ஓக.24

மர்ம மனிதர்கள் விவகாரத்தின் பின்னணி மற்றும் உண்மைகள் விரைவில் வெளிச்சத்திற்கு வரும் என்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கம்பளை, பகுதியில் புனரமைப்புச் செய்யப்பட்ட மஸ்ஜித் மாவத்தையை திறந்து வைத்த பின்பு நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

மர்ம மனிதர்கள் தொடர்பான செய்திகள் பொதுமக்கள் மத்தியில் விரைவாகப் பரவுவதற்கு ஊடகங்கள் பிரதான காரணமாக அமைந்துள்ளன. இந்த மனிதர்கள் தொடர்பான பின்னணியை வெளிச்சத்துக்கு கொண்டுவர அரசால் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பாக நிலவும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும்.

நாடு முப்பது வருட யுத்தத்தின் பின்பு அபிவிருத்தியைக் கண்டுவரும் நிலையில் மக்கள் மத்தியில் பதற்றத்தையும் அச்சத்தையும் தோற்றுவிக்கும் வகையில் மர்ம மனிதர்கள் தொடர்பான விவகாரம் அமைந்துள்ளது. மர்ம மனிதர்கள் விவகாரத்தில் நாட்டு மக்கள் சிந்திக்காதவர்களாக நிதானமற்று நடந்து கொள்கின்றனர். மக்கள் வதந்திகளை விரைவில் நம்பி விடுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் பொத்துவில் பிரதேசத்தில் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலை யைத் தொடர்ந்து ஜனாதிபதி என்னை அந்த இடத்திற்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டார். நாம் அங்கு போய் மக்கள் மத்தியில் உண்மை நிலைவரங்களை எடுத்துச் சொல்ல முற்பட்டோம். ஆனால், மக்கள் நாம் பொய் சொல்கிறோம் என எண்ணி எம் மீது ஆத்திரம் கொண்டனர்.

இதில் இருந்து தெரிய வருவது மக்கள் வதந்திகளை நம்பி கலவரம் அடைவது போல் நாங்களும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொலிஸார் மீது சந்தேகம் கொள்வது கவலைக்குரியதாகும். எனவே, பிரதேச ரீதியாக பொலிஸாருடன் மக்கள் தொடர்பு கொண்டு செயற்பட வேண்டும் - என்றார். (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:**
மனக்குழப்பங்கள் அதிகரிக்கும் நாள். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். தொழில் ரீதியாக மேற்கொண்ட முயற்சி ஒன்றில் எதிர்பாராத தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். விருந்தினர்கள் வருகையால் உங்களின் சில வேலைகளில் பாதிப்பு ஏற்படலாம்.

**இடபம்:**
கனவுகளை நனவாக்கிக் கொள்ள கடும் பிரயத்தனம் மேற்கொள்வீர்கள். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் காணலாம். புதியவர் ஒருவர் சந்திப்பால் அனுகூலம் பெறலாம். இறை வழிபாட்டில் நாட்டம் செல்லும். இரண்டு நாள்களாக இழுபறியாக இருந்த காரியம் ஒன்று, இன்று வெற்றிகரமாக முடிவுக்கு வரும். பணவரவு உண்டு.

**மிதுனம்:**
திட்டமிட்ட வேலைகளில் திடீரென மாற்றம் செய்யலாம். பொறுப்பில்லாமல் செயற்படும் குடும்ப உறுப்பினர்களால் எரிச்சல் அடையலாம். தேக ஆரோக்கியக் குறைவுகளைச் சந்திக்கலாம். வழக்கத்தை விட, கூடுதல் நேரம் பணிபுரியலாம். கொடுக்கல் வாங்கல்களை சீராக்கிக் கொள்ள முற்படுவீர்கள். திடீர் சந்திப்பு நிகழும்.

**கடகம்:**
பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். தொழில் கூட்டாளிகளால் உருவான தொல்லைகள் குறையும். நிதிநிலைமை மேம்படும் வகையில் ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். மனதிற்கு சந்தோஷம் தரும் செய்தியைக் கேட்கலாம். நீங்கள் கேட்ட உதவி ஒன்றை நண்பர்கள் மறுக்காமல் செய்யலாம். ஆடம்பரப் பொருள் வாங்குவீர்கள்.

**சிங்கம்:**
மறக்க முடியாத சம்பவங்கள் நடக்கலாம். உங்களின் தவறு ஒன்றை மற்றவர்கள் சுட்டிக் காட்டலாம். ஏதோ ஒரு விடயத்தால் மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடி கொள்ளும். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள். குறைந்த ஆதாயத்தை எதிர்பார்த்து செய்த வேலை ஒன்றில் அதிக ஆதாயம் பெறலாம்.

**கன்னி:**
இறை வழிபாடுகள் மூலம் அமைதி பெறும் நாள். உடனிருந்து கொண்டே உபத்திரவம் செய்யும் சிலரால் எரிச்சல், கோபம் அடையலாம். கடன் பிரச்சினை ஒன்றால் கலக்கம் அடையலாம். உங்களின் செயற்பாடுகளைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். மருத்துவ செலவு நேரலாம்.

**துலாம்:**
பண விவகாரங்களில் மற்றவர்களை நம்புவதைத் தவிர்க்க வேண்டும். வியாபாரிகள் கடும் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். முக்கியமான நபர் ஒருவரைச் சந்திக்க முற்பட்டு அவரில்லாமல் திரும்ப நேரிடலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். நடப்பதெல்லாம் நன்மைக்கே என நினைக்கும் நாள்.

**விருச்சிகம்:**
சக ஊழியர்களை அனுசரித்துச் சென்று காரியம் சாதிப்பீர்கள். நண்பரின் உறவினர் ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். தொழில் ரீதியாக சிலரிடம் கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். பிள்ளைகள் கல்வி விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத நண்பர் ஒருவர், திடீரெனப் பேசலாம்.

**தனுசு:**
பெண்கள் வழியில் பெருமைப்படும் வகையிலான உதவி கிடைக்கும். சூழ்ச்சியாகச் செயற்படும் நபர்களிடம் எச்சரிக்கையாக நடந்து கொள்வீர்கள். பழைய கடன் மிகுதி ஒன்றை ஒருவரிடம் கடன் வாங்கிக் கொடுத்தாவது தீர்ப்பீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள். புதிய இடம் ஒன்றுக்கு செல்லும் சூழ்நிலை உருவாகும்.

**மகரம்:**
வீட்டில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். சிலர் உதவி செய்வது போல உல்லாசமாகப் பேசி விட்டு கடைசி நேரத்தில் ஏமாற்றலாம். கனிவான பேச்சுக்களால் சிக்கலான சில நபர்களிடம் காரியம் சாதிப்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையலாம். அரசியல்வாதிகள் வீண் பேச்சுக்களை, சர்ச்சைகளைத் தவிர்க்க வேண்டியது அவசியம்.

**கும்பம்:**
தொல்லை கொடுத்தவர்கள் எல்லை விட்டுச் செல்லும் நாள். தொழில், வியாபார ரீதியான பயணங்கள் செல்ல நேரிடலாம். கணவன், மனைவியிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். மாற்று மத நண்பர்களை நம்பி புதிய முயற்சிகளில் இறங்க வேண்டாம். சில வேலைகளுக்காக ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம்.

**மீனம்:**
உற்சாகம், தெம்புடன் செயற்படும் நாள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நண்பர் ஒருவர் உங்களைத் தேடி வரலாம். தொழில், வியாபார ரீதியாக திட்டமிட்டக் காரியங்கள் இனிதே நடக்கும். பழைய வாகனங்களை மாற்றி புதிய வாகனங்கள் வாங்கப் போட்ட திட்டம் நிறைவேறும். பொது விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

# இவங்கள் ராத்[...] வேலையே [...] குமுறும் நாவ[...]

### களத்திலிருந்து ஓர் அற[...]



தி.குணாளன்

“எங்கட வீட்டுக்க வந்து கதவை உடைச்சுப் போட்டு என்ர புருசனை இழுத்துக் கொண்டு போய் முற்றத்தில வச்சு அடிச்சுப் போட்டு கூட்டிக் கொண்டு போனவங்கள்.”

யாழ்ப்பாணம் நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே தனது கணவனுக்காகக் காத்திருந்த பெண் ஒருவரின் குரல் அவர் பேசும் போதே தளுதளுக்கிறது.

“இவங்கள நம்பித்தானே நாங்கள் இருந்தனாங்கள். இவங்களே இப்பிடிச் செய்தா நாங்கள் என்ன செய்யிறது?” அங்கே கூடியிருந்த பல பெண்களிடம் இருந்து இந்த வார்த்தைகள் வருகின்றன.

நாவாந்துறையில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின் பின்பு கைது செய்யப்பட்டவர்கள் நேற்றுக் காலை நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்களே. இரவு 9 மணியளவில் பொது மக்களுக்கும் படையினருக்கும் இடையில் நடந்த களேபரத்துக்குப் பின்னர் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள் என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். ஆனால், வீடுகளில் இருந்த தமது கணவன்மாரும் பிள்ளைகளுமே படையினரால் இழுத்துச் செல்லப்பட்டனர் என்று மக்கள் கூறுகின்றனர்.

கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டவர்களின் மனைவிமார், பிள்ளைகள், குழந்தைகள், உறவினர்கள் நேற்று நீதிமன்றத்துக்கு வருகை தந்தனர். நீதிமன்றத்துக்கு வந்த இவர்களை நீதிமன்ற வளாகத்துக்குள் செல்ல இராணுவத்தினர் அனுமதிக்கவில்லை. யாழ்.மத்திய கல்லூரி மைதானத்துக்கு அருகில் அவர்கள் இருத்தப்பட்டிருந்தனர். அங்கிருந்து அவர்கள் நகராதவாறு படையினர் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். நீதிமன்றத்தைச் சுற்றிய பகுதிகளிலும் சோதனைகளும் கெடுபிடிகளும் நேற்று அதிகரிக்கப்பட்டிருந்தன.

இராணுவத்தினரால் மறித்து வைக்கப்பட்டிருந்த மக்களைச் சென்று சந்தித்தேன். ஏன் இங்கு வந்தீர்கள் என்று கேட்டதுதான் தாமதம், அந்த மக்கள் அடக்கி வைத்திருந்த ஆத்திரங்களையெல்லாம் கொட்டித் தீர்த்தனர்.

உங்கள் கணவன்மாரையும் பிள்ளைகளையும் இராணுவத்தினர்தான் அடித்து இழுத்துச் சென்றார்கள் என்று எப்படிச் சொல்கிறீர்கள்? அவர்கள் இராணுவத்தினர்தான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும் என்று கேட்டேன்.

**வீட்டுக்க வந்து அடிச்சவன் உவன் ஆமி தான்**

“எங்களுக்கென்ன விசரே, நாங்கள் என்ன குடிச்சுப் போட்டுக் கதைக்கிறம் எண்டோ நினைக்கிறியள். ஆமிய எங்களுக்கு தெரியாதோ? இவ்வளவு காலமா இஞ்ச இருக்கிறம் எங்களுக்கு அவங்களைத் தெரியாதோ? அவங்கள்தான் வீட்டுக்கை வந்து அடிச்சவங்கள். ஒண்டும் செய்யாத எங்கட பிள்ளையள அவங்கள் நெஞ்சிலை உதைஞ்சு விழுத்தினதப் பாக்கேக்க நெஞ்சே வெடிச்சுப் போச்சு. ஆமிக்காரன் ஆக்கள அடிச்சு இழுத்துக் கொண்டு போனதை நாங்கள் எங்கட கண்ணால கண்டனாங்கள்.” என்று கொதித்தார்கள் மக்கள்.

இராணுவத்தினர் மிக அருகிலிருந்து நோட்டம் விட்டுக்கொண்டிருந்ததால் கதைப்பதற்கு அச்சப்பட்டபோதும், தமது உறவுகள் தாக்கப்பட்ட ஆதங்க மேலீட்டால் அவர்கள் பொங்கிச் சீறினார்கள்.

இராணுவத்தினர் வேண்டுமென்றே தம்மைத் தாக்கினார்கள் என்று அந்த மக்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

வந்திருந்தவர்களில் அனேகமானவர்கள் இளந் தாய்மார்கள். அவர்கள் தங்களுடன் கைக் குழந்தைகளையும்கூட அழைத்து வந்திருந்தனர்.

வயதானவர் ஒருவர் மட்டும் சற்றுத் துணிவாக உதயன் பத்திரிகையிடம் கதைத்தார். இரவு என்ன நடந்தது என்பதை அவர் விளக்கினார்.

“நேற்று (நேற்று முன்தினம்) இரவு சென். நீக்கல்ஸ் தேவாலயத்துக்குப் பக்கத்தில நிண்டு கொண்டு இருந்தனாங்கள். மூவர் அந்தப் பகுதியால் சந்தேகப்படும்படியாப் போனாங்கள். அவங்களை ஒரு வாகனத்தில கொண்டு வந்து யாரோ இறக்கி விட்டதாகச் சனம் சொல்லிச்சு. அதால நாங்கள் அவங்களைத் துரத்திக் கொண்டுபோனம். நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலய மதிலால் ஏறி அவங்கள் தப்பிட்டாங்கள்” என்றார் அவர்.

மதில் பாய்ந்து சென்ற அந்த மூவரையும் இளைஞர்கள் தொடர்ந்து கலைத்துச் சென்றிருக்கிறார்கள். நீக்கலஸ் மைதானம் வழியாக ஓடிய அந்த மூவரும் கடலோரமாக இருந்த இராணுவ முகாமுக்குள் சென்று மறைந்து விட்டார்கள் என்று அந்த முதியவர் சொன்னார்.

“அவர்கள் இராணுவ முகாமுக்குள் ஓடிச் சென்றதை நீங்கள் நேரில் கண்டீர்களா?” என்று கேட்டதற்கு, “நான் மட்டுமில்ல ஊரில இருக்கிற எல்லாருமே கண்டனாங்கள். அவங்கள் காம்புக்கு போனதுக்குப் பிறகு அந்த மூண்டு பேரும் தங்கட ரீசேட்டைக் கழற்றிப் போட்டு பெனியனோட நிண்டவங்கள். இதை எங்கட பெடியள் தொடக்கம் எல்லாரும் கண்டனாங்கள். அதுக்குப் பிறகுதான் பிரச்சினை தொடங்கினது” - என்று அந்தப் பெரியவர் உறுதியாகச் சொல்கிறார். பாதுகாப்புக் கருதி உதயன் பத்திரிகையுடன் பேசிய எவரது பெயரையும் இங்கு நாம் பிரசுரிக்கவில்லை.

இராணுவ முகாமுக்குள் ஓடிச் சென்ற மூவரையும் தமக்குக் காட்டும்படி முகாமில் இருந்த இராணுவத்தினருடன் தாங்கள் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தபோதே, சந்தேகநபர்கள் மூவரும் முகாமின் பின்புறமாக ஓடித் தப்புவதற்கு இராணுவத்தினர் அனுமதித்தனர் என்றும் நாவாந்துறை மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

“சனம் காம்படியில சண்டை பிடிச்சுக் கொண்டு நிக்க, காம்பின்ர பின்பக்கமாய் அவங்கள் மூன்று பேரும் தப்பிப் போட்டாங்கள். அப்பவும் விடாம அவங்களக் கொஞ்சச் சனம் கலைச்சது. அதுக்குள்ள ஒரு வாகனம் வந்து அவங்கள ஏத்திக் கொண்டு போட்டுது. இதுக்குப் பிறகுதான் எங்கட பெடியள் ஆமிக்காரனோட பிரச்சினைப் பட்டவங்கள்” என்று தான் பார்த்தவற்றை ஆணித்தரமாக உதயனிடம் தெரிவித்தார் அந்தப் பெரியவர்.

இளைஞர்களும் ஊர் மக்களும் இராணுவத்தினருடன் முரண்படுகிறார்கள் என்ற தகவல் அறிவிக்கப்பட்டதும் மேலதிக பொலிஸாரும் இராணுவத்தினரும் அந்தப் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

**அவையள் சுடத்தான் பெடியல் கல் எறிஞ்சவங்கள்**

“பிரச்சினை நடந்து கொண்டிருக்கேக்க நிறைய ஆமி பெரிய வெள்ள பஸ்ஸில வந்து இறங்கினவங்கள். பொலிஸும் வந்தது. ரோட்டில எங்கட சனம் குழுமிட்டுது. அதைக் கலைக்கிறதுக்காக ஆமி மேல் வெடி வச்சான். தொடந்து ‘பயறிங்’. அதுக்குப் பிறகுதான் பெடியள் கல்லால எறிஞ்சவங்கள். அதோட அவங்க வந்த ஜீப் ஒன்றுக்கும் கல்லால எறிஞ்சவங்கள். இவங்கள் கல்லால எறிஞ்சதால அவங்களுக்கு ஒரு காயமும் இல்ல. ஆமி எல்லோரையும் வீட்டுக்கு கலைக்கேக்க அடிச்சடிச்சுதான் கலைச்சவங்கள். இதில ஆம்பிள, பொம்பள குஞ்சு குருமன் எண்டு ஒண்டும் பாக்கேல்ல” என்று தனது கையில்

ஏற்பட்டுள்ள அடி[...]
புடியே கூறினார் [...]
ஒருவர்.

குழுமி இருந்த [...]
பின்னர், அந்தப் பகு[...]
இராணுவத்தினரும்[...]
பாட்டுக்குள் கொண்[...]
யில் இருந்து எவரும்[...]
இருந்து எவரும் உ[...]
கப்படவில்லை.

**வீடு வீட[...]
இழுத்துக்கொ[...]**

“எல்லோரும் எ[...]
மணி, 2 மணி இரு[...]
எல்லாப் பெடியன[...]
கொண்டு வந்தவங்[...]
சவங்கள். என்ர ம[...]
போகேல்ல, ஆனா[...]
பிடிச்சு, அடிச்சு, இழு[...]
என்று சாட்சியமளித்[...]
கைகளில் 9 மாதக் [...]
சடையைப் பிடித்த[...]
எதுவும் விளங்காம[...]
துக் கொண்டிருந்தா[...]

“ஏ.எல். படிக்கிற [...]
முன்னால் இழுத்துக்[...]
சேர்ச்சில வேலை [...]
பெடியன். அவனுக்[...]
இல்லை எண்டு நால்[...]
ஒண்டையும் காதில[...]
போனவங்கள். அவ[...]
பிடிக்க வெளிக்கிட்[...]
போட்டு அவன இழு[...]
என்கிறார் 40 வயது[...]
இதை அவர் சொ[...]
கண்ணில் கண்ணீ[...]
இருந்து அதனை ம[...]

அங்கு நின்றிரு[...]
ளுடன் தங்களின் [...]
கொண்டனர்.

“என்ர புருஷன்[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராத்திரி கொஞ்ச நஞ்ச
# யே செஞ்சவங்கள்?
# நாவாந்துறை மக்கள்

## வ ஓர் அறிக்கை



ஏற்பட்டுள்ள அடி அடையாளத்தைக் காட்டிய படியே கூறினார் நடுத்தர வயதுப் பெண்மணி ஒருவர்.

குழுமி இருந்த கூட்டத்தை அடித்துக் கலைத்த பின்னர், அந்தப் பகுதியின் வீதிகள் அனைத்தையும் இராணுவத்தினரும் பொலிஸாரும் தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். நாவாந்துறை யில் இருந்து எவரும் வெளியே செல்லவோ வெளியே இருந்து எவரும் உள்ளே நுழையவோ அனுமதிக் கப்படவில்லை.

**வீடு வீடாய் போய் அடிச்சு இழுத்துக்கொண்டு போனவையள்**

''எல்லோரும் வீட்ட போனாப் பிறகு இரவு 1 மணி, 2 மணி இருக்கும். ஆமி வீடு வீடாய் போய் எல்லாப் பெடியளையும் அடிச்சடிச்சு இழுத்துக் கொண்டு வந்தவங்கள். பெடியள் கத்த கத்த அடிச் சவங்கள். என்ர மனிசன் ஒரு பிரச்சினைக்கும் போகேல்ல, ஆனால் வீட்டில் இருந்த அவரையும் பிடிச்சு, அடிச்சு, இழுத்துக் கொண்டு போனவங்கள்'' என்று சாட்சியமளித்தார் இளம் தாய் ஒருவர். அவரது கைகளில் 9 மாதக் குழந்தை இருக்கிறது. அவரது சடையைப் பிடித்தபடி 5 வயதுச் சிறுமி ஒருத்தி எதுவும் விளங்காமல் எம்மை மலங்க மலங்க பார்த் துக் கொண்டிருந்தாள்.

''ஏ.எல். படிக்கிற என்ர பெடியனையும் கண்ணுக்கு முன்னால் இழுத்துக் கொண்டு போனவங்கள். *நான் சேர்ச்சில வேலை செய்யிறனான். அவன் படிக்கிற பெடியன். அவனுக்கும் இதுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை* எண்டு நான் சிங்களத்தில சொல்லச் சொல்ல ஒண்டையும் காதில கேக்காமல் இழுத்துக் கொண்டு போனவங்கள். அவனை விடுங்கோ எண்டு இழுத்துப் பிடிக்க வெளிக்கிட்ட என்னை உதைஞ்சு தள்ளிப் போட்டு அவன இழுத்துக் கொண்டு போனவங்கள்'' என்கிறார் 40 வயதுகளில் இருக்கும் தந்தை ஒருவர். இதை அவர் சொல்லி முடிக்கும் போது அவரது கண்ணில் கண்ணீர் எட்டிப் பார்க்கிறது. எம்மிடம் இருந்து அதனை மறைக்க அவர் முயல்கிறார்.

அங்கு நின்றிருந்த சில இளந் தாய்மாரும் எங்க ளுடன் தங்களின் உள்ளக் குமுறல்களை பகிர்ந்து கொண்டனர்.

''என்ர புருஷன் ஏலாதவர். வேலசெய்யேக்க மேல 'பிளாட்' விழுந்து முதுகெலும்பு உடைஞ் சிருந்தது. இரவு 2 மணியிருக்கும் வீட்டுக்க வந்து கதவை உடைச்சுப் போட்டு கத்த கத்த அவரையும் இழுத்துக் கொண்டு போனவங்கள்.'' என்றார் ஒரு பெண்.

''அவர் ஏலாதவர். அவரையும் இவங்கள் ஈவி ரக்க மில்லாமல் பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள்'' என்று கையிலிருந்த 6 மாதக் குழந்தைக்குப் பாலூட்டி யவாறே இளம் தாயொருவர் குரல் தள தளக்கத் தெரிவித்தார்.

''என்ர மகனை வீட்டுக்க வந்து பிடிச்சுக் கொண்டு போனவங்கள். எல்லாம் முடிஞ்சு போட்டுது எண்டு வீட்டுக்க வந்து படுத்துக்கிடந்தது பெடி. நித்திரை யால எழுப்பி அடிச்சு இழுத்துக் கொண்டு போன வங்கள். நான் அவங்கட காலைப் பிடிச்சு கெஞ் சினனான். என்னைத் தள்ளி விட்டிட்டு கூட்டிக் கொண்டு போட்டாங்கள்'' என்றார் நடுத்தர வயதுத் தாய்.

''அவங்கள் என்று யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?'' என்று கேட்டதற்கு,

''வேற யாரைச் சொல்லுறம், உந்தா உதில நிக்கிற ஆமிக்காரரைத்தான் சொல்லுறன். இவங்கள் ராத்திரி கொஞ்ச நஞ்ச வேலையே செஞ்சவங்கள்? இவங்கட கட்டுப்பாட்டடில இவங்கள நம்பித்தானே இருக் கிறம் நாங்கள். இவங்கள் இப்பிடிச் செய்தா நாங்கள் என்னத்தைச் செய்யிறது? எங்கட வீட்டுக் கதவை உடைச்சதுக்கு இனி ஆர் காசு தருவினம்? இவையள் திருத்தி தருவினமா ? இதை நீங்கள் வடிவாப் போட் டாத்தான் வெளியில இருக்கிறவனுக்கு இவங்கள் இஞ்ச செய்யிற அட்டகாசம் விளங்கும்'' என்றார் ஆவேசமாக.

ஆனால், நாவாந்துறையில் உள்ள சிலர் திட்ட மிட்டு இராணுவத்தினரைத் தாக்கினர் என்று கூறும் யாழ். குடாநாட்டுக்கான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, ''எனது படையின ரைத் தாக்கினால் நான் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கமாட்டேன்'' என்று இந்த அப்பாவி மக்களை மிரட்டுகிறார்.

நேற்றுமாலை 512ஆவது படையணி அலுவல கத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தக் குற்றச்சாட்டையும் எச்சரிக்கையையும் விடுத்தார். இராணுவத்துக்கு எதிராக மக்களை

(26 ஆம் பக்கம் பார்க்க)



## சுவாமி சிவானந்தர்



''ஒரு குருவிடம் சீடனாகச் சேர வேண்டும் என்று ஆசைப் படுகிறேன். எங்கே யாவது ஒரு நல்ல குருநாதர் கிடைத்தால் சொல்லுங்கள் என்று ஒருவர் ஒருத்தரிடம் விசாரித்தார்.

இவர் சொல்வதைப் பார்த் தால் குருநாதர் என்பவர் ஏதோ கடைகளில் விலைக்கு வாங் கக் கூடியவர்கள் என்பது போலல்லவா இருக்கிறது. என்று நினைத்த அவரது நண்பர் என்ன செய்தார் தெரியுமா?

உடனே அவரை தன் எதிரில் சீடர் மாதிரி உட்கார வைத் துக் கொஞ்சநேரத்துக்கு அவருக்கு குருவாகமாறினார். இது மாதிரியான சந்தர்ப்பத்தில் குருவாக மாறினால்தான் சரி.

ஒரு குருவிடம் சீடனாகச் சேர்வது எப்படி என்பதற்கு சுவாமி சிவானந்தர் வாழ்க்கையிலே நடந்த சில நிகழ்ச்சி களை இங்கு எடுத்துக் கூறலாம்.

சீடனாக விரும்புவர்கள் அதைப் புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையில்.

இமயமலை அடிவாரத்தில் ரிஷிகேஸம் இருக்கிறது சுவாமி சிவானந்தர் அங்கேதான் இருந்தார்.சிவானந்தர் ஆச்சிரமத்தை அவர்தான் உருவாக்கினார்.,

அவரிடம் சீடராக சேரவேண்டும் என்ற ஆசையில் பல ஊர்களிலிருந்தும் பல பேர் தேடி வருவார்கள்.

ஒரு தடவை நன்றாகப் படித்த ஒருத்தர் அவரிடம் வந்து சுவாமி நான் நன்றாகப் படித்திருக்கிறேன் உங்களிடம் வந்து ஆசிபெறவேண்டும் என்ற ஆசையில் வந்திருக்கிறேன்'' என்றார்

''என்ன படித்திருக்கிறீர்கள் என்று கேட்டார் சுவாமி. அவர் மிகுந்த கர்வத்தோடு ''எம்.ஏ'' என்றார். ''ஓ அப்படியா அப்படியென்றால் மாஸ்ரர் ஒப் அவித்யா'' என்றார் சுவாமி சாதாரணமாக மாஸ்ரர் ஒப் அவித்யா'' என்றால் அறியாமை யில் சிறந்தவன்'' என்று பொருள். அதைச் சுருக்கினால் எம்.ஏ. என்று தானே வரும்.

அதைக்கேட்ட வந்தவருடைய கர்வம் பறந்து போய் விட்டதாம்.

இன்னொரு நாள் ''ஒரு பெரிய பணக்காரர் ஒருவர் வந்து ''சுவாமியிடம் சீடனாக வேண்டும்'' என்றார். சுவாமி நிமிர்ந்து பார்த்தார். வந்திருந்தவர் மிகவும் அமைப்பாக உடையணிந்திருந்தார்.

தான் ஒரு பெரிய பணக்காரர் என்ற கர்வம் அவருக்கு இருந்தது. சுவாமி அங்கேயிருந்தவர்களைக் கூப்பிட்டு சரி அப் படி என்றால் அந்த பேணியை இவரிடம் கொடுங்கள் என்றார்.

ஒரு வெற்றுப் பேணியை கொண்டுவந்து அவரிடம் கொடுத்தார். அதை வாங்கிய அவர் ஒன்றும் விளங்காமல் தடுமாறினார்.

''என்ன பார்க்கிறீர்கள்? இந்தப் பேணியை எடுத்துக் கொண்டு வெளியே போய் பிச்சை எடுத்துக்கொண்டு வாருங் கள்'' என்றார்

வந்த பணக்காரர் அப்படியே திகைத்துபோய் நின்று விட்டார்.

ஆன்ம சாதனையென்றால் அது சாதாரண விஷய மில்லை. வேடிக்கையான சமாச்சாரமுமில்லை. அகங்காரம் இல்லாமல் பிச்சை வாங்கி குருவுக்குக் கொடுத்து தானும் சாப்பிட வேண்டும் என்றார் சுவாமி.

அது கஷ்டமான காரியமே என்று நினைத்த அந்தப் பணக்காரர் சொல்லாமலே அந்த இடத்தை விட்டு அகன்று விட்டார்.

இந்த நிகழ்ச்சிகளிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன தெரியுமா?

ஒரு குருவை சீடன் தேர்ந்தெடுக்க முடியாது. ஒரு குருவேதோன் தன்னுடைய மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படிப்பட்ட பழக்கமில்லாதவர்கள் தான் இன்றைக்குப் பெரும்பாலான அவஸ்தைகளை அடைகின்றனர்.

ஒரு சிறுவன் ஆசிரியரைப் பார்த்து ''என்னை நீங்கள் இப்படி ஏசக்கூடாது, ஏனென்றால் நான் 10 000 ரூபா செலவு செய்து இங்கு வந்திருக்கிறேன் என்றான்.

அதற்கு ஆசிரியர் இருந்தாலும் நான் உன்னைத் திட்டலாம், ஏனென்றால் 20,000 ரூபா செலவு செய்துதான் நான் இந்த வேலையை வாங்கியிருக்கின்றேன் என்றார்.

கோ. சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



நவாலி அரசடி மகா வித்தியாலயத்தில் யு.என்.டி.பியின் அனுசரணையுடன் அண்மையில் நடைபெற்ற நடமாடும் சேவையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மக்களுக்கு சேவைகளை வழங்குகின்றனர். (ம–100)

# நோயாளர்களின் நிலையை உணர்ந்து தாதியர் செயற்படவேண்டியது அவசியம்

## நல்லூர் ஆதீன முதல்வர்

யாழ்ப்பாணம், ஓக. 24

நோயாளர்களின் உடல், மன நலம் போன்றவற்றை உணர்ந்து தாதியர்கள் தமது கடமைகளைச் செய்ய முன்வரவேண்டும்.

இதன் மூலம் ஆரோக்கியமான சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும். வைத்தியசாலைகள் தமது மேலதிக கடமைகளை இலகுவாபச் செய்ய இது ஏதவாக அமையும்.

இவ்வாறு தெரிவித்தார் நல்லை ஆதின குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்.

யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் 50 ஆண்டு நிறைவு தினவிழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

வைத்தியசாலையில் நோயாளர்களின் சுக நலன்களில் வைத்தியர்களினதும் தாதியர்களதும் பங்கு முக்கியமானது. இதில் தாதியர்கள் முக்கியமாக கடமையுணர்வுடன் சேவையாற்ற வேண்டும். ஏனெனில் தாதியர்கள் நோயாளர்களுடன் எப்போதும் கூட இருப்பவர்கள்.

இந்தப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்ற பல தாதியர்கள் இன்றும் போர்ச் சூழலிலும் தமது கடமைகளை இடைவிடாது வழங்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் மூலம் வழங்கப்பட்ட பயிற்சிகள் அவர்களை இந்தளவுக்கு வளர்ச்சி அடையச் செய்து இருக்கின்றன. இதனைப் போல் இனிவரும் காலங்களில் பயிற்சி பெறும் மாணவர்களும் பொது மக்களின் நலன் கருதி பணியாற்ற வேண்டும்.

இது கல்லூரிக்கு மட்டுமல்லாது கடமையாற்றும் வைத்தியசாலைக்கும் பெருமைதேடித் தரும். - என்றார். (ம-4-313)

# அழிவடைந்த பிரதேசத்தைக் கட்டியெழுப்ப சபை அங்கத்தவர் ஒன்றிணைய வேண்டும்

## சாவகச்சேரி நகர சபைத் தலைவர்

தென்மராட்சி, ஓக. 24

அழிவடைந்த பிரதேசத்தை மீண்டும் புதுப்பொலிவுடன் திகழ வைக்க சபை அங்கத்தவர்களாக தெரிவு செய்யப்பட்ட 11 பேரும் கட்சி வேறுபாடின்றி ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அடுத்து வரும் 4 ஆண்டுகளில் மக்களின் அபிலாசைகளுக்கு முன்னுரிமை கொடுத்து இந்த நகர சபையை நாட்டின் ஒரு முன்னுதாரண நகரசபையாக மாற்ற வேண்டும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி நகர சபை கேட்போர் கூடத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரி நகர சபையின் தவிசாளர், துணைத் தவிசாளர், உறுப்பினர்கள் பதவி ஏற்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இதில் சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

நீண்ட காலத்தின் பின் ஜனநாயக ரீதியில் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தலில் மக்கள் பல்வேறு எதிர்பார்ப்புகளின் மத்தியில் எம்மைத் தெரிவு செய்துள்ளனர்.

அந்த மக்களின் தேவைகள் அபிலாசைகளை நகர சபையின் 11 உறுப்பினர்களும் இணைந்து ஒன்று கூடிச் செயற்பட்டு பூர்த்தி செய்வதே எமது தலையாய கடமையாகக் கருத வேண்டும்.

தேர்தல் காலத்தில் நாம் வேறு வேறு கட்சிகளில் போட்டி போட்டிருக்கலாம். வேறு வேறு கொள்கைகளைக் கொண்டிருக்கலாம், வாக்குறுதிகளை வழங்கி இருக்கலாம் அந்த வகையில் எமக்கு கிடைத்த வாக்குகள் மூலம் இந்த நகர சபையின் அங்கத்தவர்களாகிய எமது கூட்டிணைந்த செயற்பாடு மக்களுக்கு நாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றக் கூடியதாக அமையும்.

இதனால் மக்கள் எம்மீது கொண்ட நம்பிக்கை வலுப்பெறும். மக்களின் தேவைகள் அபிலாசைகளை எம்மால் நிறைவேற்றப்படும் பட்சத்தில் மக்களின் பரிபூரண ஒத்துழைப்புடன் இந்த நகரசபை ஏனைய சபைகளுக்கு முன்னுதாரணமாகத் திகழும் என்பது எனது திடமான நம்பிக்கையாகும்.

இந்த நகர சபையின் துணைத் தவிசாளர், உறுப்பினர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு கிடைக்கும் என முழுமையாக நம்புகின்றேன்.

இனிவரும் காலங்களில் சபை எடுக்கும் ஒவ்வொரு முடிவும் மக்களின் நலன் சார்ந்ததாகவும், நகர சபையின் நலன் சார்ந்ததாகவும் இருக்கும் என்பதை உறுதியுடன் கூறுகின்றேன். - என்றார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன், சாவகச்சேரி கத்தோலிக்க பங்குத் தந்தை அருட்பணி எஸ்.யேசுரட்ணம் அடிகள், மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

(ம-207-313)

# மக்களின் சுபீட்சமான வாழ்வுக்கு சேவை வழங்கத் தயாராக உள்ளோம்

## வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர்

யாழ்ப்பாணம், ஓக. 24

எமது மக்களின் சபீட்சமான வாழ்வுக்காகத் தன்னாட்சி உரிமைக் கோட்பாட்டை நிலை நிறுத்தும் புனிதமான இலட்சியத்தை நெஞ்சில் நிறுத்தி சபை உறுப்பினர்கள் ஒத்துழைப்புடன் மக்களுக்கான சேவை வழங்கத் தயாராகி விட்டோம்.

வலி வடக்குப் பிரதேசசபைத் தலைவராகப் பதவியேற்றுள்ள சோமசுந்தரம் சுகிர்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சபையின் தலைவர், உபதலைவர், சபை உறுப்பினர்கள் உத்தியோகபூர்வமாக பதவியேற்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. பதவியேற்பு நிகழ்வு இடம் பெற்றதன் பின்னர் கூட்டத்தில் தலைமை உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமக்கு வாக்களித்த வலி. வடக்கு மக்களுக்கு என்றும் விசுவாசமாகவும் நன்றியுள்ளவர்களாகவும் இருப்போம். எமக்கு வழங்கப்பட்ட பெரிய பொறுப்புக்களை உணர்ந்துள்ளோம். எம்மால் இயன்றவரை 24 மணி நேரமும் மக்களுக்கு சேவை வழங்குவோம்.

அரசின் நிதியை மட்டும் நம்பியிருக்காமல் நிதி பெறக் கூடிய மூலங்களை அறிந்தும் அதனைப் பெற்று பிரதேச அபிவிருத்தியை முன்னெடுப்போம். மக்கள் எம்மைத் தெரிவு செய்துள்ளதன் பயனை ஓரிரு மாதங்களில் அனுபவிக்க தொடங்குவார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வழிகாட்டலில் நாம் மக்களுக்கான சேவையை வழங்குவோம். - என்றார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், எஸ்.சிறிதரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சங்கையா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (ம-14)

## சேவையிலிருந்து ஓய்வு

யாழ்ப்பாணம், ஓக. 24



கிராம சேவையாளராக கடந்த 33 வருடங்களாக சேவையாற்றிய அகில இலங்கை சமாதான நீதிவான் என். பி.பாக்கியராஜா ஓய்வுபெற்றுள்ளார்.

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த இவர் நல்லூர், பருத்தித்துறை, தெல்லிப்பழை, கோப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-313)

***

வரணி, ஓக.24

சாவகச்சேரி அஞ்சலக அதிபராகக் கடமை புரிந்த பொன்னையா தெய்வேந்திரன் கடந்த 20 ஆம் திகதி சேவையில் இருந்து இளைப்பாறியுள்ளார்.

இவர் அஞ்சல் திணைக்களத்தில் 34 வருடங்கள் சேவை புரிந்து இளைப்பாறியமை குறிப்பிடத்தக்கது. (ம-122)

## இடமாற்றம்

நாவற்குழி, ஓக.24

வலிகாமம் கிழக்கு- கோப்பாய் பிரதேச செயலகத்தில் பொது முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய திருமதி தனுசியா சிறீஸ்க்ந்தராஜா யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (ம-121)

## சட்டமாணிக் கற்கை: பதிவுசெய்ய அறிவுறுத்து

நாவற்குழி, ஓக.24

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் சட்டமாணிக் கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள 113 மாணவர்களையும் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாக பதிவு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, நுகேகொட, நாவலவிலுள்ள தலைமை அலுவலகத்திலிருந்து இதற்கான கடிதம் அனுமதிப் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்முறை முதல் முதலாக இலங்கை முழுவதுமுள்ள பிராந்திய நிலையங்களில் சட்டமாணி பயில ஆயிரத்து 400 வரையானோர் அனுமதிப் பரீட்சையின் மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-121)

## நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி, ஓக.24

ஏழாலை துர்க்காதேவி ஆலய பொதுக் கூட்டம் அண்மையில் ஆலய மண்டபத்தில் ஜெ.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு விருந்தினர்களாக கலாசார உத்தியோகத்தர் திருமதி பத்மராணி சிவஞானராசா, கிராம அலுவலர்களான நா.நவரத்தினராசா, சக்திகிரீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் தெரிவு செய்யப்பட்ட புதிய நிர்வாகிகள் விவரம் வருமாறு:

தலைவர் - க.கஜன், உபதலைவர் - எஸ்.கருணாநிதி, செயலாளர் - அ.ரமணன், உதவிச் செயலாளர் - மயூரன், பொருளாளர் தி.ஐங்கரன், இவர்களுடன் 10 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணல் கோலங்கள்

நல்லூர் முருகன் சனகூட்டத்திடையே திணறியபடி வீதியைச் சுற்றிவந்து விட்டார். திருவிழா அலங்காரங்களோடு வீதி வலம் வந்த களைப்பில் வசந்தமண்டபத்தில் முன்பக்க கதவைச்சாத்திவிட்டு கொஞ்சநேரம் ஆறுதல் எடுத்துக்கொண்டிருந்தார். ஆனால் பக்தர்கள் ஓய்ந்திருக்கத் தயாராயில்லை. சுவாமி சுற்றிய பின்னர்தான் அவர்களுக்கு நிறைய வேலைகள் இருந்தன.

எங்கிருந்தெல்லாமோ கோயில் வீதிக்குப் படையெடுத்து, கடை பரப்பியிருந்த வியாபரிகளின் முகத்தில் செந்தளிப்புத் தெரிந்தது. அரக்கப் பரக்க கடைச்சாமன்களை மீள ஒழுங்கமைக்கத் தொடங்கினர். கச்சான் கடைகளில் நீண்டநேரமாக காணாமல் போயிருந்த கச்சான் வறுக்கும் சத்தம் மீண்டும் காதுகளுக்குள் உள்நுழைய ஆரம்பித்தது.(இந்தச் சந்தடிசாக்கில் கூட்டம் கோயில் என்னும் மையத்தை விட்டு பரவலடையத் தொடங்கி விட்டதால் தமது தொழிலை முடிவுக்கு கொண்டு வந்து, கைக்கெட்டிய நகைகளோடு நைசாக நழுவிக்கொண்டிருந்தனர் ஒரு சிலர்) முருகனை ஓய்வாக இருக்க அனுமதித்து விட்டு , ஒரு கையில்

## ஓடுகாலி

உருகி வழிந்து கொண்டிருக்கும் ஐஸ் கிறீம் கோன்களோடு கடைகளை வலம் வரத் தொடங்கினர் மக்கள்.

பொருள்களின் விலை, தரம் பற்றிய கூவல்களோடு அனல் பறக்கும் வியாபாரம் நல்லூர்ச் சூழலில் ஆரம்பமாகி விட்டது. மணிக்கடைகளின் நடுவே சற்று வித்தியாசமான ஒரு சிலரையும் காண முடிந்தது. பார்ப்பதற்கு குறவர் இனத்தவர்களைப் போன்று இருந்தனர். அவர்களைச் சுற்றி ஒரே இளைஞர் கூட்டம். நீ முந்தி, நான் முந்தி என அவர்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தனர்.

பொதுவாகவே குறவர் இனத்தைச் சேர்ந்தவர்கள் குறி சொல்லியே தமது பிழைப்பை நடத்துபவர்கள். இந்த இளைஞர்களும் தமது எதிர்காலத்தை அறியவே இவ்வாறு அலைமோதுகின்றனர் என்ற எண்ணத்தோடு அவ்விடத்தைக் கடக்க முற்பட்ட போது- அம்மா!!!... ஐயோ..... ஆஆஆ... ஊ...ஊஊ என்பன போன்ற -வலியால் துடிக்கின்ற - அலறல் ஒலி கேட்கவே , அவ்விடத்தில் குறி சொல்வதைவிடவும் வேறென்னவோ நடக்கிறது என்பதை ஊகிக்க முடிந்தது. அதுவும் அவலக் குரலொலியைக் கேட்ட பின்னர் சும்மாயிருக்க முடியவில்லை. என்னதான் நடக்கிறது என்று பார்த்துவிடுவோம் எனக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு தலையை நீட்டினேன். நான் நினைத்தது சரிதான்.

# பச்சை குத்தும் படலம்

தமது மேலங்கிகளைக் கழற்றி விட்டு இளைஞர்கள் சிலர் குந்தியிருக்க, அவர்களின் கைகளிலும், நெஞ்சிலும் ஊசி முனைகளினூடாக பசியநிறமை உட்செலுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. வலியால் இளைஞர்கள் துடித்தாலும் கூட, மெல்ல முனகி விட்டு ஏதோ ஒரு வீரதீரக் காரியத்தைச் செய்துமுடித்தவர்கள் போல தம்மைச் சுற்றியிருந்த நண்பர்கள் மீது பெருமை கலந்த பார்வையை படர விட்டுக்கொண்டிருந்தனர். முட்கம்பி சுற்றியிருப்பது போன்ற வடிவம், விலங்குகளின் உருவங்கள், தமக்குப் பிரியமானவர்களின் பெயர்கள் என அவர்களது தேகம் சிகிரியாவின் சித்திரச்சுவர் போல் மாறியிருந்தது.

நிரம்பி வழிகின்ற கூட்டத்தால் பச்சை குத்திக் கொண்டிருந்தவர்களுக்கு நிமிரக் கூட நேரமில்லை. கையில் இருந்த ஊசியை ஒரு நிமிடம் கூட கீழே வைக்காமல் தொடர்ச்சியாகப் பச்சை குத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர். 5 அல்லது 6 நிமிடங்களுக்குள் ஒருவருக்கு பச்சை குத்திமுடிந்துவிடும். அதன் பின் அதே ஊசியால், அதே மையால் வரிசையில் காத்திருக்கும் அடுத்த இளைஞருக்கு வடிவங்களை வரையத் தொடங்கிவிடுவார்கள். தமிழ் இளைஞர்கள் மாத்திரமல்லாது . விடுமுறைக் காலத்தை கழிக்கும் வகையில் யாழ்ப்பாணத்தில் சுற்றுலா வந்திருந்த தென்னிலங்கை இளைஞர்களும், புலம்பெயரிகளும் கூட இந்தப் பச்சை குத்தும் படலத்தில் பங்கேற்றிருந்தனர்.

பச்சை குத்துதல் என்பது பாரம்பரியமாக நம்மிடையே இருந்த ஒன்றுதான். சில பெருசுகளின் கைகளில் கிறீஸ் கத்தி, கடவுளர்களின் உருவங்கள், வேல் எனப் பல்வகையான பச்சைகளைக் காணமுடியும்.அந்தக் காலத்தில் அவர்கள் மைனர்களாக அல்லது சண்டியர்களாக உலா வந்ததற்கு இந்தப் பச்சைகளே இன்றைக்கு சாட்சிகளாக எஞ்சியிருக்கின்றன. பச்சை குத்தப்பட்ட உருவங்களைத் தடவிக்கொண்டே தமது பழைய வீர தீரப் பிரதாபங்களைப் பெருசுகள் அவிழ்த்துவிடுவதை அநேகர் அனுபவித்திருக்க முடியும். நாகரிகம் என்பது ஒரு சக்கரம் அதன் சுழற்சியில் சிலகாலமாக மறைந்துபோன பச்சை குத்தும் கலாசாரம் இப்போது 'டாட்டூ' என்ற பதத்தோடு மீண்டும் விஸ்வரூபம் எடுத்திருக்கிறது.

அதன் பெறுபேறே தமது புஜங்களில் பச்சை குத்த அலைமோதுகின்ற இளைஞர் கூட்டம்.

ஆனால் இந்த நாகரிக ஆசையில் ஓர் ஆபத்தும் இருக்கிறது. முன்னைய காலங்களை விடவும் நாம் எந்தளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறோமோ அந்தளவுக்கு புதிய சவால்களையும், நெருக்கடிகளையும் சந்திக்கவேண்டியிருக்கிறது. அதில் முக்கியமானது ஆள் கொல்லி நோய் என வர்ணிக்கப்படுகின்ற எய்ட்ஸ். பாதுகாப்பற்ற முறையில் நல்லூரில் மேற்கொள்ளப்படுகின்ற பச்சை குத்துதல் இந்த எய்ட்ஸ் நோயின் பரம்பலுக்கு ஏதுவாக அமைந்துவிடக் கூடும் எனப் பலரும் அஞ்சுகின்றனர். ஏனெனில் ஒருவரின் உடலில் புகுந்து வெளியேறும் இந்த ஊசிகள் எதுவித சுத்திகரிப்புக்கும் உள்ளாகாமல் அடுத்த நொடியே இன்னொருவருக்கு பச்சை குத்துவதற்காக இன்னொருவரின் உடலில் ஊடுருவிவிடும்.

இதன்போது முதலில் பச்சை குத்திக் கொண்டவர் எய்ட்ஸ் தாக்கத்துக்கு உட்பட்டவராக இருந்தால் அவருக்கு அடுத்ததாகப் பச்சை குத்திக் கொள்பவருக்கு இலவச இணைப்பாக எய்ட்ஸ் நோய் எந்த வித சந்தேகமும் இல்லாமல் வழங்கப்பட்டுவிடும். நல்லூரில் ஒரு கச்சான் கடை வைப்பதற்கே ஆயிரத்தெட்டு "றூள்சுகளை" விதிப்பவர்கள் உயிரையே காவு கொள்ளக்கூடிய நோய்களைப் பரப்பக் கூடிய பச்சை குத்துதல் போன்ற செயல்களைத் தடுத்து நிறுத்தாமல் இருப்பது வேடிக்கையானதுதான்.

ஆனால் இந்த விட்டேத்தித்தனம் எதிர்காலத்தில் தீர்க்கவே முடியாத பிரச்சினையாக உருவெடுக்கும் போதுதான் அதன் வீரியம் இந்த அதிகாரக்குஞ்சுகளுக்கு உறைக்கும். ஏனெனில் எய்ட்ஸ் என்பது வெள்ளைக்காரர்களின் வியாதி என்ற காலம் மலையேறிவிட்டது. அடுத்தடுத்து யாழ்ப்பாணத்தில் எய்ட்ஸ் பாதிப்புக்குள்ளானோர் கண்டுபிடிக்கப்பட்டு வருவது, ஆபத்து நம்மை நெருங்கிவருவதற்கான அபாயமணியை ஒலிக்கச் செய்து விட்டது. இனியும் செவிடர் களாக இருப்போமானால் ஆபத்தை தவிர்க்க முடியாமலே போய்விடும்.

# சிறுகதை இலக்கியப் பயிலரங்கில் ஆர்வமுள்ளோர் பங்கு பற்றலாம்

யாழ்ப்பாணம், ஓக.24

வலிகாமம் கிழக்கு பிரதேச பண்பாட்டுப் பேரவையால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி "சிறுகதை இலக்கியத்துக்கான பயிலரங்கு" நிகழ்வு நடைபெறவுள்ளது. இதில் ஆர்வமுடையவர்கள் அனைவரும் கலந்துகொள்ள முடியும். ஆர்வமுள்ளவர்கள் இதற்கான விண்ணப்பப்படிவத்தை பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

அல்லது தமது சுயவிவரங்களை அந்தந்த கிராம சேவகர் பிரிவுகளிலும், பிரதேச செயலர், பிரதேச செயலகம், கோப்பாய் எனும் முகவரிக்கு தபால் மூலமாக அனுப்பி வைக்குமாறு கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ம-313)

## கண்ணீர் அஞ்சலி



தீவகம் தெற்குக் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் யாழ்.மாவட்ட கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினருமான பா.தவபாலன் அவர்களின் பாசமிகு தாய்

திருமதி பாலசிங்கம் சொர்ணம்மா

21.08.2011 ஞாயிற்றுக்கிழமை காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர்களும், பணியாளர்களும்.
யாழ்.மாவட்ட கால்நடை
வளர்ப்போர்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி/3253)(38)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கதிரிப்பிள்ளை
சின்னத்தம்பி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 09.08.1936 | 03.09.2010 |

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு என்றென்றும் இருக்கும்
கருணை நிறைந்த உங்கள் முகம் காண
நித்தம் நித்தம் ஏங்குகின்றோம்.

இன்று (24.08.2011) புதன்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி கிழக்கு,
கைதடி. (7241)(38)

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## கார் விற்பனைக்கு

சொந்தப்பாவனையில் உள்ள 3 சிறி XXXX தொடரிலக்கமுடைய மொறிஸ் மைனர் (1000 மொடல்)நல்ல நிலையில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:0212225787

(7033)

## தவறிவிட்டது

பிள்ளையார் வீதி, திருநெல்வேலி எனும் முகவரியைச் சேர்ந்த சுந்தரம் பிறேமச்சந்திரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை [763054314V] கடந்த [15.08.2011] அன்று நல்லூருக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிபிட்ட முகவரிக்கு ஒப்படைத்து உதவவும்.

வாய்பேச முடியாத காரணத்தால் தயவுசெய்து மேற்காணும் முகவரிக்கு ஒப்படைத்து உதவவும்.

## வேலை ஆள் தேவை

ஊதுபத்தி உற்பத்தி ஸ்தாபனத்துக்கு ஊதுபத்தி உருட்டும் வேலையில் முன் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.

(கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது)

அன்னா கோப்பி,
திருமுருகண்டி,ஏ-9 வீதி,கிளிநொச்சி.

## அண்ணா கோப்பி விற்பனை நிலையம்- நல்லூர்

நல்லூர் பின் வீதியில் அமைந்திருக்கும் அண்ணா கோப்பி, அண்ணா உற்பத்திப் பொருள்களை எமது விற்பனை நிலையத்தில் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அண்ணா கோப்பி
[illegible]

## கைதவறி விட்டது

பொன்னம்பலம் தர்மராசா என்பவரது மோட்டார் சைக்கிள் வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன உள்ளடங்கிய கவர் நீர்வேலிக்கும் ஆவரங்காலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

பொ.தர்மராசா,
அச்சுவேலி ப.நோ.கூ.சங்க தலைமை அலுவலகம், புத்தூர்.
021 321 5262

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05 | 03 |
| ★ | ★ |
| 10 | 09 |
| ★ | ★ |
| 1939 | 2010 |



அமரர் சரஸ்வதி யோகரட்ணம்

திதி: தசமி (24.08.2011)

தாய் தந்தைக்குப் பிள்ளையாய் கணவனுக்குத் தாரமாய்
பிள்ளைகளுக்குத் தாயாய் மருமகனுக்கு மாமியாய்
பேரர்களுக்குப் பேர்த்தியாய் எடுத்த பொறுப்பெல்லாம்
எள்ளளவும் பிசகாமல் எளிதாகச் செய்து முடித்து
எமை விட்டுப் பிரிந்து ஆனதுவோ ஓராண்டு
ஆறவில்லை எம் துயரம்... அகிலமதில் உங்கள் பிரிவால்....
உங்கள் ஆத்மா அமைதியும் சாந்தியும் பெற
ஆராதித்து நிற்கின்றோம் துதிக்கின்றோம் ஆராதிக்கின்றோம்
உங்களை நினைத்து உருகி இதய தீபமேற்றும்.....

40/21, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(7242(38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதிய வரவு வெளிவந்துவிட்டது**

யாழின் முன்னணி ஆசிரியர் S.Y. அருட்செல்வம் எழுதிய தரம் 9, 10,11 மற்றும் A/L வகுப்பிற்குரிய

**இலங்கை வரலாறு**

வினாவிடைத் தொகுப்பு 620 பிரதான வினாக்களுடன் 1500 உப வினாக்களை உள்ளடக்கியதாக தயாரிக் கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தின் அனைத்து பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

"பரீட்சையை சாதகமாக எதிர்கொண்டு வெற்றிபெற சிறந்த வழிகாட்டி"

# யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு சங்கம் அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக.24

யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பழைய மாணவர் சங்கம் அமைக்கப்பட வேண்டும் என்று கல்லூரியின் நலன் விரும்பிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 50 வருடங்களாக தமிழ் மக்களின் நலன்கருதி முதன் முதல் தமிழ்மொழி மூல தாதியர் பயிற்சிக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2500 இற்கும் மேற்பட்ட தாதிய மாணவர்கள் உட்பட ஏனைய உத்தியோகத்தர்களும் பயிற்சிகள் பெற்று கல்லூரியை விட்டு வெளியேறியுள்ளனர்.

எனினும் இவர்கள் தமது கடமைகள் நிமித்தம் யாழ். மாவட்டம், ஏனைய மாவட்டங்கள், வெளிநாடுகளிலும் வேலை செய்து வருகின்றார்கள்.

ஆனால் இந்த 50 வருட காலத்தில் பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்படாமை கல்லூரியின் வளர்ச்சியைப் பாதிப்படையச் செய்துள்ளது.

நேற்று முன்தினம் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் பொன்விழா நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றபோது நலன் விரும்பிகளால் இந்தக்கருத்து முன்வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரபல வர்த்தகர்கள் உட்பட வெளிநாடுகளில் வதியும் பழைய மாணவர்கள் பலரும் கலந்து கொண்டதுடன், கல்லூரியின் முன்னாள் அதிபர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ம-313)

**காணி விற்பனைக்கு**

சோமசுந்தரம் வீதி, சுண்டுக்குளியில் 4 ½ பரப்பு காணிவீட்டுடன் (4 படுக்கை அறை) விற்பனைக்கு உண்டு. (புனித யோண் பொஸ்கோ பாடசாலைக்கு அருகில்) தரகர் தேவையில்லை.

தொடர்பு:0775039639

**காணி உடன் விற்பனைக்குண்டு**

கைதடி நுணாவிலில் 307-308 Km இற்கு இடையில் A9 வீதியில் இருந்து 100 m தூரத்தில் 30 பரப்புக் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.
(சக்கடத்தார் வளவின் ஒரு பகுதி)
தொடர்பு: 0213008944, 0779779173.
(7072)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 14 . 03 . 1927



உதிர்வு 25 . 07 . 2011

### திருமதி சிவலிங்கம் சரஸ்வதி (சேதம்மா)

கடந்த 25.07.2011 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.08.2011) புதன்கிழமை காலை 7 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்த நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"சேதுபதி", வதிரி. குடும்பத்தினர்.
(7219) (38)

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 06 . 02 . 1932



மறைவு 15 . 08 . 2009

### முத்தையா பாலசிங்கம்

திதி: 24.08.2011

ஈரொரு ஆண்டுகள் சென்றிடினும் ஈரம் ஆறவில்லை எம்மனதில் ஈசனைப் பிரார்த்திக்கின்றோம் உங்கள் ஆத்ம சாந்திக்காக.

நவாலி வடக்கு,
மானிப்பாய். குடும்பத்தினர்.
(7228)(38)

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயராணி வைரவப்பிள்ளை



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் பிரதான வீதி, இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயராணி வைரவப்பிள்ளை 21.08.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் வைரவப்பிள்ளையின் அன்பு மனைவியும் கமலதாஸ் (பெரியாம்பி), சிவதாஸ் (லண்டன்), சிவதர்சினி (லண்டன்), கிருஸ்ணதாஸ் (சின்னப்பா) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2011) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முள்ளானை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி,
இளவாலை. (7220)(38)

தகவல்:
வைரவப்பிள்ளை (கணவர்).

## இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு
### பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, வட மாகாண சபை
### கேள்விகளுக்கான கோரல்

| | |
|---|---|
| கடன் இலக்கமும் தலைப்பும்: | கடன்- 2626 SRI- முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகாலக் கருத்திட்டம், பகுதி C- அடிப்படைச் சமுதாயத்துக்கான சேவைகளை மேம்படுத்தல் |
| நிதி மூலம்: | இலங்கை அரசாங்கம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் மூலம் |
| கேள்வி சமர்ப்பிக்கும் திகதி: | இறுதித் திகதி: 23.09.2011 பிற்பகல் 2.00 மணி |

| இல. | ஒப்பந்த இல. | மாவட்டம் | வேலையின் பெயர் | கட்டுமானக் காலம் | கேள்விப் பிணையின் பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01. | CAREP/NPC/ID/NCB/W/9-18 | கிளிநொச்சி | புதுமுறிப்புக் குளம் புனரமைப்பு | 12 மாதங்கள் | ரூ.1.20 மில். |
| 02. | CAREP/NPC/ID/NCB/W/9-19 | முல்லைத்தீவு | தண்ணிமுறிப்பு குளம் அணைக்கட்டு வேலை புனரமைப்பு | 12 மாதங்கள் | ரூ.1.80 மில். |

1. மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சார்பாக திட்டப் பணிப்பாளர், முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகாலக் கருத்திட்டம், நீர்ப்பாசனம், வ.மா./தலைவர் கருத்திட்ட பெறுகைக்குழு அவர் கள் 02 கட்டுமான வேலைகளுக்கான மூடிய கேள்விகளைக் கோருகிறார். வேலைகளின் பெயர்கள், கட்டுமானக் காலம், கேள்விப் பிணையின் பெறுமதி என்பன மேலே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

2. கேள்வியாளர்களுக்கான முதன்மை தகுதிகாண் காரணிகள், கேள்விப்பத்திரத்தினை ஆங்கிலத்தில் பெற்றுக்கொள்வதற்கு கேள்வியாளர்கள் செய்யவேண்டியவை, கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்தல் திறத்தல், கேள்விப் பிணை, கேள்வி விளக்கக்கூட்டம் என்பன தொடர்பான மேலதிக விவரங்களை கேள்வியா ளர்கள் 24.08.2011ஆம் திகதிகளில் Daily News பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள கேள்வியாளர்களுக்கான கோரலை பார்வையிடுவதன் மூலம் அறிந்துகொள்ளலாம். அல்லது பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்வதன் மூலமும் அறிந்துகொள்ளலாம்.

எந்திரி க.சோ.சிவபாதம், திட்டப்பணிப்பாளர்,
முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகாலக் கருத்திட்டம்,
நீர்ப்பாசனத் திணைக்களம், வ.மா., கச்சேரி ஒழுங்கை, கிளிநொச்சி.

தொலை பேசி இல.: 0212285472
தொலை நகல் இல.: 0212285440 மின் அஞ்சல்: npirri@sltnet.lk (சி/3247) (38)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 ★ 05 ★ 1947



உதிர்வு 03 ★ 09 ★ 2010

### குணரத்தினம் சந்திராதேவி

ஓராண்டு கடந்து போனது அம்மா!
இன்றோடு உங்கள் நினைவில்
எங்கள் இதயம் துடிக்கிறது அம்மா!

எங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டிய
அன்னையே இன்று உங்களைக்காண
நெஞ்சம் துடிக்கிறது தேடுகிறது அன்னையே!

மீண்டும் வருவீர்கள் என நம்பிக்கையில்
மறு ஜென்மத்தில் உங்களைச் சீராட்டும்
அன்னையாக நாம் பிறக்க வேண்டும் அன்னையே!

கனகன்புளியடி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
மோகனதாஸ் (மகன்).
(7213) (45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 130 வருடங்கள் பழைமை வாய்ந்த வேலணை ஸ்ரீமுத்துமாரி அம்மன் கோயில்



அன்னை பராசக்தியை பல்வேறு திருக்கோலங்களில் தொழுவது மக்கள் மத்தியில் காணப்படும் சிறப்பம்சமாகும். காளியை துர்க்கை, முத்துமாரி என்றும் அழைப்பதுண்டு. பண்டைய காலத்தில் எம்மைப் பீடிக்கும் தொற்று நோய் பஞ்சம், வரட்சி போன்றவற்றில் இருந்து பாதுகாக்கும் முத்துமாரி என்ற மூர்த்தத்திலேயே அம்பிகை வழிபாடும் இருந்துள்ளது என்பதற்குப் போதுமான சான்றுகள் உள்ளன.

அந்த வகையில் பிரசித்திபெற்ற ஆலயங்களில் வேலணை பெருங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலயம் இந்தப் பகுதியில் பிரசித்தி பெற்ற ஓர் ஆலயமாக இன்றும் இருந்து வருகின்றது. வேலணை கிழக்கில் உள்ள இந்த ஆலயம் ஒல்லாந்தர் காலத்துப் பழைமை மிக்கதாகும். அரச பதிவேடுகளின்படி இந்த ஆலயத்தில் தற்போதுள்ள கர்ப்பக்கிரகம் 1875 ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகத் தெரிகின்றது.

ஆனால் ஆலயம் எப்போது ஸ்தாபிக்கப்பட்டதென்பதையும் தற்போது அமைந்துள்ள இடத்திலேயே ஆதியிலும் அது இருந்ததா என்பது குறித்தும் எதுவும் உறுதியாகக் கூறமுடியாதிருப்பதாக அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர். உலகிலுள்ள ஏனைய மக்கள் தமது வரலாற்று நிகழ்வுகளை பலதரப்பட்ட குறிப்புக்களாக ஏட்டுச் சுவடி, கற்கள் என்பவற்றில் எழுதிச் செல்ல தமிழ் மக்கள் அவ்வாறு தமது பழைமை குறித்த சான்றுகளை ஆவணப்படுத்த முன்வராமையினால் தமிழர்கள் இதிகாச உணர்ச்சியற்றவர்கள் என்று ஆய்வாளர்கள் கணிப்பதில் உண்மை இல்லாமலும் இல்லை. எனினும் பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோயில் குறித்த வரலாறு தமது முன்னோர்களால் கைவிடப்படவில்லை என்பதில் வேலணை மக்கள் திருப்தியடைகின்றனர்.

ஒல்லாந்தர் காலத்தில் பெருங்குளம் வட பகுதிக் கரையோரமாக கட்டை மாதன் என்பவன் கற்புலம் என்னும் பகுதியில் நொச்சி, ஆலமரம் ஆகியவற்றின் புதரில் முத்துமாரி அம்மனின் சிலையைக் கண்டெடுத்தான். ஊர் மக்களை ஒன்று திரட்டி அங்கிருந்து அதனை எடுத்துச் சென்று தற்போது உள்ள ஆலயத்தின் தெற்குப் பகுதியில் உள்ள நெடுங்கேணி என்னும் பகுதியில் குடிசை அமைத்து அந்தச் சிலையை வைத்து வழிபட்டான். பின்னர் அந்தச்சிலை அங்கிருந்து எடுத்து வரப்பட்டு தற்போது உள்ள இடத்தில் வைக்கப்பட்டது என்பது கர்ண பரம்பரைக் கதையாகும். பழைய ஆலயத்தின் நிலை என்ன என்பது புதிராகவே உள்ளது. பழைய கோயில் போர்த்துக்கேயர் காலத்தைச் சேர்ந்தது என்பதும் அது அழிக்கப்பட்டிருக்கலாம். அப்போது வாழ்ந்தவர்கள் சிலையை யாருக்கும் தெரியாமல் நொச்சிப் புதரினுள் மறைத்திருக்கலாம். 18 ஆம் நூற்றாண்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்தச் சிலை பின்னர் 19 ஆம் நூற்றாண்டில் கட்டை மாதனால் கண்டெடுக்கப்பட்டதாகவும் பின்னர் புங்குடுதீவைச் சேர்ந்த காசித்தம்பி என்பவரின் கனவில் அம்பாள் தோன்றி புதிய ஆலயத்தை அமைக்கச் செய்ததாகவும் கூறப்படுகின்றது.

காசித்தம்பி கட்டிய கோயில் எண்பது ஆண்டுகளாக நிலைபெற்றிருந்தது. 1875 ஆம் ஆண் டில் யாதவராயர் இராமநாதர் என்பவர் அந்த ஆலயத்தை இடித்து அதே இடத்தில் தூபி, அர்த்த மண்டபம், சபா மண்டபம், மாமண்டபம் கொண்டதாக புதிய ஆலயம் அமைக்கப்பட்டது. ஆலய புனரமைப்பில் க.ஆறுமுகத்தார், வைரமுத்தர், க.வைரவநாதர், வேலணையைச் சேர்ந்தவிஸ்வகர்ம குல திலகர்கள், செட்டிய புலத்து பரதகுல திலகர்கள் பெரும் பங்கு வகித்திருந்தனர்.

இந்த ஆலயம் பலதடவைகள் இடித்துக் கட்டப்பட்டுள்ளது. 1930 இல் மீண்டும் இராமலிங்க உடையாரால் புதிய ஆலயம் கட்டப்பட்டது. இந்தத் திருப்பணி வேலையில் திருத்தொண்டர் பிள்ளையான் ஆற்றிய பணி முக்கியத்துவம் பெற்றிருந்தது. திருப்பணி வேலைகள் இடம்பெற்று 1936 இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1948 இல் தெப்பக்குளம், நால்வர் மடம் என்பன செல்லப்பா சுவாமியால் அமைக்கப்பட்டு அம்பாள் சந்நிதானம் பொலிவுற்றது.

1957 இல் சோமசுந்தரப் புலவர், நவநீத கிருஷ்ணபாரதியார், வித்துவ சிரோன்மணி கணேசையர் ஆகியோர் ஆலயம் குறித்த தோத்திரப் பாடல்களை எழுதியுள்ளனர். இவை அச்சில் வெளிவந்துள்ளன என்று 1973இல் வெளிவந்த வேலணை பெருங்குளம் ஸ்ரீமுத்துமாரி அம்மன் புதிய தேர் என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பெருங்குளம் ஆலய உற்சவ காலங்களில் கவனிக்கப்பட வேண்டிய கருமங்களுக்காக தொண்டர் சபை அமைக்கப்பட்டு இன்று வரை அது திருவிழாக் காலப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

1967 இல் வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபராக இருந்த செ.சிவஞானம் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த வ.நவரத்தினம், பண்டிதர் கா.பொ.இரத்தினம், சட்டத்தரணி என்.ரி.சிவஞானம், க.சதாசிவம், தீவுப் பகுதி காரியாதிகாரி சு.விநாயகலிங்கம் ஆகியோர் கொண்ட கூட்டத்தில் முதலாவது சித்திரத்தேர் பழுதடைந்ததை அடுத்து அம்பாளுக்கு புதிய சித்திரத்தேர் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

லக்ஸ்மன்

இதன் வெள்ளோட்டம் 1973 இல் இடம்பெற்றது. அதன் பின்னர் அம்பாள், பிள்ளையார், முருகன் மூன்று தேர்களில் வீதியுலா வந்து அடியார்களுக்கு அருளாசி வழங்கும் வழமை ஏற்படுத்தப்பட்டது.

தற்போது ஆலயங்களில் அன்னதானப் பணிகள் இடம்பெறுவது வழமையானதாகும். 2002 ஆம் ஆண்டு முதல் பிரதி வெள்ளிக்கிழமைகளில் இங்கு இடம் பெறும் அன்னதானத்தில் பெருமளவு மக்கள் கலந்து கொள்கிறார்கள். வேலணையில் உள்ள அனைத்து மக்களுக்கு இது முக்கியமான ஆலயம் என்பதால் உற்சவ காலங்களில் அனைத்து கிராம மக்களும் தேவையான பொருள்களை வழங்குகின்றனர்.

இந்த ஆலயம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாக புங்குடுதீவு கண்ணகி அம்மன், நயினை ஸ்ரீ நாக பூசணி அம்மன், காரைநகர் சிவன் கோயில்களின் வரலாற்று வரிசையில் இடம்பெறுகின்றது.

வேலணைக் கிராமத்தில் இடம்பெறும் அறப் பணிகளிலும் முத்துமாரி அம்மன் ஆலயம் முதன்மை வகிக்கின்றது. தற்சமயம் இந்த ஆலயத்தில் புதிதாக இராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு உள்ளூர், வெளிநாடுகளைச் சேர்ந்த புலம் பெயர்ந்த மக்கள் தமது பங்களிப்பைத் தாராளமாகவே வழங்கியுள்ளனர். இலங்கையின் வேறுபகுதிகளில் காண முடியாதவாறு பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம் பெருங்குளத்தின் நீர்ப்பரப்பு நால்வர் மடம், தெப்பக்குளம், தில்லையம்பலம் மடம், மகா வித்தியாலயம் இவற்றின் நடு நாயகமாக நிமிர்ந்து நிற்பது அவ்வூர் மக்களுக்கு அருள் பொழிவதே இதன் சிறப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தன்

## மஹோற்சவம்




முருகா... முருகா...
முருகா... முருகா...
நல்லூர் முருகா...
நல்லூர் முருகா...

உன் நாமம் உச்சரிப்பில் -உன்
நல்லூர் மண் தெரியுதப்பா
உன் நாமம் உச்சரிப்பில் உன்
அருள் ஒளி தெரியுதப்பா

நல்லூர்தனில் வீற்றிருந்து
எந்நாளும் நல்வழி காட்டுகின்றாய்
எம் வாழ்வு சிறப்புற
எந்நாளும் உன் ஒளி தருகின்றாய்

நல்லூர் தனில் வீற்றிருந்து
அழைக்கின்றாய் எம்மை
நாம் கேட்கும் வரங்களை
தந்தருள்கின்றாய் எமக்கு

நல்லூர்தனில் வீற்றிருந்து
காக்கின்றாய் எம்மை
நாம் காணும் இன்பமாய்
தோன்றுகின்றாய் எம்முன்



உன் மண் நல்லூரில் நாம் வாழ்ந்து
உன் பெருமை பாட வந்தோம் நாம்
என்றென்றும் எம்மை விட்டகலா நல்லூர் முருகா
என்றென்றும் எம் தொண்டுகள் உனக்கே

எம்முடன் வாழும் முருகா - உனக்கே
எம் வந்தனம்
எமக்கென்றும் அருளும் முருகா - உனக்கே
எம் நன்றிகள்

சு.மகேஸ்வரன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

## கலாசார ஆடைகட்டி கந்தனைத் தொழுவோம் வாரீர்

கலாசார ஆடை கட்டி கந்தனைத் தொழுவோம்
காலமெல்லாம் கந்தன் புகழ்பாடி உயர்ந்திடுவோம்
நிலவிடும் அச்சம் போக்கு நிம்மதிகள் சேர்ப்போம்
நிரந்தர தீர்வுக்காக எல்லோரும் உழைப்போம்
வலம் வரும் வீதியில் கலாசாரம் பேணிட எழுவோம்
வாஞ்சையாம் எம் தமிழ்ப் பண்பாட்டை பேணுவோம்
உளம் மறவா கந்தனைத் தொழுது உயர்வோம்
ஊரெல்லாம் போற்றிட உயர் தமிழ்ப்பண்பாட்டில் நிமிர்வோம்.

மதுரகவி காரை, எம்.பி. அருளானந்தன்

## அருள் ஆர்ப்பரிக்க வா முருகா

என்னையும் கண்மலர்ந்து பாராயோ - நல்லை
கோயிலழகா கருணை மனங்கனிந்தே
வண்ணமயில் வாகனனே வடிவேலா - பாவ
விமோசன வரம்தா வேண்டினேன்

ஆனந்த உற்சவ கோலாகலா - அருள்
ஆர்ப்பரிக்க வருவாய் வீதியுலா
வானவர்க்கு வாழ்வளித்த சிவபாலா - வேண்டும்
வரந்தருவாய் பன்னிரு விழியழகா

அல்வாயூர் சி. சிவநேசன்

## பன்னிரு விழிகளில் என்றும் அருள் கடாட்சம்

நல்லைக் கந்தனுக்குத் திருவிழா
யாழ் நகர் மக்களுக்குப் பெருவிழா
பன்னிரு கரத்தானை வழிபட வீதியெங்கும் சனக்கூட்டம்
பக்தர்கள் இதயமோ அவன் மேல் என்றும் நாட்டம்
ஆலய வீதியெங்கும் அன்னதான நிகழ்வுகள்
நகர வீதிகளில் தாக சாந்தி நிலையங்கள்
அடியார்கள் வாய்களிலோ அரோகரா முழக்கம்
அவன் பன்னிரு விழிகளில் என்றும் அருட்கடாட்சம்.

சொ. தர்மகுலசிங்கம், நாயன்மார்கட்டு.

திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போம்
R.G.Traders
Navam's Building,
No.291, Stanly Road, Jaffna. 021 222 6185

# பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து செயற்பட அமைச்சர் பஸில் வேண்டுகோள்

கொழும்பு, ஓக. 24

பொதுமக்களும், பொலிஸாரும் இணைந்து பிரதேசங்களில் சமாதானத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்பட வேண்டும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப் படுத்தப்படவுள்ள வேலைத் திட்டம் குறித்து விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:-

யுத்தத்தின்போது கடந்த காலங்களில் எல்லைக் கிராமத்தில் வாழ்ந்த புத்தளம் மக்கள் அச்சம் கொள்ளாதவர்களாக இருந்தனர். தற்போது ஏற்பட்டுள்ள இல்லாத மாயை ஒன்றுக்கு அவர்கள் ஒருபோதும் அச்சம் கொள்ளமாட்டார்கள்.

சில சக்திகள் அரசுக்கு எதிராகச் செயற்படுகின்றன. அவற்றின் செயற்பாடுகளில் ஒன்றாகத்தான் இதனைக் காண முடிகின்றது. அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் மக்களை சென்றடைவதைத் தடுப்பதற்கான மற்றுமொரு செயற்பாடே இதுவாகும்.

பிரதேசத்தில் அபிவிருத்தியை மேற்கொள்ள அமைதியான சூழல் காணப்பட வேண்டும். அதனை ஏற்படுத்துவதற்கு மக்கள் பிரதிநிதிகளும், அரச அதிகாரிகளும் முன்னிற்க வேண்டும். இவ்வாறான போலிப் பிரசாரங்களுக்கு செவிமடுக்காமல் மக்கள் தமது அன்றாடச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்- என்றார். (ச)

# கைதிகள் இந்தியாவுக்கு புனித யாத்திரை

கொழும்பு, ஓக. 24

சிறைச்சாலைகளில் மதப்பற்றுள்ள மற்றும் நன்னடத்தையுடைய 25 கைதிகளுக்கு இந்தியாவிலுள்ள தம்ப திவவுக்கு புனித யாத்திரை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்படுமென சிறைச்சாலைகள் புனருத்தாபன மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

11ஆவது தேசிய சிறைக்கைதிகள் தினத்தையொட்டி எதிர்வரும் 12ஆம் திகதி இப்புனித யாத்திரையை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (சி)

# தரம் குறைந்த பெற்றோல் குறித்த முறைப்பாட்டு மனு சட்டப் பிரிவுக்கு

கொழும்பு, ஓக.24

தரம் குறைந்த பெற்றோல் விநியோகிக்கப்பட்டமை தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள மனு மற்றும் அது தொடர்பான ஆவணங்களை சட்டப் பிரிவுக்கு அனுப்பி அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கு லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன் சட்ட நிலைமை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை ஒன்றை தயாரிக்குமாறு சட்டப் பிரிவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என ஆணைக்குழுவின் தலைவர் ஜகத் பாலபட்ட பெந்தி தெரிவித்தார்.

அதேவேளை,தரம் குறைந்த பெற்றோல் விநியோகிக்கப்பட்டமை தொடர்பாக கடந்த வாரம் ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிநிதிகள் லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் மனுவொன்றை சமர்ப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# அவசரகாலச் சட்ட நீடிப்புக்கே கிறீஸ் பூதம் என்ற நாடகம்

## ஜயலத் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக.24

அவசரகாலச் சட்டத்தை நீக்கும்படி சர்வதேசம் அழுத்தம் கொடுத்து வருவதால் அதனை நீடிப்பதற்காகவே அரசு கிறீஸ் பூதங்களை கட்டவிழ்த்து விட்டிருக்கிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன குற்றம்சாட்டியுள்ளார்.

கிறீஸ் பூதம் விவகாரம், காஸ் விலை உயர்வுஎன்பன தொடர்பாகக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:

கிறீஸ் பூதங்கள் விவகாரத்தில் மக்களைத் திசைதிருப்பி அத்தியாவசியப் பொருள்களின் விலையை அதிகரிக்க அரசு முயற்சிக்கின்றது.

நாட்டில் சட்டமும், ஒழுங்கும் இல்லை. இங்கு காட்டுச் சட்டமே நிலவுகின்றது. சர்வாதிகாரத்தின் தோற்றமே இது.

அண்மைக்காலமாக நாட்டில் கிறீஸ் பூதங்கள் என்ற நாடகம் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டு வருகின்றது. இதன் பின்னணியில் அரசே செயற்படுகின்றது.

நாட்டில் அமைதியையும், ஒழுக்கத்தையும் கட்டிக்காக்கும் பொறுப்புடைய பொலிஸார் இந்த விடயத்தில் மௌனம் காப்பது எமக்கு சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

அவசரகாலச் சட்டத்தை நீக்கப் போகின்றோம் என அரசு கூறுகின்றது. ஆனால் அதற்கு அப்படியான தொரு நோக்கமில்லை. மாறாக அதனை நீடிக்கவே முயற்சிக்கின்றது. இதன் பொருட்டே கிறீஸ் பூதங்கள் என்றதொரு மாயையை ஏற்படுத்தி நாட்டில் பதற்றம் நிலவுகின்றது எனக் காட்டி அவசரகாலச்சட்டத்தை நீடிக்க அரசு முனைகிறது. அரசின் நடவடிக்கைகளும் இதனை நிரூபிக்கும்வகையில் அமைந்துள்ளன.

அதுமட்டுமன்றி மக்களின் கவனமெல்லாம் மர்ம மனிதன் பக்கம் திரும்பியுள்ள நிலையில் அரசு காஸ் விலையை உயர்த்தியது. இன்னும் சில நாள்களில் ஏனைய பொருள்களின் விலைகளும் அதிகரிக்கும். இவ்வாறான தொரு நிலையில் மக்களால் இவற்றுக்கு எதிராகக் குரல் எழுப்ப முடியாது. அபிவிருத்தி என்ற நிலையில்அரசு கோடிக்கணக்கில் கொள்ளையடிக்கின்றது - என்றார். (சி)

# இராணுவம் குவிப்புக்கு அரசு விளக்கம்

கொழும்பு, ஓக. 24

சந்தேக நபர்களைக் கைது செய்ய முயற்சிக்கும் பொலிஸாரை பொதுமக்கள் தாக்குகின்ற காரணத்தினாலேயே அந்தப் பிரதேசங்களில் இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அரசு தெரிவித்துள்ளது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் இராணுவத்தினரை கடமையில் ஈடுபடுத்த முடியும் என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

கிழக்கில் முஸ்லிம் குழுக்களும் மலையகத்தில் உள்ள தமிழ் மக்களும் மோதல்களில் ஈடுபட்டதால்தான் இராணுவத்தினர் பாதுகாப்புக்காக கடமையில் ஈடுபடுத்தப்படுகின்றனர் எனவும் அவர் கூறினார்.

நாட்டின் பல பகுதிகளிலும் மர்ம நடவடிக்கைகள் தொடர்பில் 47 பேருக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டு அவர்களில் பலர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)





பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாங்குளம் மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராகக் கடமையாற்றிய
திரு.கந்தசாமி சக்திதரன்
அவர்கள் துனுக்காய் கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். அவர் தொடர்ந்தும் மேன்மேலும் பதவி உயர்வு பெறுவதற்காக மனசீசமாக பாராட்டி வாழ்த்துகின்றோம்

பழைய மாணவர் சங்கம்,
மாங்குளம் மகாவித்தியாலயம்.
(7236)

75ஆவது பிறந்தநாள் வாழ்த்து (பவள விழா)

24.08.2011



திருமதி கந்தசாமி தையல்நாயகி
யாழ்ப்பாணம்

இன்று (24.08.2011) புதன்கிழமை தனது 75ஆவது அகவையில் பவளவிழாக் காணும் நாயகியாகிய திருமதி கந்தசாமி தையல்நாயகி அவர்களை கொண்டாடி விநாயகர் ஆசியுடன் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

இல. 16,கனகசபை அவெனியூ,
யாழ்ப்பாணம்.

வாழ்த்துபவர்கள்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மணமங்கல வெள்ளி விழா வாழ்த்து



நயினாதீவு, 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தோரும், தற்போது நாவலர் வீதி, ஆனைப்பந்தியில் வசிப்போருமாகிய
திரு.திருமதி இராசலிங்கம் நேசமலர்
தம்பதியினர் இன்று (24.08.2011) புதன்கிழமை தம் இல்லற வாழ்வில் வெள்ளி விழா காணுகின்றனர். இவர்கள் நயினை நாகபூசணி அம்பாளின் துணையுடன் பல்லாண்டு காலம் இன்புற்றிருக்க வாழ்த்தி வணங்குகிறோம்.

பிள்ளைகள்-
துர்க்கா, துஷ்யா, விமலன், மயூரன், தாத்தா - S.R.முத்தையா

இல 271/1, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இனப்பிரச்சினையை என்னால் மட்டுமே தீர்க்க முடியும்

## சுப்பிரமணியம் சுவாமி கூறுகிறார்

திருப்பூர், ஒக.24

இலங்கைத் தமிழர் பிரச்சினையை என்னால் மட்டுமே தீர்த்து வைக்க முடியும் என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்தார்.

திருப்பூரில் விஸ்வ இந்து பரிஷத் சார்பில் நடந்த கிருஷ்ண ஜெயந்தி விழாப் பொதுக் கூட்டத்தில் பங்கேற்க திருப்பூருக்குச் சென்ற அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,



இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் தீர்வு காண்பதில் தோல்வி அடைந்துவிட்டதாக ம.தி.மு.க. பொதுச்செயலர் வைகோ, நெடுமாறன், சீமான் போன்றவர்கள் ஒப்புக்கொண்டால் அந்தப் பிரச்சினையை நான் தீர்த்து வைக்கிறேன். அவ்வாறு ஒப்புக்கொண்டால் நான் இலங்கை ஜனாதிபதியைச் சந்திப்பேன். இல்லையென்றால் நான் தீர்வுக்கான வழியைக் கண்ட பின்பு தாம் தான் தீர்வுகண்டதாக கூறுவார்கள்.

ஏற்கனவே முல்லை பெரியாறு பிரச்சினையில் 6 ஆண்டுகள் வழக்கு நடத்தி நீர்மட்டத்தை உயர்வடையச் செய்தேன். ஆனால் அதனை இவர்கள் செய்ததாக சொல்லிக்கொண்டார்கள். எனவே இவர்கள் தோற்று விட்டதாக ஒப்புக் கொண்டால் நான் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை தீர்த்து வைக்கிறேன்.

நாட்டில் ஊழல் அதிகமாகி காங்கிரஸ் கூட்டணியில் உள்ள பலர் திகார் சிறையில் தான் இருக்கிறார்கள். ஜன லோக்பால் மசோதாவில் ஒரு சுதந்திரமான விசாரணைக்குழு அமைக்கப்படும் என்கிற ஒரு விடயத்தை மட்டும் நான் ஆதரிக்கிறேன்.

நான் முஸ்லிம்களை சகோதரர்களாக ஏற்றுக் கொள்ளத் தயார். ஆனால் அவர்கள் தங்களது முன்னோர்கள் இந்துக்கள் தான் என்று ஒத்துக்கொள்ள வேண்டும். ராஜீவ் காந்தியை கொன்றவர்கள் இன்று கருணை மனு போடுகிறார்கள். கொலைகாரர்களுக்கு எதற்குக் கருணை காட்ட வேண்டும்- என்றார் அவர்.

# இந்திய - பாக். எல்லையில் 2,000 மனிதக் கல்லறைகள்

## விசாரணைக்கு கோருகிறது மனித உரிமை ஆணையம்

இந்தியா - பாகிஸ்தானைப் பிரிக்கும் எல்லையில் 2 ஆயிரம் அடையாளம் தெரியாத கல்லறைகள் காணப்படுவதாகவும் அவை தொடர்பாக விசாரணை நடத்துமாறும் சர்வதேச மனித உரிமைகள் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக மனித உரிமைகள் ஆணையம் விடுத்த அறிக்கையில் தெரிவித்ததாவது:

இந்தியா-பாகிஸ்தானைப் பிரிக்கும் எல்லைக்கோட்டுக்குள் அருகே உள்ள 12 இற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு சென்று 38இற்கும் மேற்பட்ட இடங்களை பார்வையிட்டோம்.

அங்கு ஏராளமான கல்லறைகள் காணப்பட்டன. அவற்றை கணக்கிட்டுப் பார்த்த போது 2 ஆயிரத்து 156 கல்லறைகள் இருப்பது தெரியவந்தது. கல்லறைகளில் புதைக்கப்பட்டு இருப்பவர்களை பற்றிய விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கிராம மக்களிடம் விசாரித்த போது அவர்களுக்கும் இது பற்றிய விவரம் தெரியவில்லை. இதன்மூலம் அடையாளம் தெரியாத உடல்கள்தான் அங்கு புதைக்கப்பட்டுள்ளன என்பது தெரிகிறது.

இந்திய அரசின் காஷ்மீர் மாநில மனித உரிமைகள் ஆணையம், அங்குள்ள நிலமைகள் குறித்து, கடந்த 3 ஆண்டுகளாக விசாரணை நடத்தி வந்தது. அனுபவம் மிக்க பொலிஸ் அதிகாரி ஒருவர் தலைமையில் 11 உறுப்பினர்களை கொண்ட இந்த குழு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று ஓர் ஆழமான விசாரணையை மேற்கொண்டது.

இந்தக் குழுவின் விசாரணை அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசைக் கவிழ்க்கும் நோக்கம் இல்லை ஹஸாரே குழு தெரிவிப்பு

டில்லி, ஒக. 24

வலுவான லோக்பால் மசோதா கோரி 7 ஆவது நாளாக அன்னா ஹஸாரே உண்ணா விரதம் இருந்துவரும் நிலையில் இந்தப் போராட்டத்தின் மூலம் அரசைக் கவிழ்க்கும் நோக்கம் எதுவும் இல்லை என்று அவரது குழுவினர் தெரிவித்தனர்.

ஒகஸ்ட் 16 ஆம் திகதியில் இருந்து டில்லி ராம்லீலா மைதானத்தில் அண்ணா ஹஸாரே உண்ணாவிரதம் இருந்து வருகிறார். இதனால் அவரது எடை 5 கிலோ அளவுக்கு குறைந்துவிட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவரது போராட்டம் தொடரும் நிலையில் அரசுத் தரப்பில் இருந்து பேச்சு தொடர்பாக எந்தத் தகவலும் இல்லை என்று அண்ணா ஹசாரே குழுவினர் தெரிவித்தனர்.

பேச்சுக்குத் தயார் என ஊடகத்திடம் பிரதமர் தெரிவித்தார். எங்கே பேச்சுக்கு வர வேண்டும்? யாரைச் சந்திக்க வேண்டும் என மீண்டும் மீண்டும் கேட்கிறோம். பதில் வரவில்லை என அரவிந்த் கேஜரிவால் தெரிவித்தார்.

# ஹசாரேவுக்கு ஆதரவாக சென்னையில் திரையுலகினர் உண்ணாவிரதப் போராட்டம்



சென்னை, ஒக.24

ஊழலுக்கு எதிரான வலுவான லோக்பால் மசோதா கோரி உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவரும் அன்னா ஹசாரேவுக்கு ஆதரவு தெரிவித்து தமிழ் திரையுலகைச் சேர்ந்த நடிகர், நடிகைகள் சென்னையில் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டுள்ளனர்.

அண்ணா மேம்பாலம் அருகில் உள்ள தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபை வளாகத்தில் காலை 9 மணிக்கு மேற்படி உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப்போராட்டத்தில் நடிகர் தியாகு, இயக்குநர்கள் மனோபாலா, சேரன், தயாரிப்பாளர்கள் சித்ராலட்சுமணன், ஸ்டன்ட் மாஸ்டர் ஜாக்குவார் தங்கம் உள்ளிட்டோர் ஹசாரேவுக்கு ஆதரவு தெரிவித்து உண்ணாவிரத பந்தலில் உரை நிகழ்த்தினர்.

எனினும் தமிழ் திரையுலகைச் சேர்ந்த முன்னணி நடிகர், நடிகைகள் யாரும் மேற்படி உண்ணாவிரதத்தில் கலந்து கொள்ளவில்லை என்று கூறப்படுகின்றது.

# 6 மாதங்களுக்குள் புதுச்சேரியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துக

## உயர் நீதிமன்றம் அறிவிப்பு

சென்னை, ஒக.24

ஆறு மாதத்துக்குள்புதுச்சேரியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்று அந்த மாநில அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் புதுச்சேரி மாநிலச் செயலாளர் வி.பெருமாள், சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

புதுச்சேரி மாநில உள்ளூராட்சி அமைப்புகள் 1880 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டவை. அத்தகைய பழம்பெருமை மிகுந்த உள்ளூராட்சி அமைப்புகளுக்கு கடந்த 1968 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல ஆண்டுகள் தேர்தல் நடத்தப்படாமல் இருந்தது.

இந்த நிலையில், உள்ளூராட்சி அமைப்புகளுக்கு உடனடியாகத் தேர்தல் நடத்த புதுச்சேரி அரசுக்கு உத்தரவிடக் கோரி கடந்த 2005 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் நான் வழக்குத் தொடர்ந்தேன். அதில் நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் அடிப்படையில், புதுச்சேரியில் 2006 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்டு 1,138 மக்கள் பிரதி நிதிகள் உள்ளூராட்சி அமைப்புகளுக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தச் சூழலில் புதுச்சேரி மாநிலத் தேர்தல் ஆணையர் கடந்த 2007ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். இதனால் 2007ஆம் ஆண்டுக்குப் பின் வெற்றிடமான உள்ளூராட்சி பதவியிடங்களுக்கு இடைத்தேர்தல் நடத்தப்படவில்லை. இதற்கிடையே 2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட உள்ளூராட்சிப் பிரதிநிதிகளின் பதவிக்காலம் அண்மையில் முடிவடைந்து விட்டது.

எனினும், மாநிலத் தேர்தல் ஆணையாளர் பொறுப்பில் யாரும் இல்லாததால் உள்ளூராட்சித் தேர்தலை நடத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மாநிலத் தேர்தல் ஆணையாளரை உடனடியாக நியமித்து, உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு புதுச்சேரி அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்று அந்த மனுவில் அவர் வலியுறுத்தியிருந்தார்.

## லோக்பால் மசோதா விவகாரம்:

# அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்தது மத்திய அரசு

டில்லி, ஒக.24

அன்னா ஹசாரேயின் உண்ணா விரதப் போராட்டத்தால் நெருக்கடி ஏற்பட்டுள்ளதையடுத்து லோக்பால் மசோதா விவகாரத்துக்கு தீர்வுகாண மத்திய அரசு இன்று அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஹசாரே குழுவினர் முன்வைக்கும் சில கோரிக்கைகள் தொடர்பாக முடிவெடுக்கும் முன் பரந்த அரசியல் கருத்தொற்றுமை தேவை என அரசு கருதுவதாகத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

லோக்பால் மசோதா குறித்து நாடாளுமன்ற நிலைக் குழுவின் தலைவருடன் பிரதமர் நேற்று விவாதித்தார்.

ஹசாரேவின் உண்ணாவிரதம் 9ஆவது நாளை எட்டியுள்ளதால் லோக்பால் மசோதா விவகாரம் தொடர்பாக முடிவெடுப்பதில் பல்வேறு வாய்ப்புகள் குறித்து அவர் விவாதித்ததாகத் தெரிகிறது.

# லோக்பால் மசோதாவை நிறைவேற்ற முடியாவிடின் ஆட்சியை விட்டு விலகுக!

## மத்திய அரசுக்கு ஹஸாரே எச்சரிக்கை

டில்லி, ஒக.24

எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் ஜன லோக்பால் மசோதாவை நிறைவேற்றுங்கள், அல்லது ஆட்சியை விட்டு விலகுங்கள் என்று அன்னா ஹஸாரே கூறினார்.

டில்லியில் ராம்லீலா மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை 6 ஆவது நாளாக உண்ணாவிரதத்தை தொடர்ந்த அவர், ஆட்சியாளர்களுக்கு இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார்.

லோக்பால் விவகாரத்தில் மத்திய அரசு, மக்களை ஏமாற்றி வருகிறது. ஊழலை எதிர்த்துப் போராடுவதில் அரசு நேர்மையாக நடந்து கொள்ளவில்லை.

ஒகஸ்ட் 30 ஆம் திகதிக்குள் ஜன லோக்பால் மசோதாவை நிறைவேற்ற வேண்டும். இல்லையெனில் இதுவரை சந்தித்திராத மாபெரும் புரட்சி வெடிக்கும். நாடு முழுவதும் புரட்சித் தீ வேகமாகப் பரவி வருகிறது. நான் உயிரோடு இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஊழலுக்கு எதிரான எனது போராட்டத்தை இளைஞர்கள் முன்னின்று நடத்த வேண்டும்.

லோக்பால் மசோதாவை வரையறுப்பது தொடர்பாக கூட்டுக் குழுவை மத்திய அரசு அமைத்தது. மசோதாவின் வரம்புகள் குறித்து அரசுத்தரப்பு குழுவுடன் 2 மாதங்களாகப் பேச்சு நடத்தியும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. மத்திய அரசு எங்களை ஏமாற்றி விட்டது. ஊழலுக்கு எதிராக 20 ஆண்டுகளாகப் போராடி வருகிறேன். சாகும்வரை எனது போராட்டம் தொடரும்.

எவ்வளவு நாளானாலும் கவலையில்லை. ஜன லோக்பால் மசோதா நிறை வேறும்வரை இந்த இடத்தைவிட்டு நகர மாட்டேன் - என்றார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம், ஒக. 24

சுழிபுரம் மேற்கு ஹரிகர புத்திர ஐயனார் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

அடுத்தமாதம் 3 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

திருவிழாக் காலத்தில் தினமும் இரவு 7 மணிக்கு ''பெரிய புராணம்'' எனும் தலைப்பில் சொல்லின் செல்வர் இரா.செல்வ வடிவேல் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்துவார். (ம-28)

***

குருநகர், ஒக. 24

குருநகர் தூய ஆரோக்கிய நாதர் ஆலயத்தின் திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

ஆலயத்தின் திருவிழா கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலை 5.15 மணிக்கு ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன.

நாளைமறுதினம் வெள்ளிக் கிழமை மாலை 5 மணிக்கு செபமாலை வழிபாடு இடம் பெறும். (ம-51)

***

தென்மராட்சி, ஒக. 24

வட்டுக்கோட்டை, அராலி மேற்கு கோட்டைக்காடு நொச்சியம்பதி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பெருந் திருவிழா கடந்த 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

கலாநிதி சிவஸ்ரீ து.கு.ஜெகதீஸ்வரன் குருக்கள் கிரியைகளை நடத்துவார். (ம-207)

***

தென்மராட்சி, ஒக.24

சாவகச்சேரி செருக்கல்பதி பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா செப்ரெம்பர் மூன்றாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

செப்ரெம்பர் மாதம் பத்தாம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் பெருந்திருவிழாக் கிரியைகள் நடைபெறும். (ம-207)

***

தென்மராட்சி, ஒக.24

கொடிகாமம் ஸ்ரீ மகா லாவண்யகாளி அம்பாள் ஆலய உத்தமோ உத்தமபட்ஷ 33 குண்ட மகா கும்பாபிஷேகம் செப்ரெம்பர் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.15 மணி முதல் நடைபெறும்.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் செப்ரெம்பர் 13 ஆம் திகதி ஆரம்பமாகும். எண்ணெய்க் காப்பு சாத்துதல் செப்ரம்பர் 15 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நடைபெறும்.

பிரதிஸ்டா பிரதம குரு கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும். (ம-207)

## உதவிக் கொடுப்பனவு

நவாலி, ஒக. 24

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொது சன மாதாந்த உதவிப் பணம் பெற்று வருபவர்களுக்கு ஒகஸ்ட் மாதத்துக்குரிய கொடுப்பனவு தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தத்தமது தபாலகங்களுக்குச் சென்று பணத்தை பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த மாதம் முதல் இவர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்ட கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப் படுகிறது. (ம-100)

## பற்றிக்ஸ் வீதி புனரமைப்பு

யாழ். சென். பற்றிக்ஸ் வீதி யாழ். மாநகரசபையால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்த வீதி மிகவும் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்பட்டமையால் பாடசாலை மாணவர்கள் உட்படப் பலரும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-51)

# சுகாதாரம் அற்ற நிலையில் அச்சுவேலி வைத்தியசாலைச் சூழல்

யாழ்ப்பாணம், ஒக.24

அச்சுவேலி வைத்தியசாலையின் சூழல் சுகாதாரமற்ற நிலையில் காணப்படுவதால் நோயாளிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் விசனம் தெரிவித்துள்ளன.

இந்த வைத்தியசாலையில் நோயாளிகளின் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் ஆண்கள், பெண்களுக்கான மலசலகூடம் கதவுகள் இன்றிக் காணப்படுகின்றன. அத்துடன் மலசலகூடம் சுகாதாரமற்ற முறையிலும் காணப்படுகின்றது.

மின்விசிறிகள் பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுவதால் விடுதிகளில் காற்றோட்ட வசதி இல்லை. இதனால் தொற்றுக் கிருமிகள் நோயாளிகளைத் தாக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதனைவிட வைத்தியசாலையின் சூழலில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. வைத்தியசாலைச் சூழல் இவ்வாறு சுகாதாரமற்ற முறையில் காணப்படுவதால் பொதுமக்கள் இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கே அஞ்சுகின்றனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-313)

# யாழ்.குடாநாட்டில் தொழிலாளர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஒக.24

யாழ்.குடாநாட்டில் வகுப்பு தொழிலாளர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால் பொது மக்களின் அத்தியாவசியப் பணிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் கூட்டுறவுக் க்ளஞ்சியங்களில் வகுப்புத் தொழிலாளர்களுக்கு பணி வெற்றிடம் காணப்படுகின்றது. இதனால் குறைந்தளவான தொழிலாளர்கள் மட்டும் பணிகளை நிறைவேற்றுவதால் பொது மக்களின் அத்தியாவசியப் பணிகள் பாதிப்படைந்துள்ளன.

இந்த ஆளணிப் பற்றாக் குறைக்குக் காரணம் வகுப்புத் தொழிலாளர்களுக்கு போதிய சம்பளம், மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப் படாமையே என்று தெரிவிக்கப்படுகின்றது.

முக்கியமாக யாழ்.நகரின் வர்த்தக நிலையங்களில் இந்த ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ம-313-26)

# வேம்படி வீதியால் பயணிப்போர் சிரமம்

யாழ்.வேம்படி வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுவதால் வாகன சாரதிகள் உட்பட பொது மக்களும் பயணம் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியினூடாக பாடசாலை மாணவர்கள் அதிகம் பயணம் செய்வதால் அடிக்கடி விபத்துக்களைச் சந்திக்க வேண்டியுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. குன்றும் குழியுமாகக் காணப்படும் இந்த வீதியின் புனரமைப்புத் தொடர்பாக உரிய அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-160)


## பாட்லீட் பினான்ஸ்

இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட முன்னேற்றகரமாக நம்பகத்தன்மையுடன் பயணித்துக் கொண்டிருக்கும், எல்லோராலும் விரும்பப்படும் நிதி நிறுவனம் பாட்லீட் நிதி நிறுவனம். இது சிறந்த வாடிக்கையாளார் தளத்தை அமைக்க பாரிய கிளையமைப்புக்களைக் கொண்டு இயங்கி வருகின்றது. இந்நிறுவனத்தில் இணைந்து பணியாற்ற விரும்பும் அர்ப்பணிப்பும் சேவை மனப்பாங்கும் கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து கீழ்கண்ட பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெற்றிடங்கள் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய இடங்களில் உண்டு.

### நிறைவேற்று அதிகாரி
(லீசிங் / குத்தகைக் கடன்கள் / நிலையான வைப்புக்கள்)

### EXECUTIVE
(Leasing / HP / Fixed Deposit)

- வயது : 30 வயதிற்குக் கீழானோர் விரும்பப்படுவர்.
- CIM/ SLIM/ கடன் முகாமைத்துவம் / வங்கியியல் துறைகளில் பகுதித் தகைமைகள் உடையோர் விரும்பப்படுவர்.
- நிதி நிறுவனம் / காப்புறுதித்துறை / வங்கித்தொழில் போன்ற துறைகளில் குறைந்தது மூன்று வருடகாலம் சேவைத்திறன்.

மாதாந்தம் எட்டப்படும் இலக்குகளை மையமாக வைத்து கொடுப்பனவுத்தொகை பேசித்தீர்மானிக்கப்படும். அத்துடன் நிறுவனத்தால் பராமரிக்கப்படும் மோட்டார் சைக்கிள் வழங்கப்படும்.

### சந்தைப்படுத்தல் உதவியாளர்
### MARKETING ASSISTANT

- வயது 23 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்கள் விரும்பத்தக்கது
- க.பொ.த (சாதாரண தரம் சித்தி) ஆங்கிலம், கணித பாடங்களில் திறமைச்சித்தி உடையோர் விரும்பப்படுவர்
- க.பொ.த உயர்தரச்சித்தி உடையோர் விரும்பப்படுவர்.

மேற்கண்ட பதவிகளுக்கான விண்ணப்பதாரிகள் கீழ்கண்ட தகமைகளைக் கட்டாயம் கொண்டிருக்க வேண்டும்.

- ஆங்கிலத்துடன் தமிழ் அல்லது சிங்களத்தில் தேர்ச்சி அவசியம்.
- கொடுக்கப்பட்ட லீசிங், குத்தகைக் கடன் இலக்குகளை அடையக்கூடிய ஆற்றல்
- கணனி அறிவு.

உங்கள் சுய விபரக் கோவைகளை இந்த விளம்பரத் திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் கிடைக்கக் கூடியதாக தங்களைப் பற்றி நன்கு அறிந்த தங்களின் உறவினரல்லாத இருவரின் பெயர் விலாசங்களுடன் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Consultant,
**Bartleet Finance PLC**
52/G/5, Second Cross Street,
Vavuniya.
E.Mail - sivapalank@bartleet.com Fax: 024-2226036

(இது ஒரு பாட்லீட் ட்ரான்ஸ்கப்பிட்டல் கம்பனி)






சீட்டிழுப்பு இலக்கம் 778 திகதி 22-08-2011

வெற்றி எண்கள்

07 38 60 61 I

ஜக்பொட் பரிசு ரூ. 13,113,400/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 13,113,400/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 16 | 50,000/= | 800,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 350 | 1,000/= | 350,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 670 | 1,000/= | 670,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15352 | 60/= | 921,120/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8368 | 40/= | 334,720/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 202104 | 20/= | 4,042,080/= |
| ஆங்கில எழுத்து | 28904 | 20/= | 578,080/= |
| | | மொத்தம் ரூ. 8,096,000/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கண்டி | 600561692-6-06 |
| கொழும்பு | 600566837-3-23 |
| திருகோணமலை | 600573022-5-15 |
| குருநாகல் | 600560454-0-20 |
| குருநாகல் | 600560522-8-48 |
| பதுளை | 600572179-0-00 |
| மட்டக்களப்பு | 600570236-8-38 |
| களுத்துறை | 600573831-0-40 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,496,000/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட
ரூ. 13,509,040/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 ஓகஸ்ட் 25 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Enriching Your Life
DEVELOPMENT LOTTERY

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிபோலியில் கடாபி இல்லை புரட்சிப் படைகள் குழப்பத்தில்

திரிபோலி,ஒக.24

லிபியத் தலைநகர் திரிபோலி புரட்சிப் படையினரால் கைபபற்றப்பட்டதையடுத்து, அந்த நாட்டு அதிபர் கடாபி என்ன ஆனார் என்று தெரியவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தலைநகர் திரிபோலியை புரட்சிப் படையினர் கைப்பற்றினர். இதையடுத்து கடாபியின் அரண்மனையை முற்றுகையிட்டு அவரது இரண்டு மகன்களை கைது செய்தனர். இன்னொரு மகனும் உளவுப் பிரிவுத் தலைவரும் இறந்த நிலையில் கண்டு பிடிக்கப்பட்டனர். அவர்கள் தற்கொலை செய்து கொண்டார்களா அல்லது புரட்சிப் படையினர் நடத்திய தாக்குதலில் பலியானார்களா என்று தெரியவில்லை.

ஆனால், அந்த அரண்மனையில் கடாபியோ அவரது மனைவியோ இல்லை. தங்களது மகள்கள், மருமகள் கள், பேரக் குழந்தைகளுடன் அவர்கள் தலைமறைவாகி விட்டதாகத் தெரிகிறது.

அவர்களைத் தென் ஆபிரிக்கா காப்பாற்றி அழைத்துச் சென்றுவிட்டதாக தகவல் பரவியுள்ளது. ஆனால், அதை அந்த நாடு மறுத்துள்ளது. திரிபோலியில் சிக்கியிருந்த தங்களது நாட்டுத் தூதரக அதிகாரிகளை மட்டுமே விமானங்களை அனுப்பி மீட்டு அழைத்துச் சென்றதாகவும் கடாபியை அழைத்துச் செல்லவில்லை என்றும் தென் ஆபிரிக்கா கூறியுள்ளது.

இதற்கிடையே கடாபி வெனிசுலாவுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்றும் தகவல்கள் பரவியுள்ளன. ஆனால், லிபியாவில் தான் எங்கேயோ பதுங்கியிருப்பதாக புரட்சிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 42 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்து வந்தார். கடந்த 6 மாதமாக அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினரின் மறைமுக உதவியோடு கடாபிக்கு எதிராகப் புரட்சிப் படையினர் லிபியா முழுவதும் தாக்குதல்கள் நடத்தி ஆட்சியைக் கவிழ்க்க முயன்று வருவது குறிப்பிடத்தக்கது.

திரிபோலிக்குள் புரட்சிப் படையினர் நுழைந்தபோது, கடாபியை பாதுகாக்க வேண்டிய சிறப்பு கொமாண்டோ படையினர் அவர்களிடம் சண்டை ஏதும் போடாமல் அமைதியாக சரணடைந்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

புரட்சிப் படையினருக்கு ஆதராவாக நேட்டோ போர் விமானங்கள் அவ்வப்போது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி ராணுவத்தினரை நிலை குலைய வைத்தனர்.

ஆனால், புரட்சிப் படைகளை தலைநகருக்குள் நுழைய விட்டு அவர்களை முறியடித்து விட்டதாக கடாபியின் மகன் சைப் அல் சலாம் கூறியுள்ளார். ராணுவத்தினர் தான் திட்ட மிட்டு, புரட்சியாளர்களை திரிபோலிக்குள் நுழைய விட்டதாகவும், இப்போது அவர்களை ராணுவம் சுற்றி வளைத்து விட்டதாகவும் கூறியுள்ளார். மேலும் தனது தந்தை கடாபியும் குடும்பத்தாரும் பாதுகாப்பாக உள்ளதாகவும் கூறியுள்ளார்.

முன்னதாக இவரை கைது செய்துவிட்டதாகப் புரட்சியாளர்கள் கூறிய நிலையில், திடீரென ஒரு ஹோட்டலுக் குள் நுழைந்து அங்கிருந்த சர்வதேச பத்திரிக்கையாளர்களை சந்தித்து கை குலுக்கி விட்டு மேற்கண்டவாறு பேட்டியளித்து விட்டுச் சென்றார் சலாம்.

எனவே இரு தரப்பிலிருந்தும் மாறுபட்ட தகவல்கள் வந்து கொண்டிருப்பதால் உண்மையான நிலை என்ன என்று தெரியவில்லை.

## ஒசாமாவை கொன்றதற்கு பழி வாங்கும் நடவடிக்கை ஆரம்பம்

ஒசாமா பின்லேடனை கொன்றதற்குப் பழிக்குப் பழி வாங்க 100 தாக்குதல் நடத்தும் திட்டத்தை தொடங்கி விட்டோம் என்று அல்குவைதா தீவிரவாதிகள் கூறியுள்ளனர்.

பாகிஸ்தான் அபோதாபாத் நகரில் பதுங்கி இருந்த அல்குவைதாத் தீவிரவாதத் தலைவர் ஒசாமா பின்லேடனை அமெரிக்க படைகள் கடந்த மே மாதம் சுட்டுக் கொன்றன.

இதனால் ஆவேசம் அடைந்துள்ள அல்குவைதாத் தீவிரவாதிகள் பாகிஸ்தான் மற்றும் அமெரிக்காவுக்கு எதிராகத் தாக்குதலை அதிகரிப்போம் என்று மிரட்டல் விடுத்திருந்தனர்.

இந்நிலையில் ஒசாமாவைக் கொன்றதற்கு பழிக்குப் பழி வாங்க கடந்த 15 ஆம் திகதி பிரசாரத்தை தொடங்கி விட்டோம் என்று இணையத் தளத்தில் அல்குவைதா தீவிரவாத அமைப்பின் ஈராக் பிரிவு தெரிவித்துள்ளது.



எகிப்து நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் முகம்மது கமல் அமரை(வலது) தலைநகர் கெய்ரோவில் எகிப்து நாட்டுக்கான லிபிய தூதர் அப்தெல் மோனிம் அல் ஹோனி சந்தித்தார்.

## பாகிஸ்தானில் நிதி திரட்டும் தீவிரவாதக் குழுக்கள்

பாகிஸ்தானில் வெளிப்படையாகக் கூட்டம் நடத்தி நிதி திரட்டும் நடவடிக்கையில் தீவிரவாதக் குழுக்கள் ஈடுபட்டுள்ளன.

இஸ்லாமியர்களின் புனித மாதமான ரம்ழானில் எந்த ஒரு தடை செய்யப்பட்ட அமைப்பும் மக்களிடம் இருந்து நிதி திரட்டக்கூடாது என அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது. எந்த, எந்த அமைப்பு எல்லாம் நிதி திரட்டக் கூடாது என்ற பட்டியலையும் வெளியிட்டுள்ளது.

இருப்பினும் இதையெல்லாம் தீவிரவாதக் குழுவினர் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. தங்களது நோக்கத்துக்கு சிறப்புக் கூட்டங்களை நடத்தி நிதி திரட்டுகின்றனர்.

மும்பைத் தாக்குதலுக்கு காரணமான ஜமாத்-உத்-தவா- அமைப்பு லாகூரின் முக்கிய இடங்களில் சிறப்புக் கூட்டத்தின் மூலம் நிதி திரட்டி வருகிறது.

இந்தக் கூட்டங்களில் சிறப்புரையாற்றும் அதன் தலைவர் ஹபீஸ் முகது சயீத் இந்தியாவைக் கடுமையாகச் சாடுகிறார். இந்தியாவை விமர்சிப்பதில் தொடங்கி எங்கள் நடவடிக்கைக்கு நன் கொடை தாருங்கள் என்று ஹபீஸ் முகமது உரையை முடித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை லாகூரின் மூன் சந்தையில் பேசிய ஹபீஸ் முகமது பாகிஸ்தானை சீர்குலைக்க இந்தியா திட்டமிட்டுள்ளதாகவும், இந்த நோக்கத்தில் தங்களது ஆறுகளில் அதிகமான நீரைத் திறந்து விடுவதாகவும் குற்றம்சுமத்தினார்.

அவரது பேச்சு முழுமையுமே இந்தியாவை குறிவைத்து தாக்கும் வகையிலேயே உள்ளது. அங்குள்ள தீவிரவாதக் குழுவினர் அரசின் தடையை மீறி நிதி திரட்டி வருகிறார்கள் என்பதைத் தெரிந்தும் அந்நாட்டு அரசு கண்டும் காணாமல் இருக்கிறது.

## பயிர்களை நாசம் செய்யும் எலிகளை ஒழிக்க சீனாவில் பூனைப் படை உருவாக்கம்

### பராமரிப்புத் தொகை வழங்கவும் அரசு உத்தரவு

சீனாவில் பயிர்களையும் கால்நடைத் தீவனங்களையும் தின்று தீர்க்கும் எலிகளை ஒழிக்கப் பூனைப் படை உருவாக்கப்பட்டுள்ளது.

சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தின் போல் நகரத்திலுள்ள விவசாய நிலங்களில் ஆயிரக் கணக்கான எலிகள் பயிர்களை நாசம் செய்து வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பிரச்சினையைதீர்க்க 'பூனைப் படையை' உருவாக்கத் திட்டமிட்டனர்

உடனடியாகத் தெருக்களில் சுற்றித் திரியும் பூனைகளைப் பிடிக்கத் தொடங்கினர். மிகத் தொலைவில் உள்ள நகரங்களில் இருந்து முதல்கட்டமாக 150 பூனைகளைப் பிடித்து வந்து போல் நகர நிலங்களில் விட்டனர்.

அவ்வளவுதான் எதிர்பார்த்தது போலவே எலிகளை பூனைகள் வேட்டையாடத் தொடங்கிவிட்டன. இதன் மூலம் எலிகளின் எண்ணிக்கையும் எலிப் பொந்துகளும் கணிசமாகம் குறைந்துவிட்டன என்று அதிகாரிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளனர்.

மேலும் விவசாயிகளின் வீடுகளில் பூனைகள் தஞ்சம் அடைந்தால் அவற்றை பராமரிக்க ஊக்கத் தொகையும் வழங்கசீன அரசு உத்தரவிட்டுள்ளது.

## அமெரிக்காவின் பொருளாதார நிதி நிலை நெருக்கடி கனடா வங்கிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் அபாயம்

ஒட்டாவா,ஒக.24

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி அருகில் உள்ள கனடா வங்கிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதே கால் இறுதி ஆண்டில் கனடா வங்கிகளுக்குப் பலவீனமான வளர்ச்சி காணப்பட்டது. ஆனால் நடப்பு கால் இறுதி ஆண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி பெறலாம் என அவை திட்டமிட்டுள்ளன.

இருப்பினும் உலக அளவில் நிதிச்சந்தைகள் மற்றும் தொழில்கள் தள்ளாடுகின்றன. இதனால் கனடா வங்கிகள் திட்டமிட்ட வளர்ச்சியைப் பெற முடியமா என்ற கேள்வி எழுந்துள்ளது. கனடாவின் 6 பெரும் வங்கிகளின் ஆண்டு வளர்ச்சி 13 சதவீதம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் வங்கித் துறைகளும் பொருளாதாரத் தடுமாற்றமும் அமெரிக்காவின் நிதித் தடுமாற்றமும் கனடா வங்கிகளை அதிர்ச்சி அடைய வைத்துள்ளன. கனடா பொருள்கள் அதிகம் ஏற்றுமதியாகும் நாடாக அமெரிக்கா உள்ளது. எனவே அங்கு ஏற்பட்ட பொருளாதாரத் தேக்கம் கனடா வங்கிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

## லிபியாவின் முன்னேற்றதுக்கு பிரிட்டன் உதவும்: கமரூன் உறுதி

லிபியாவில் கேணல் கடாபி ஆட்சிக்குப் பின்னர் அந்த நாட்டின் வளர்ச்சிக்குப் பிரிட்டன் உதவும். அங்கு ஜனநாயக மலர்ச்சி ஏற்பட உலக நாடுகளும் உதவ வேண்டும் எனப் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் கூறினார்.

லிபியாவில் கடாபிக்கு எதிராக நடைபெற்று வந்த போராட்டம் முடிவு நிலையை எட்டியுள்ளது. லிபியத் தலைநகர் திரிபோலியில் பல ஆயிரம் போராட்டக்காரர்கள் குவிந்தனர். அவர்களுக்கு ஆதரவாக பொது மக்களும் திரண்டார்கள்.

லிபியாவின் 95 சதவீதப் பகுதி போராட்டக்காரர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனால் 42 ஆண்டு கால கடாபியின் சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வருகிறது. லிபியாவில் ஜனநாயக மாற்றம் ஏற்படவும், வளர்ச்சி ஏற்படவும் பிரிட்டன் உதவும்.

அதே நேரத்தில் உலக நாடுகளின் உதவியும் தேவை எனப் பிரிட்டன் பிரதமர் கமரூன் வலியுறுத்தினார். லிபியாவில் இருந்து சர்வாதிகாரிகள் இன்னும் வெளியேறவில்லை என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

## இஸ்ரேல்- பலஸ்தீனத் தீவிரவாதிகளிடையே மோதல் தீவிரம்

### சர்வதேச நாடுகள் கவலை

இஸ்ரேல்- பலஸ்தீன தீவிரவாதிகளுக்கு இடையே மோதல் தீவிரமாகி உள்ளது. இதனால் சர்வதேச நாடுகள் கவலை அடைந்துள்ளன.

காசா திட்டுப்பகுதியில் இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை மேற்கொண்டுள்ளது. அதற்கு பதிலடி தரும் வகையில் பலஸ்தீனத் தீவிரவாதிகள் இஸ்ரேலை நோக்கி ரொக்கெட்டுகளை வீசி வருகிறார்கள்.

இஸ்ரேல் மீது வியாழக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலில் 8 பொது மக்கள் கொல்லப்பட்டனர். இதனால் ஆத்திரம் அடைந்த இஸ்ரேல் எல்லைப் பகுதியில் துப்பாக்கியால் சுட்ட போது 5 எகிப்து பொலி ஸார் மரணம் அடைந்தனர்.

இந்தத் தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என மத்திய கிழக்கு அமைதி மத்தியஸ்தர்களான ஐக்கிய நாடுகள் சபை, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ரஷ்யா ஆகியவை வலியுறுத்தி உள்ளன.

எகிப்து எல்லைப் பகுதியில் நேற்றுமுன்தினமும் ரொக்கெட் தாக்குதல் நடந்துள்ளது என்று அந்த அரசு தெரிவித்துள்ளது. கடந்த சில நாள்களாக இஸ்ரேல் நடத்திய ரொக்கெட் தாக்குதலில் காசா திட்டுப் பகுதியில் 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஏராள மானவர்கள்காயம் அடைந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
24 ஓகஸ்ட் 2011 புதன்கிழமை

# குமாரசுவாமி ஞாபகார்த்த கிண்ணம்; ஒரு ஓட்டத்தில் சென்றல் வெற்றி

வலி.வடக்கு, ஓக.24

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் பி.எஸ். குமாரசுவாமி ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டி ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக் கழகம் ஒரு ஓட்டத்தால் வெற்றி பெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகமும் யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் விளையாட்டுக்கழகம் 14.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றது.

சுதர்சன் 17, ஜசிந்தன் 16 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 14 ஓட்டங்களும் பெறப்பட்டன.

திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கௌசிகன் 3 ஓவர்கள் பந்து வீசி 24 ஓட்டங்களுக்கு 4 விக் கெட்டுக்களையும் முரளி , கோபி தலா 3 ஓவர்கள் பந்து வீசி முறையே 10,11 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினார் 83 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் விளையாட்டுக் கழகம் 15 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 81 ஓட்டங்களைப் பெற்றது.

அசோக் 26, லவகாந்த் 19, சிவகாந்தன் 12 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 10 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜசிந்தன் , சுபரதீஸ் தலா 3 ஓவர்கள் பந்து வீசி முறையே 13,20 ஓட்டங்களைக் கொடுத்து தலா மூன்று விக்கெட்டுக்களையும் மயூரன், விமல் முறையே 12,14 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (எ-86)



சென். பற்றிக்ஸ் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற கோல் காப்பாளர் பயிற்சியின் போது. (ம-23)

## லயன்ஸ் கழகத்தினரின் விளையாட்டுப் போட்டி

தென்மராட்சி, ஓக.24

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென் மராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங் களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளை விரைவில் நடத்தவுள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிரிக்கெட் மின்னொளியிலான கரபந் தாட்டம், வலைபந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்கு பற்றவுள்ள அணிகள் சாவகச்சேரி குகன் ஸ்ரூடியோவில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கழகத் தலைவர் லயன் கே.பிரதீபன் அறிவித்துள்ளார். (எ-207)

## வேலணை மத்திய கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள்

வலி.வடக்கு, ஓக.24

வடமாகாண கல்வித் திணைக் களத்தால் பாடசாலைகளில் விளையாட்டு துறையை முன்னேற்றும் முகமாக விளையாட்டு உபகரணங்கள் வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக வழங்கப்பட்டு வருகின்றன.

இதன்அடிப்படையில்வேலணை மத்திய கல்லூரிக்கு உயரம் பாய்தலுக்கான மெத்தை உயரம் பாய்தலுக்கான குறுக்கு பார் உட்டப் பல உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரினால் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (எ-86)

## ஹொக்கிச் சுற்றில் இன்று மோதும் அணிகள்

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அலகு யாழ். மாவட்ட ரீதியில் ஹொக்கிச் சுற்றுப் போட்டித் தொடரை நடத்தி வருகின்றது.

இன்று புதன்கிழமை யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் மாலை 4 மணியளவில் இடம் பெறும் ஆட்டத்தில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது

## கிரிக்கெட் பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஓக.24

முல்லைத்தீவு வலயப் பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட 18 வயது பிரிவு மாணவர்களுக்கான கிரிக்கெட் பயிற்சி முகாம் இன்றும் நாளையும் வற்றாப்பளை மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

பயிற்சி முகாமில் வடமாகாண கிரிக்கெட் பயிற்றுநர் ரவிந்திர புஸ்பகுமார் தலைமையிலான அணியினர் கலந்து கொண்டு பயிற்சியை வழங்கவுள்ளனர். (ம-23)

# அகில இலங்கை பாடசாலைகளிடையே குழுநிலைப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஓக. 24

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டக் குழுநிலைப் போட்டிகள் அடுத்த மாதம் ஆரம்பமாகின்றன.

பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டி 8,9,10ஆம் திகதிகளில் பண் டாரவளை நகர சபை மைதானத்திலும் உதை பந்தாட்டம் 8,9,10 ஆம் திகதிகளில் பதுளை வின்சன்டயஸ் விளையாட்டரங்கு, பதுளை உதைபந்தாட்ட மைதானம், பதுளை துடுப்பாட்ட மைதானம் ஆகியவற்றிலும் இடம்பெறவுள்ளன.

சதுரங்கப்போட்டி 8,9,10ஆம் திகதிகளில் பதுளை மத்திய மகாவித்தியாலயத்திலும் உடற்பயிற்சிப் போட்டிகள் 9,10 ஆம் திகதிகளில் ஹாலி யல மத்திய மகாவித்தியாலயம் ஹொலியல பிரதேச சபை விளையாட்டு மைதானத்திலும் இடம்பெறவுள்ளன.

அரை மரதன் போட்டிகள் 10 ஆம் திகதி பதுளை நகர மத்திய மகாவித்தியாலயத்திலும் கரம்போட்டி 8,9,10 ஆம் திகதிகளில் பதுளை விசாகா பாலிக வித்தியாலயத்திலும் நீச்சல் போட்டி 9,10 ஆம் திகதிகளில் கொழும்பு -10 ஆனந்தா வித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளன.

ஜூடோ போட்டி 8,9,10 ஆம் திகதிகளில் கொழும்பு ஜூடோ சங்க மத்திய நிலையத்திலும் குத்துச் சண்டை

8,9,10 ஆம் திகதிகளில் சுகத தாச உள்ளக விளையாட்டரங்கிலும் எல்லே போட்டி 8,9,10 ஆம் திகதிகளில் சீதுவ நகர சபை மைதானத்திலும். சீதுவ உடம்பிட்டிய குல சிங்க மகாவித்தியாலயம் ஏக்கல ஜி.பி. சேன நாயக்க வித்தியாலயம், சீதுவ ரந்தொழவ பஞ்ஞா கர்த்த பாலிக வித்தியாலயம், ஜாலய நகர சபை விளையாட்டரங்கு ஆகியவற்றிலும் இடம் பெறவுள்ளன.

பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் 9,10ஆம் திகதிகளில் பாணந்துறை வாதுவ மத்திய மகாவித் தியாலயத்திலும் பாரம் தூக்குதல் போட்டி 9,10 ஆம் திகதிகளில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலும் கபடிப் போட்டி 8,9,10 ஆம் திகதிகளில் கொரணை தக்சிலா மகாவித்தியாலயத்திலும் இடம் பெறவுள்ளன.

கரப்பந்து போட்டி 17,18,19 ஆம் திகதிகளில் சீதுவதவிசமர வித்தியாலயம், சீதுவ நகரசபை மைதானம் ஆகியவற்றிலும்

ஹொக்கிப்போட்டி கொழும்பு ராஜகீரிய வித்தியாலயம், நாரகன்பிட்டிய சலிக விளையாட்டரங்கு கொழும்பு-4 சாந்த பீற்றர் வித்தியாலயம் ஆகிய வற்றில் இடம்பெறவுள்ளன.

மென்பந்து துடுப்பாட்டம் 17,18,19 ,20 ஆம் திகதிகளில் பாணந்துறை மக்கள் விளையாட்டரங்கு பாதுவ மத்திய மகாவித்தியாலயம் விளையாட்டரங்கு , பாணந்துறை சாந்த கோன் வித்தியாலயம் ஆகிய வற்றிலும் ஜிம்னாஸ்ரிக் போட்டி சுகததாச உள்ளக விளையாட் டரங்கிலும் அரபிக்ஸ் போட்டி 17,18,19 ஆம் திகதிகளிலும் சுகததாச உள்ளக விளையாட்டரங்கிலும் இடம் பெறவுள்ளன.

கூடைப்பந்தாட்டப் போட்டி 17,18,19 ஆம் திகதிகளில் கொழும்பு-7 ராஜகீரிய வித்தியாலயம், கொழும்பு - 4 சாந்த பீற்றர் வித்தியாலயம், நுகேகொட சாந்தஜோசப் பாலிக வித்தியாலயம், கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயம் ஆகியவற்றிலும் மேசைப் பந்தாட்டப் போட்டிகள் 17,18 ஆம் திகதிகளில் கல்கிசை அத்துலத்து முதலி வித்தியாலயத்திலும் பூப்பந்தாட்டப் போட்டி 17,18 ஆம் திகதிகள் கல்கிசை சாந்த தோமஸ் வித்தியாலயத்திலும் ரெனிஸ் போட்டிகள் 17,18 ஆம் திகதிகளில் கொழும்பு ரெனிஸ் மத்திய நிலைத்தியலும் கராத்தே

17,18,19 ஆம் திகதிகளில் கிரிபத்கொட விகாரமாதேவி பலிக வித்தியாலயத்திலும் மல்யுத்தப் போட்டி 17,18,19 ஆம் திகதிகளில் பாணந்துறை சிறி சுமங்கல வித்தியாயலத்திலும் இடம்பெறவுள்ளன.

சைக்கிள் ஓட்டப்போட்டி 18 ஆம் திகதியில் கொழும்பு விகாரமாதேவி சுற்றுவட்டத்திலும் மெய்வன்மைப்போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதியும் ஒக்ரோபர் மாதம் 1,2,3 ஆம் திகதிகளிலும், தியகம மகிந்தராஜபக்ஷ விளையாட்டு மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ம-23-86)




வடமாகாண கல்வித் திணைக்களத்தால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான பூப்பந்தாட்டப்போட்டியில் மாகாண சம்பியனான சுண்டுக்குளி மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்ற உடுவில் மான்ஸ் மகாவித்தியாலய அணிகள். (ம-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஆர்ப்பாட்டங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் பரிசோதகர் சமன் சிகேரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க இங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

யுத்தம் முடிவடைந்த பின் னர் கடந்த இரண்டு வருடங்களாக யாழ்ப்பாணத்தில் சமாதான சூழ்நிலை நிலவி வருகின்றது. பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையிலான உறவு பலமடைந்து வருகின்றது. மக்களுக்கான அனைத்து மனிதாபிமானப் பணிகளையும் படையினர் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றனர்.

இதனைப்பொறுத்துக்கொள்ள முடியாத சில அரசியல் சக்திகளே இந்தச் சம்பவத்தின் பின்னணியில் உள்ளன. இராணுவத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்காக நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் இது. இவ்வாறான சம்பவங்களை இனி ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

நாவாந்துறையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் பயங்கரவாதிகளே. அதை நான் திட்டவட்டமாகக் கூறுகிறேன்.

கிறீஸ் மனிதன் யாழ்ப்பாணத்துக்கு வரவில்லை. அப்படியான ஒன்றை நான் இதுவரை கேள்விப்பட்டதில்லை. இவை எல்லாம் வெறும் வதந்தி. மக்களைக் குழப்புவதற்காக உருவாக்கப்படும் திட்டங்கள்.

மக்களை பாதுகாப்பதிலேயே இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் 24 மணி நேரமும் மக்களுக்காகப் பல தியாகங்களைச் செய்கின்றனர். இராணுவத்தினர் இவ்வாறு தேவையற்ற விதத்தில் தாக்கப்படுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. மக்கள் சட்டத்தைக் கையில் எடுத்துச் செயற்படுவதை அனுமதிக்க முடியாது. சட்டம் ஒழுங்கைப் பார்த்துக்கொள்வதற்குப் பொலிஸார் உள்ளனர்.

நாவாந்துறையில் இராணுவத்தினர் மீது போத்தல்கள், ரியூப் லைட்டுக்கள், கற்கள் என்பவற்றைப் பயன்படுத்திக் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இவற்றை வைத்துப் பார்க்கும்போது இது ஒரு திட்டமிட்டதாக்குதலே. இந்தச் சம்பவத்தின் போது பொதுமக்கள் சிலர் காயமடைந்துள்ளனர். அது தவிர்க்க முடியாத ஒன்று. பொலிஸ் வாகனங்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினர் தவறு செய்தால் அதற்குத் தண்டனை வழங்க நான் ஒருபோதும் தயங்க மாட்டேன். ஊடகங்களும் அதைச் சுட்டிக் காட்ட முடியும். அதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. அவ்வாறான சம்வங்கள் இடம்பெற்றால் அது தொடர்பாக படை அதிகாரிகளுக்கு அல்லது பொலிஸ் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துங்கள் அது குறித்து உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்தச் சம்பவங்கள் நன்கு திட்டமிடப்பட்ட ஓர் அரசியல் திட்டம். இதற்கு மக்கள் ஒரு போதும் துணை போகக் கூடாது - என்றார். (த)

## காணாமற்போன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாடு மேய்க்கச் சென்ற ஒருவர் கொடுத்த தகவலையடுத்தே இந்தச் சடலம் குறித்த விடயம் தெரியவந்தது.

சம்பவ இடத்துக்கு சென்ற மல்லாகம் நீதிமன்ற நீதிவான் எஸ். கஜநிதிபாலன் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து இந்தச் சடலம் காணமற்போன சிறுமி சாளினியினுடையது என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

சடலம் உருக்குலைந்த நிலையில் மிக மோசமாக அழுகி சிதைந்திருந்தது. இடுப்புப் பகுதிக்கு கீழ் ஆடைகள் எதுவும் காணப்படவில்லை. தலையின் பின்பக்கம் பெரிய துவாரம் ஒன்று இருந்தது.

நீதிவானின் விசாரணைகளைத் தொடர்ந்து சடலம் வைத்திய பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறுமி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டாரா என்ற தோரணையில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர். இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவரை வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-323)

## சட்டத்தரணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

24 சட்டத்தரணிகளும் ஒட்டுமொத்தமாக சேர்ந்து நின்று சந்தேகநபர்களுக்காக ஆஜராவதாக மாவட்ட நீதிபதியிடம் நேற்று அறிவித்தனர்.

அதேவேளை, அப்பாவிப் பொதுமக்கள் பொலிஸாரினாலும் இராணுவத்தினராலும் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டதுடன், அவர்களது உடமைகள் சேதமாக்கப்பட்டதற்கும் கடும் எதிர்ப்புத் தெரிவித்த சட்டதரணிகள், படையினரின் அத்துமீறல்களுக்கு நீதி வழங்க வேண்டும் என்றும் நாட்டில் சட்டமும் நீதியும் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்றும் நீதிபதிகளிடம் வலியுறுத்தினர்.

ஏ.முத்துக்கிருஷ்ணன், கே.கேசவன், வி.ரி.சிவலிங்கம், திருமதி லிங்கா துரைராஜா, பி.தவபாலன், கே.கனகசிங்கம், செல்வி தேவி இராயப்பு, டி.ரங்கன், பி.சுந்தரலிங்கம், ஏ.ராஜரட்ணம், பி.கே. அன்ரனி, மு.றெமீடியஸ், பி.குகனேஸ்வரன், என்.அரியபுத்திரன், ஜே.ஜெரூபன், பி.பார்த்தீபன், கே.சயந்தன், செல்வி சி.கிருஷ்ண வேணி, ஏ.அற்புதராஜ், ஜொனி. மதுரநாயகம், ஜி.அபிமன்யு, செல்வி கே.நிபூஷா ஆகியோரின் உதவியுடன் திருமதி ஸ்ரீ சர்மினியின் அறிவுறுத்தலுடன் ஜனாதிபதி சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் சந்தேகநபர்கள் சார்பில் ஆஜராகினார். (உ)

# இவர்களால் மட்டும் எப்படி முடிகிறது?

நவீன கணினித் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இதுவரை சச்சின் ஆடிய 'ஷொட்டுகளை' ஆய்வு செய்து, ஆட்டமிழந்த விதங்களையும் ஆய்வு செய்து சச்சினை வீழ்த்தும் புதிய திட்டம் வகுத்து வெற்றி கண்டுள்ளது இங்கிலாந்து.

இந்தத் தொடரில் 100 ஆவது சதத்தை சச்சின் எடுக்க விளையாடி வருகின்றார். ஆனால் அவரை படம் போட்டு பொறியில் சிக்க வைத்துள்ளது இங்கிலாந்து இதற்கு உதவிய நிபுணர் நாதன் லியாமன் இங்கிலாந்து கணித / கணினி அணியின் தொழில் நுட்ப ஆலோசகராகப் பணியாற்றி வருகிறார்.

இங்கு 7 இன்னிங்சில் ஒட்டங்கள் (சராசரி (34, 12, 16, 56, 1, 40, 23) சேர்த்து 182 26.00) மட்டுமே எடுத்துள்ளார். இவர் தடுமாறியதற்கு, இங்கிலாந்து அணி தொடர்ந்து ஆலோசகர் நாதன் லியாமன் வகுத்த யின்தொழில்நுட்ப திட்டமே காரணம்.

சிமுலேட் டரில்' கிரிக்கெட் ஆடுகளங்களின் தன்மை, வீரர்கள் விளையாடும் முறை உள்ளிட்ட பல்வேறு தகவல்களை பதிவு செய்துள்ளார். உதாரணமாக, ஆடுகளத்தில் பந்து விழும் இடத்தை 100 ★ 15 சென்ரி மீற்றர் என்ற அளவில் 20 பகுதிகளாக பிரித்துக் கொண்டுள்ளார். இதன் மூலம் குறிப்பிட்ட துடுப்பாட்ட வீரர்களுக்கு எந்த இடத்தில் பந்துவீசினால் நெருக்கடி ஏற்படும் என்பதை கண்டறிந்துள்ளார்.

கடந்த 5 ஆண்டுகளாக டெஸ்ட் அரங்கில் வீசப்பட்ட பந்துகளை பதிவு செய்து வைத்திருக்கிறார். துடுப்பாட்டக்காரர்களின் காலசைவு, துடுப்பு பிடிக்கும் முறை போன்றவற்றையும் துல்லியமாக கணக்கிட்டுள்ளார்.



லியாமன் கணக்குகளின்படி, சச்சின் 50 ஓட்டங்களை எட்டும் வரை பெரும்பாலும் 'ஒன்' திசையில் தான் விளையாடுவாராம். இந்த பலவீனத்தை அறிந்து கொண்டு அவருக்கு 'ஓப்- சைடில்' பந்துவீசச் சொல்லியுள்ளார்.

எட்ஜ்பாஸ்டன் டெஸ்ட் போட்டி வரை சச்சினுக்கு இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் வீசிய 261 பந்துகளில் 254 பந்துகள் 'ஒப் ஸைடில்' வீசப்பட்டதாம். 6 பந்துகள் விக்கெட்டுகளுக்கு நேராகவும் ஒரு பந்து 'லெக்' திசைக்கு வெளியேயும் வீசப்பட்டுள்ளது.

லியாமன், 'ஹாக் ஐ' தொழில் நுட்பம் மூலம் பந்துகள் எந்த இடங்களில் 'பிட்ச்' ஆகும் போது எந்த விதத்தில் துடுப்பாட்ட வீரர்கள் ஆடுகின்றனர் என்பதை கண்டுபிடிக்க முடியும். ஒரு சில இடங்களில் 'பிட்ச்' செய்யப்பட்டால் சில துடுப்பாட்ட வீரர்கள் திணறுவது ஏன் என்பது போன்ற தரவுகளைக் கொண்டு சச்சின் மொடலை உருவாக்கியதாக அவர் தெரிவித்துள்ளார். ஆனால் சுனில் கவாஸ்கர் இதனை கடுமையாகக் கிண்டல் செய்துள்ளார். சச்சின் துடுப்புப் பற்றி புதிதாக எதையும் அவர்கள் கண்டுபிடித்துவிடவில்லை என்றார். (15)

# பிரேசில் அணி சம்பியன்



உலகக் கிண்ண கால்பந்து (20 வயதுக்குட்பட்டோர்) தொடரில் பிரேசில் அணி ஐந்தாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றது. கொலம்பியாவில் 20 வயதுக்குட்பட்டோருக்கான 18 ஆவது 'பீபா' உலகக் கிண்ண கால்பந்து தொடர் நடந்தது. இதன் இறுதி ஆட்டத்தில் பிரேசில், போர்த்துக்கல் அணிகள் மோதின.

விறுவிறுப்பான இறுதி ஆட்டத்தில் 5 ஆவது நிமிடத்தில் பிரேசில் வீரர் ஆஸ்கார் முதல் கோல் அடித்தார். இதற்கு அடுத்து 9 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் அலெக்ஸ் பதிலடி கொடுத்தார். முதல் பாதி முடிவு 1-1 என்று சமநிலை வகித்தது.

இரண்டாவது பாதியில் இரு அணி வீரர்களும் முழுத்திறமையை வெளிப்படுத்தினர். ஆட்டத்தின் 59 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் நெல்சன் ஆலிவிரா ஒரு கோல் அடித்து 2-1 என்று முன்னிலை பெற்றுத் தந்தார். இதற்கு 78 ஆவது நிமிடத்தில் பிரேசில் அணியின் ஆஸ்கார் பதிலடி கொடுத்தார். இதனால் ஆட்டநேர முடிவில் 2-2 என்று சமநிலை அடைந்தது.

பின்னர் இரு அணியினருக்கும் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பிரேசில் வீரர் ஆஸ்கார், 111ஆவது நிமிடத்தில் 'ஹட்றிக்' கோல் அடித்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார். இறுதியில் பிரேசில் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று ஐந்தாவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இந்தத் தொடரில் இதுவரை எட்டு முறை இறுதிச் சுற்றுக்கு முன்னேறிய பிரேசில் அணி ஐந்து முறை (1983, 85, 93, 2003, 2011) சம்பியன் பட்டம் வென்றது. மூன்று முறை (1991, 95, 2009) இரண்டாவது இடம் பிடித்தது. கடந்த 1977, 89, 2005 இல் நடந்த தொடரில் மூன்றாவது இடம் பிடித்தது.

மூன்றாவது முறையாக இறுதிச் சுற்றுக்கு தகுதி பெற்ற போர்த்துக்கல் அணி இரண்டு முறை (1989, 91) கிண்ணம் வென்றது. இந்த முறை இரண்டாவது இடம் பிடித்து ஆறுதல் அடைந்தது. (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 * 01 * 1929



மறைவு 03 * 09 * 2010

### திருமதி இராசமுத்து நவரட்ணம்

(கெருடாவில் தெற்கு, தொண்டமானாறு)

மறைந்ததோ ஓராண்டு மறக்கவும் முடியுமா
குறைவிலாது எமைக்காத்த குலவிளக்கே ஏன் மறைந்தீர்
இறைவனின் பாதம் பற்றிய நற்தாயே இப்புவியில்
உங்கள் இனிய முகம் காண்போமா?

கெருடாவில் தெற்கு,
தொண்டமானாறு.
0771880820

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பிதழ்



அன்புடையீர்
கடந்த 26.07.2011 ஆம் திகதி
இறைபதமடைந்த எமது
குடும்பத்தலைவர்

### மாணிக்கம் திருஞானசம்பந்தமூர்த்தி

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எமது இல்லத்தில் நாளை (25.08.2011) வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அன்றைய தினம் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''பாலபவனம்''
விளாப்புக் கூடல் அல்வாய் வடக்கு,
அல்வாய்.

குடும்பத்தினர்.
0772343847,
0779405867

## இவங்க ராத்திரி....

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துச் சிலர் அரசியல் செய்யப் பார்க்கிறார்கள் என்கிறார் அவர்.

ஆனால், ''நேற்றிரவு சிலருடன் பிரச்சினைப்பட்ட பின்னர் வீட்ட இருக்கேக்கதான் வந்து பிடிச்சவங்கள். ஏன் எது எண்டு கேட்டுக் கேள்வியில்லாமல் அடிச்சவங்கள். என்ர பிடரியில அடிச்சதாலதான் தலையில இவ்வளவு பெரிய காயம். அதில இருந்து வடிஞ்சுதான் ரீசேட் முழுக்க இரத்தம்'' என்றார் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக நேற்றுப் பகல் சேர்க்கப்பட்ட இளைஞர் ஒருவர்.

''ஆமி எங்கள மாதிரி நிறையப் பேரைப் பிடிச்சவங்கள். இதில ஏலாத ஆக்களையும் பிடிச்சு ஏத்தினவங்கள். நாங்கள் கத்திக் குழறக் குழற அடிச்சவங்கள். இரவு முழுவதும் என்ர தலையில இருந்து இரத்தம் வடிஞ்சபோதும் மருந்தும் தரேல்ல; ஆஸ்பத்திரிக்குப் போகவும் விடேல்ல. குடிக்க ஒருவாய் தண்ணி கூடத் தரேல்ல. இப்பதான் கோட் ஸூக்கு கொண்டு வந்திட்டு இஞ்ச ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்தவங்கள்'' என்றார் அவர்.

''என்னை என்னத்துக்கு பிடிச்சவங்கள் எண்டு இப்பவரைக்கும் எனக்குத் தெரியாது'' என்று கூறும் இவரைப் போன்றவர்கள்தான் திட்டமிட்டு இராணுவத்தினரைத் தாக்கினார்கள் என்று கூறுகிறார் இராணுவத்தின் யாழ். மாவட்டத் தளபதி.

இப்படி தமிழர்களை கூட்டுத் தண்டனைப் பாணியில் தாக்கும் படையினரின் செயல் இந்த நாட்டை மீண்டும் எங்கு கொண்டு சென்று நிறுத்தும்?

## விற்பனைக்கு

250 Kg எவரி தராசு, பாவித்த Fan, Photo Copy இணைந்த இயந்திரம், இரும்பு றாக்கை, முதிரைப் பலகையினாலான றாக்கை, 18' X 8' நீள, அகலம் கொண்ட கூலிங் தகரத்துடன் கல் வணைஸ் பைப் செற் என்பன உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு:
0777283811, 0770770529

## பெயர்மாற்றம்

சாந்தாதோட்டம், புலோலி வடகிழக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த *செல்வராசா சுந்தசாமி* ஆகிய நான் 15.08.2011 முதல் எனது பெயரை செல்வராசா பிரகீதன் எனப் பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகின்றேன்.

*செல்வராசா பிரகீதன் புலோலி, வடகிழக்கு.*

## துயர் பகிர்கின்றோம்

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும்,
துர்க்கை அம்மன் அன்னையர் இல்லத்தில்
வசித்துவருபவருமான தொண்டர் சபை உறுப்பினர்

### செல்வி இராசலட்சுமி கந்தையா

அவர்கள் 21.08.2011 அன்று மரணமானதையிட்டு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

பெண்கள் தொண்டர் சபை,
துர்க்கை அம்மன் தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## மரண அறிவித்தல்

### பத்மநாதன் சுதாகரன்



சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த பத்மநாதன் சுதாகரன் கடந்த (22.08.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கல்பனாவின் அன்புக்கணவரும் பிரதாயினி, விஷ்ணுதன் ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் சாந்தரூபி தம்பதியரின் மகனும் ஏகாந்தரூபன், காலஞ்சென்ற புஸ்பாகரன் மற்றும் கௌசல்யா ஆகியோரின் சகோதரனும், தர்மகுலசிங்கம் - பரமேஸ்வரி தம்பதியரின் மருமகனும், கஜந்தன் (லண்டன்), அஜந்தன் (லண்டன்), கவிதா நிஜந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2011) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப.3 மணிக்கு பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய்றோட்,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்

### குமாரவேலு இலட்சுமி (பாய்க்கம்)

மண்ணில் மலர்வு
23.07.1929

விண்ணில் உறைவு
25.07.2011

திதி: அபரபக்க தசமி

பிரியமுடன் பெற்றெடுத்து
பாசமுடன் வளர்த்தெடுத்த
எம் அன்புத் தாயே!
உன் ஆத்மா எம்பெருமான்
போசுட்டி முருகன் திருவடியை
அடைந்திட மனமுருகி வேண்டுகிறோம் - நாம்.

கடந்த 25.07.2011 அன்று இறைபதம் அடைந்த எமது தாயார் குமாரவேலு இலட்சுமி அவர்களின் மரணச்சடங்கின் போது எமக்குப் பல வழிகளில் உதவி செய்து நேரடியாக கலந்து கொண்டும், தொலைபேசி மூலம், தந்திமூலம், கண்ணீர் அஞ்சலிமூலம் அனுதாபம் தெரிவித்து மலர் வளையம் வைத்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று [24.08.2011] புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வேம்படி,
காரைநகர். 0779596664

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி சித்திவிநாயகமூர்த்தி நல்லம்மா



கதரிப்பாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சித்திவிநாயக மூர்த்தி நல்லம்மா நேற்று (23.08.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சித்திவிநாயகமூர்த்தி ஐயரின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - கண்ணகை தம்பதியரின் அன்பு மருமகளும், சுந்தரமூர்த்தி, காலஞ்சென்ற கணேசமூர்த்தி (கட்டி-Canada) மற்றும் ஞானாமிர்தம், Dr.கிருஷ்ணமூர்த்தி (ராசு), ஞானமூர்த்தி (குட்டித்துரை-Canada), ஞானமலர் (வண்ணக்கிளி-Canada) ஆகியோரின் பாசமிகு தாயும், கமலச்செல்வம், சரோஜினிதேவி (Canada), பாலசுப்பிரமணியம்(Kwait), Dr.நந்தினிதேவி, நிர்மலா (Canada) ஆகியோரின் பாசமிகு மாமியும், பிரேம்குமார், விஷ்ணுராஜ் (German), தர்சன், காண்டீபன் (Canada), ஜனகன் (Canada), Dr. விஜிதபாலா, Dr.ஜனனி, சாந்தி (Newzealand), கிருஷ்ணகுமார் (Newzealand), கார்த்திகா, சிந்துஜா, டுலக்ஷி, டிலூஷா, டிலான், நிஷானி (Canada), விஷாலினி (Canada), நிலானி (Canada), ரம்யா (Canada), வித்யா (Canada), ஷோபன் (Canada) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ரிஷிவர்மா, கரிகாலன் (Newzealand) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.08.2011) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கதிரிப்பாய் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கதிரிப்பாய்,
அச்சுவேலி.

தகவல்:
சுந்தரமூர்த்தி,
Dr.கிருஷ்ணமூர்த்தி,
ஞானமூர்த்தி (Canada),
ஞானமலர் (Canada)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல்வாதிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாவாந்துறையில் மோதல் நடைபெற்ற இடத்துக்கு அருகில் உள்ள இராணுவ முகாமில் 5, 6 படையினரே கடமையில் உள்ளனர். அந்தப் படையினருக்கும் அப் பகுதியில் உள்ள மக்களுக்கும் நல்ல உறவு உள்ளது. இதனை விரும்பாத சில தீய அரசியல் சக்திகள் இந்த வேலையைச் செய்துள்ளனர். மக்களை குழப்பி உணர்ச்சியைத் தூண்டி கலவரத்தை உண்டு பண்ணச் சிலர் முயற்சிக்கிறார்கள் அதற்கு அனுமதிக்க முடியாது.

சட்டத்தை அமுல் செய்வதற்குப் பொலிஸார் உள்ளனர். அந்த அதிகாரத்தைப் பொது மக்கள் கையில் எடுக்க முடியாது.

நல்லூர் திருவிழா நடைபெறும் போது இவ்வாறான குழப்பம் ஏற்படுத்தப்பட்டமை பெரும் அவமானம்.

கிறீஸ் மனிதர்கள் என்று இலங்கையில் எவரும் இல்லை. அவ்வாறான முறைப்பாடுகள் எதுவும் எமக்குக் கிடைக்கவில்லை. இவை எல்லாம் வெறும் வதந்தி. பொது மக்கள் பொலிஸ் உறவை உடைக்கவே இந்த வேலை. சைக்கிள்செயின், பெற்றோல் போத்தல்கள், கற்கள் என்பன அவ்விடத்துக்கு எப்படி வந்தது? திட்டமிட்டே இவை எடுத்து வரப்பட்டன.

இந்தச் சம்பவத்தில் கைதானோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாக்குதலில் ஈடுபட்டவர்களே தாங்களே மாறி மாறித் தாக்குதலில் ஈடுபட்டதால் அவர்களுக்குக் காயங்கள் ஏற்பட்டிருக்கலாம். பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கிறார்கள். மனிதாபிமான உதவிகளை வழங்குகிறார்கள் -என்றார். (த)

**ஆங்கிலம் கற்பது இலகுவானது.**

நீங்கள் எந்த நிலையிலிருந்தாலும் ,மூன்று மாதங்களில் உங்களை கே.யு வின் விசேட கற்பித்தல் முறையால் ஆங்கிலம் பேச வைக்க முடியும் என்பதை அறிவீர்களா ?



தனிப்பட்ட/குழு வகுப்புக்கள்*** அடிப்படையிலிருந்து ஆங்கிலம்

தனிப்பட்ட கவனிப்பில்,அலுப்புத்தராத சுவாரசியமான சர்வதேச கற்பித்தல் முறையில் உங்கள் நிலைக்கேற்ப ,நவீன மல்டிமீடியா மற்றும் செயன்முறைகள் மூலம் (உங்களுக்கு முன்னைய ஆங்கில வகுப்புக்களில் ஏற்பட்ட துன்பநிலை இல்லாமல்) கற்கலாம் என்றால்.....நீங்கள் தயாரா ? Local and UK Certificates for Each Level

14 வயதிலிருந்து 60 வயது வரை அனைவர்க்கும்

IELTS Coaching and Authorized Registration Centre

i-Spoken English | IELTS | ESOL-A1-B2

திருமணமாகி யு.கே செல்வோருக்கான ஆங்கில வகுப்பும் பரீட்சையும்.

Visit our Web Site for further info : www.kugroup.info

இலவச நேரடி கலந்துரையாடலும் நெறிப்படுத்தலும் தற்போது வழங்கப்படுகிறது சந்திக்கும் நேர ஒதிக்கீட்டுக்கு அழையுங்கள்.

0777302882/0213208342 பிரதிவாரம் புதிய பிரிவுகள் ஆரம்பம்

Knowledge Universe
School of International English
City & Guilds Approved Centre

இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.(லாவா வைத்தியசாலை மேல்மாடி)

**வீடு விற்பனைக்கு**

சுதுமலையில் நன்னீர் பயன்தரு மரங்களுடன் இயற்கையான சூழலில் 4அறை, 3 Hall, மேல்மாடிஎன்பவற்றுடனான நவீன ரக வீடு உரிமையாளர் வெளிநாடு செல்லவுள்ளதால் குறைந்த விலைக்கு விற்பனைக்கு உண்டு. வாங்க ஆர்வமுள்ளோர் கேள்விகளைத் தரலாம். கூடிய விலை தருவோருக்கு உடன் விற்பனை செய்யப்படும்.

தொடர்பு- 0756779814, 0213001692

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகதாஸ் காந்திமதி



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகதாஸ் காந்திமதி நேற்று (23.08.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சித்திரவேலு- நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், நாகதாஸின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மகாதேவா மற்றும் இராஜேந்திரா, தெய்வேந்திரா, பாலேந் திரா ஆகியோரின் சகோதரியும், சிவாஜினியின் அன்புத் தாயும், ஐங்கரனின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.08.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### பாலச்சந்திரன் இந்திரயோகன்

கலைப்புலவர் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட பாலச்சந்திரன் இந்திரயோகன் நேற்று முன்தினம் (22.08.2011) திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் லீலாவதி தம்பதியரின் அருமை மகனும், பாலயோகன், சண்முகநாதன், நவயோகன், ராஜயோகன், தி.யோகேஸ்வரி, கெ.யோகாம்பாள், இ.பாலயோகினி, வி.அமிர்தயோகநாயகி, பா.லீலயோகினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல.17, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
பா.லீலாவதி(தாய்),
வி.அமிர்தயோகநாயகி(சகோதரி)

## கைதானோரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தனர். ஆனால், நேற்றுக் மு.ப.10 மணியளவில் நீதிமன்ற உத்தரவை அடுத்து சுமார் 25க்கும் மேற்பட்டவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் படுகாயங்களுக்கு உள்ளாகி இருந்தனர்.

அவர்களில் பலரின் கைகளும் கால்களும் முறிந்து போய் இருந்தன என்று வைத்தியசாலைச் செய்திகள் தெரிவித்தன. காயமடைந்தவர்களில் 20க்கும் மேற்பட்டவர்களுக்கு நேற்றிரவு வரை சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்று வைத்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத்தினர் தம்மை இழுத்துச் சென்று தமது கைகளையும் கால்களையும் அடித்து முறித்தனர் என்று காயமடைந்தவர்கள் உதயன் பத்திரிகையிடம் நேரில் தெரிவித்தனர்.

"என் பின்னந்தலையில் தாக்கியதில் உடைந்து இரத்தம் வழிந்தது. ஆனால் காலையில் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லும்வரை ஒருசொட்டுத் தண்ணீர் கூடத் தராமல் எம்மை இருத்தி வைத்திருந்தனர் இராணுவத்தினர்" என்றார் காயமடைந்த ஒருவர்.

கடும் காயங்களுக்கு உள்ளானவர்கள் அனைவரும் உடல் சோர்வடைந்து நடமாடுவதற்கே கஷ்டப்படும் நிலையில் - மிகவும் நலிந்து போய் காணப்படுகின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் நேரில் சென்று பார்வை யிட்டனர். நேற்று மதியம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வந்து பார்த்துச் சென்றார் என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர். (உ-10)

## நீதிமன்றில் ஆஜர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து காயப்பட்டவர்களை உடனடியாக வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக அனுப்பும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். இதன்படி காயமடைந்த 18 பேர் காலை 10 மணியளவில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அதேவேளை தமது உறவினர்கள் வந்து தம்மை பார்க்க விடாமல் தடுக்கப்பட்டுளனர் எனவும் தடுத்து வைக்கப்பட்டவர்கள் மாவட்ட நீதிபதியிடம் கூறினர்.

இதனைச் செவிமடுத்த மாவட்ட நீதிபதியும், மேல் நீதிமன்ற நீதிபதியும் மத்திய கல்லூரி மைதானத்துக்கு அருகில் கூட்டமாக அமர்ந்திருந்த மக்களை நேரடியாகச் சென்று பார்த்தனர்.

**தடுக்கப்பட்டே இங்கு தவம் கிடக்கிறோம்**

அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து உங்களை இங்கு வந்து அமரும்படி கூறினார்களா அல்லது நீங்களே வந்தீர்களா என்று விசாரித்தார்கள்.

"இல்லை ஐயா! எங்களை யாரும் கூட்டிவரவில்லை. எங்கள் கணவர்மாரையும், பிள்ளைகளையும் பார்பதற்காக வந் தோம். ஆனால் எங்களை பார்க்கவிடாமல் தடுத்து விட்டனர்" என்று பெண்களும் பிள்ளைகளும் நீதிபதிகளிடம் கதற ஆரம்பித்தனர்.

அவர்களை யார் தடுத்தது? என்று பொலிஸாரிடம் கேட்டனர். தாம் தடுக்வில்லை என்று பொலிஸார் கூறி விட்டனர். பொதுமக்கள் இராணுவத்தினர்தான் தங்களைத் தடுத்தனர் என்று கூறினார்கள்.

பொலிஸார் மூலம் இராணுவத்தினர் அழைக்கப்பட்டு விவரம் அறிந்த பின் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களின் குடும் பத்தில் தலா ஒருவர் வீதம் அவர்களைப் பார்வையிட அனு மதிக்குமாறு உத்தரவிடப்பட்டது.

பின்னர் மதிய இடைவேளைக்குப்பின் சந்தேக நபர்கள் மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

**அனைத்தும் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள்**

சட்டவிரோதமான முறையில் ஒன்று கூடியமை, அமைதிக்கு பங்கம் விளைவித்தமை, பொலிஸார் மீது தாக்குதல் நடத்தி அவர்களுக்கு காயங்களை ஏற்படுத்தியமை மேலும் பொலிஸ் வாகனங்கள் இரண்டைத் தாக்கி பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா நீதிமன்றில் தெரிவித்தார்.

பொலிஸாரினால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே சோடிக்கப்பட்டவை என்று சட்டத்தரணிகள் நிராகரித்தனர். அவர்கள் தமது வாதத்தில் தெரிவித்ததாவது:-

நாடெங்கிலும் கிளப்பிவிடப்பட்டுள்ள கிறீஸ் பூத பீதியில் மக்கள் கலக்கம் அடைந்துள்ளனர். திடீரென ஒரு வீட்டினுள் பிரவேசித்த மூன்று நபர்களை விரட்டிச் சென்றபோதே இராணுவத்தினருக்கும் எமது சகாக்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது. அப்போது அங்கு வந்த பொலி ஸாரும் படையினருமே பொதுமக்களை கண்மூடித்தனமாக தாக்கியதுடன் வீடுகளில் நித்திரையில் இருந்தவர்களையும் தட்டி எழுப்பித் தாக்கி உள்ளனர்.

சில குடும்பப் பெண்களும் தாக்கப்பட்டுளனர். இங்கு ஆஜர் படுத்தப்பட்டிருப்பவர்கள் அனைவருமே படையினரால் தாக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு வெளிக்காயங்களும், உள் காயங்களும் காணப்படுகின்றன. அனைவரும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படவேண்டும். எல்லோருமே நிரபராதிகள். அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றனர் சட்டத்தரணிகள்.

இருபக்க வாதங்களையும் செவிமடுத்த மாவட்ட நீதிபதிகள் சந்தேகநபர்கள் அனைவரையும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றும் 26 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியலில் வைப்பதுடன் வைத்திய அறிக்கையுடன் அவர்களை மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிட்டனர்.(ஒ-02-10-14-4)

## கொதிப்பு அடங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினரால் பிடித்துச் செல்லப்பட்டு நேற்று அவர்கள் அனைவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதனால் அந்தக் கிராமத்தில் பெண்கள், குழந்தைகளுடன் பொது இடங்களில் கூடியிருந்தனர்.

வீதிகளில் எங்கும் இராணுவத்தினர் கூட்டம் கூட்டமாக நின்றனர். சோதனைக் கெடுபிடிகள் வேறு!. இதனால் மக்கள் இயல்பாக வெளியில் நடமாட முடியாது வீடுகளுக்குள்ளும் பொது இடங்களிலும் முடங்கியிருந்தனர்.

மீனவர்கள் கடலுக்குச் செல்லவில்லை. வர்த்தக நிலையங்களைத் திறந்து நடத்துவதற்கு ஆண்கள் எவரும் இருக்கவில்லை. இதனால் பெட்டிக் கடைகள் முதல் எல்லா வர்த்தக நிலையங்களும் மூடிக்கிடந்தன.

- தமது பிள்ளைகள், கணவன்மாரை இராணுவத்தினர் பிடித்துச் சென்றதை அடுத்து அனைவரும் உணவைத் தேடவில்லை. கண்ணீர்விட்டு அழுது, அழுது பட்டினியில் வாடினர்.

இவ்வாறான நிலைமைகளினால் நாவாந்துறைப் பகுதி வெறிச்சோடிக் காணப்பட்டது. வீடுகளில் புகை கிளம்பவில்லை. அடுப்பங்கரையை எவரும் நாடவில்லை. அவர்கள் அனைவரது வயிறும் புகைந்தன.

"நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவத்தால் எங்கள் பிரதேசத்தில் உள்ள ஆண்களை இராணுவத்தினரும் பொலிஸாரும் பிடித்துச் சென்று விட்டனர். இன்று இரவை நாங்கள் எவ்வாறு கழிப்பது என்று தெரியவில்லை. என்ன நடக்குமோ என்று பயமாக இருக்கிறது'' என்று அவர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

"தொடர்ந்து இரண்டு நாள்களாக முறையான தண்ணீர், சாப்பாடு ஏதுமில்லை. அன்றாட கடமைகளை ஒழுங்கு முறையில் நிறைவேற்ற முடியவில்லை. நித்திரை இல்லை. தமிழரான எமக்கு ஏன் இந்தக் கேடு'' என்று கொதித்தனர் நாவாந்துறை மற்றும் அயல் கிராம மக்கள். (ஒ-10-26-51)

**சாரதி தேவை**

கிளிநொச்சி கரடிப்போக்கில் இயங்கிவரும் எமது வீ.ஆர்.ரி நிறுவனத்துக்கு AD சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு- 0213208080

**தவறிவிட்டது**

நாகேந்திரன் துஷ்யந்தன், கதிரவேலு, கருணாகிரி ஆகிய எங்களது மோட்டார் வாகன உரிமைப் பத்திரங்கள் அடங்கிய கோவை மானிப்பாய்- ஒட்டுமடம் வீதி, சிவப்பிரகாசம் வீதிப் பகுதியில் தவறிவிடப்பட்டுள்ளது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொ.பே.இல-0776490716

**தவறிவிட்டது**

பூபாலசிங்கம் -கிசோக்குமார் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை [880594486V] இராணுவ அடையாள அட்டை, லைசன்ஸ், இன்சூரன்ஸ், ரக்ஸ், A.T.M. CARD கொமர்சல் Bank Card என்பன அடங்கிய பேர்ஸ் 19.08.2011 வெள்ளிக்கிழமை இரவு யாழ்ப்பாணத்துக்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு ஒப்படைத்து உதவவும்.

[illegible] மேற்கு, வாகையடி,
சாவகச்சேரி.
T.P- 0774429178, 0779214352

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ். நகருக்கு அண்மையில் அலுவலக பாவனைக்கு வீடு வாடகைக்குத் தேவை. [தொடர்பு கொள்ளும் நேரம்பு- 8- 5 மணிவ ரை திங்கள்- சனி]

தொடர்பு- 0217901798

**வாடகைக்கு/ கமிசனுக்கு**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள கடை ஒன்று வாடகைக்கு/ கமிசன் அடிப்படையில் வாடகைக்குண்டு.

தொடர்புகளுக்கு-
0777283811, 0770770529

**கடை வாடகைக்கு**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி முஸ்லிம் கல்லூரி வீதி, லேடன் முற்சந்தியில் கடை வாடகைக்கு விடப்படும். விவரங்களுக்கு:

தொ.பே- 0112727624

**திருத்தி வாசிக்கவும்**

நேற்றைய உதயன் பத்திரிகையில் பிரசுரமான துணுக்காய் வலய நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சின்னத்தம்பி இராஜேஸ்வரன் அவர்களின் மணிவிழா வாழ்த்துச் சிறப்பு மலரில் மணிவிழாக் குழுத்தலைவர் வலயக்கல்விப் பணிப்பாளர் துணுக்காய் T.மேகநாதன் என்பதற்கு பதிலாக தவறுதலாக T.யோகநாதன் என பிரசுரமாகிவிட்டது. அதனைத் தயவு செய்து திருத்தி வாசிக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் கோரிக்கைகளை அரசு கவனத்தில் கொள்ளாது

## தமிழ் மக்களின் கருத்துகளுக்கே தெரிவுக்குழு மதிப்பளிக்கும் என்கிறார் டியூ

கொழும்பு, ஒக. 24

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த கோரிக்கைகளை அரசு கருத்தில் கொள்ளாது, 30 வருடங்களுக்கு மேலாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் கருத்துக்களுக்கே முன்னுரிமை வழங்கி, நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கையை முன்வைக்கும்.

- இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும், சிரேஷ்ட அமைச்சருமான டி.யூ.குணசேகர நேற்று முன்தினம் தெரிவித்தார்.

தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பான சோஷலிச மக்கள் முன்னணியின் கருத்தை வெளியிடும் செய்தியாளர் மாநாடு கொழும்பு, கொட்டா வீதியிலுள்ள என்.எம்.பெரேரா ஞாபகார்த்த நிலையத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வீதிகள் மற்றும் மதகுகளை அமைப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது எனவும், நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்வைக்கும் யோசனைகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொள்ள வேண்டும்.

யுத்தம் நிறைவடைந்துள்ளது. எனினும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு வேண்டியதில்லை என சமூகத்தில் சில கருத்துகள் பரவியுள்ளன. இது ஒரு பயங்கரமான கருத்தாகும். அத்துடன், பொருளாதார அபிவிருத்தியே இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற கருத்தும் நிலவுகிறது. இதுவும் தவறான கருத்து.



### அபிவிருத்தியால் மட்டும் இனப்பிரச்சினைக்கு தீர்வு இல்லை

அபிவிருத்திகள் ஊடாக அவசியமான சூழலும், சந்தர்ப்பங்களும் ஏற்படுத்திக்கொள்ளலாம். ஆனால், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அபிவிருத்தி மட்டும் போதுமானதல்ல. வீதிகள், மதகுகள் ஆகியவற்றை அமைப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது.

வரலாற்றிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். நாடாளுமன்றில் மொத்தம் ஆளும்தரப்பில் 16 கட்சிகளும், எதிர்த்தரப்பில் 5 கட்சிகளும் உள்ளன. இந்நிலையில், அனைத்துக் கட்சிகளும் தெரிவுக்குழு விடயத்தில் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

மீண்டும் ஒரு யுத்தம், பிரிவினை வாதம் வராமலிருக்க இந்த 21 கட்சிகளும் புரிந்துணர்வுடன் செயற் படவேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைகளை அரசு கருத்தில் கொள்ளாது, அப்பாவித் தமிழ் மக்களின் பிரச்சினைகளையே அரசு கருத்தில்கொண்டு நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாகத் தீர்வை முன் வைக்கும். ஏனென்றால், 30 வருடகாலமாக பாதிக்கப்பட்டவர்கள் அப்பாவித் தமிழ் மக்களே. எனவே, அவர்கள் மீண்டெழ நாம் அவர்களுக்கு கைகொடுக்க வேண்டும்.

அதேபோன்று இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளுக்கு உள்நாட்டு ரீதியிலும், வெளி நாட்டு ரீதியிலும் பல்வேறு சவால்கள் உள்ளன. அதனால் நாம் இராஜதந்திர ரீதி யிலும், தந்திரோபாய வழிகளிலும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

### இலங்கை- இந்திய தமிழர் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு

தமிழ்நாட்டில் சுமார் 65 மில்லியன் தமிழர்கள் வாழ்கின்றனர். இலங்கைத் தமிழர்களுக்கும், இந்தியத் தமி ழர்களுக்கும்இடையில்நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. எனவே, இந்தியா வின் ஒத்துழைப்பு இன்றி இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது. ஆனால், முன்னாள் தலைவர்களான ஜே.ஆர்.ஜயவர்தன மற்றும் பிரேமதாஸ ஆகியோர் இந்தியாவின் ஒத்துழைப்பை மறுத்தனர். அதேபோன்று, இந்தியாவுக்கு எதிரான போராட்டத்தை ஜே.வி.பி. நடத்தியது. அதன் பின்னர் இடம் பெற்றதை நாம் அனைவரும் நன்கு அறிவோம்.

யுத்தத்தின்போது மௌனமாக இருந்து இந்தியா எமக்கு ஒத்துழைப்பு வழங்கியது. இந்தியாவின் ஒத்துழைப்பு இருந்திரா விட்டால், யுத்தத்தை நாம் வென் றிருக்க முடியாது. இந்தியாவுடன் ஜனாதிபதி நல்ல உறவைப் பேணி வருகிறார். அதன் ஊடாகவே இந்தியா எமக்கு ஒத்துழைப்பு வழங்கியது.

ஏகாதிபத்திய நாடுகளுக்கு நாம் எதிர்ப்பைத் தெரிவிக்கலாம். ஆனால், அந்நாட்டு மக்களுடன்நல்ல தொடர்பை பேணி வரவேண்டும்.

இதேவேளை, இனப் பிரச்சினைத் தீர்வுகாணும் விடயத்தில் ஊடகவியலாளர்களது ஒத்து ழைப்புகளும் அவசியமாகும். ஆயினும், ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு ஊடக நிறுவனங்களின் உரிமை யாளர்கள் சுதந்திரம் வழங்க வேண்டும். பக்கச்சார்பாக செயற்படாது, பிழையான எண்ணங்களை விதைக்காது சிறப் பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

கறுப்பு ஜூலை வரும் முன்பே ஜூலை 22ஆம் திகதி நாட்டில் கலவரம் ஏற்படலாம் என்ற ஊகத்தை ஊடகங்கள் தெரிவித்திருந்தன. அவ்வாறே அது இடம்பெற்றது. எனவே, தெரிவுக்குழு விடயம் ஆரம்பமாகியுள்ள நிலையில், ஊடகங்களின் ஒத்துழைப்பு அவசியம். மக்கள் மத்தியில் நல்ல கருத்தை நாம் எதிர்பார்க்கிறோம் - என்றார்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கை சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளரும், சிரேஷ்ட அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ வித்தாரண, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரும், சிரேஷ்ட அமைச்சருமான டி.யூ.குணசேகர மற்றும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பொதுச் செயலாளரும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார ஆகியோர் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் அமைச்சர் டியூ குணசேகரவும் அங்கம் வகிக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-சி)

# நாவாந்துறையில் இராணுவத்தின் அத்துமீறல் அடிப்படை மனித உரிமை மீறல் செயலாகும்

## வன்மையாகக் கண்டிக்கின்றது தமிழரசுக் கட்சி

யாழ்ப்பாணம், ஒக. 24

யாழ்.நகர், நவாந்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் பொதுமக்கள் மீது ராணுவத்தினர் நடந்துகொண்ட விதம் மற்றும் அத்துமீறலானது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும். இதனைத் தாம் வன்மையாகக் கண்டிப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்தக் கட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சட்டம் ஒழுங்கை நிறைவேற்ற வேண்டியவர்கள், சட்ட ஒழுங்குக்குப் பொறுப்பானவர் கள்பொதுமக்களைக் கண் மூடித் தனமாகத் தாக்கி அச்சுறுத்தல் சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பது சமூகத்தில் அமைதியின்மையை ஏற்படுத்துச் செயலாகும்.

இந்தச் செயலை மனித உரிமை களை அடிப் படையில் இருந்தே மீறும் செயலாகவே நாம் பார்க்கின் றோம். இது இன நல்லிணக்கத்துக்கு நேர்விரோதமான செயல்பாடாகவே உள்ளது.

இப்போது அரசிடம் இருந்து தமது பாதுகாப்புக்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை என் பதையே நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவத்தின் மூலம் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்கிறார்கள். இந்த நிலைமையே அரசுதான் உருவாக்கியுள்ளது.

எனவே இந்த விடயத்தில் ஜனாதிபதி நேரடியாகத் தலை யிட்டுப் பக்கசார்பற்ற விசாரணை நடத்தி தமிழ் மக்களது பாது காப்புக்கு உத்தரவாதம் வழங்க வேண்டும் - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

# யாழ். நகரில் முஸ்லிம் இளைஞர் கடத்தப்பட்டார்

யாழ்ப்பாணம், ஒக.24

யாழ். நகர் ஐந்து சந்தியில் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் மூன்றாம் வருட மாணவன் ஒருவர் 'படி' வாகனம் ஒன்றின் மூலம் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று இரவு 7.15 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் எம்.எச்.கஷ்னி(வயது -24) என்பவரே கடத்திச் செல்லப்பட்டுள்ளார். சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

பிரஸ்தாப இளைஞர் கற்பிட்டியில் இருந்து நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு தமது உறவினர் வீட்டுக்கு வந்துள்ளார்.

நேற்றிரவு இவர் கொழும்பு புறப்படுவதற்காக தமது மைத்துனருடன் யாழ். பஸ் நிலையம் நோக்கி சைக்கிளில் வந்த வேளை வாகனத்தில் பின் தொடர்ந்து வந்தவர்களால் ஐந்து சந்தியில் வைத்து கடத்தப்பட்டார். (ஒ-10)

# மன்னார் தாழ்வுப்பாடு வீதியில் நேற்றிரவு மக்களிடம் பிடிபட்டவர் கடற்படைச் சிப்பாய்

## சந்தேகமான முறையில் நடமாடியவர் சிக்கினார்

மன்னார், ஒக.24

மன்னார் தாழ்வுபாடு பிர தான வீதியில் சந்தேகத்துக்கிட மாக நடமாடிய நபர் ஒருவர் அந் தப் பகுதி மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு மன்னார் மாவட்ட ஆயர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 8 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 23 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் கையில் பையுடன் மேற்படி பகுதியில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடிக் கொண்டிருந்த போது அவரை மக்கள் மடக்கினர்.

பிரஸ்தாப நபர் வைத்திருந்த பையில் கைத்துப்பாக்கி, ரி 56 ரகத் துப்பாக்கி மற்றும் ரவைகளும் வைத்திருந்தமை தெரியவந்தது.

மன்னார் மாவட்டக் குரு முதல்வர் அன்ரனி விக்ரர் சூசை குறித்த நபரை மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தார். பிடிபட்ட நபர் கடற்படைச் சிப் பாய் என்று பின்னர் அறியவந் தது.

சம்பவம் குறித்து அறிந்த இராணுவத்தினரும் அங்கு பிரசன்னமாயிருந்தனர்.

பிடிபட்ட நபர் கடற்படைச் சிப்பாய்என்பதை உறுதிப்படுத்திய படையினர், விடுமுறை கொடுக்காததால் அவர் தப்பிச் செல்ல முயற்சித்த வேளை பிடிபட்டுள்ளார் என்று குறிப்பிட்டனர்.

பிடிபட்ட நபரைப் பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்கு இராணுவத்தினர் பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தனர்.(ஒ-எ-601)

Galaxy Cabs
Call us 021- 3201201
35/= Per Km.

BIT University of Colombo
புதிய பிரிவு ஆரம்பமாகின்றது
Semester 1 28/08/2011
100% gurantee for job & skill sunday at 9 am
Call Us: 0776577359 10 years of experience
தற்போது A/L பரீட்சைக்குத் தோற்றுவோரும் விண்ணப்பிக்கலாம்...
Semester 3 & 5 - October
MIS Open Source College
By Mr R.Kumaran-B.Sc. (Computing & IS)
150 m

தவறிவிட்டது
பொன்னையா சிதம்பரநாதன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் என்பவருடைய தே.அ. அட்டை (440052711V), சாரதி அ.பத்திரம் காப்புறுதி அ.பத்திரம், வரிப்பத்திரம் ஆகியவை நல்லூர் கோயில் சுற்று வட்டத்தில் தவறிவிட்டது.
(தகுந்த சன்மானம் வழங்கப்படும்)
தொடர்புக்கு- 0779254067

கார் விற்பனைக்கு
மாருதி 800AC கார்
இல.JX-xxxx
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு- 0773119936

நல்லூர் தினத்தை முன்னிட்டு
மாபெரும் விலைத் தள்ளுபடி
(இலுப்பையடிச் சந்திக்கும் ஆனைப்பந்திச் சந்திக்கும் இடையில்)
இரும்புக் கட்டில் 6660 4250
மரக் கட்டில் 7250 6000
ஸ்ரீல் அலுமாரி 13500 11250
செற்றி செற் 27000 22000
(மெத்தை(Arpico), கணினி மேசை, கணினி கதிரை, றெசின்ரேபிள், சோக்கேஸ், அபன்ரேபிள், பிளாஸ்ரிக் கதிரைகள், T.V. ஸ்ராண்ட், அலுவலக மேசை, பஞ்சுமெத்தை)
தொடர்புகளுக்கு- 0773583879, 0212227892

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலீட்டுக்கான அரிய சந்தர்ப்பம்

இச் சந்தர்ப்பம் செப்டெம்பர் 7 ஆம் திகதி வரை மட்டுமே



எமது நிறுவனத்தினூடாக பங்குச் சந்தையில் புதிதாக முதலீடு செய்ய முன் வருகின்ற முதல் 100 முதலீட்டாளர்களுக்கு குறித்த பெறுமதியான இலவச பங்குகளை பெற்றுக் கொள்ள அரிய வாய்ப்பு.

மேலதிக விபரங்களுக்கு :

**SKM LANKA HOLDINGS (PVT) LTD.**
A Member of Colombo Stock Exchange

பங்குப் பரிவர்த்தனை நிலையம், யாழ்ப்பாணக்கிளை.
முதலாம் மாடி, இல.398/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 1595, 0773 562 048


## வாழை முழுவதுமே பலன் தருவதுதான்



வாழைப் பழங்கள் காய்க்கும் வாழை மரங்கள் உண்மையில் மரங்கள் இல்லை. அதாவது வாழை மரம் என்று நாம் கூறுவது தவறு. அது ஒரு தாவரம். ஏன் எனில் மரங்களில் உள்ளது போல் கடினமான தண்டுப் பகுதியோ, கிளைகளோ இருப்பதில்லை.

இது தவாரங்களைப் போல பூத்துக் காய்த்த பின் இறந்துவிடுகின்றன. எனவே உலகிலேயே பெரிய தாவரம் வாழை மரம் என்று கூறப்படுகிறது.

வாழை அதன் வகையில் தாவரம் என்றாலும், நமது அது மரம் என்று தானே அறி முகமானது. எனவே அவ்வாறே இதில் கூறுவோம்.

வெப்பம் மிகுந்த, ஈர மான கால நிலை களில் வாழை மரங்கள் நன்றாக வளர்கின்றன. இதற்கான நிலப் பகுதியில் நல்ல நீர்ப்பாசன வசதி இருக்க வேண்டும்.

வாழை ஆசியாவில் தோன்றியது என்றாலும், அது ஏனைய வெப்ப மண்டலக் கண்டங்களான ஆபிரிக்கா, தென் அமெரிக்கா போன்றவற்றுக்குப் பரவியது.

வாழைப்பழம் விளைவிப்பதில் உலகிலேயே உச்சத்தில் நிற்பது நமது இந்தியாதான். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் 170 லட்சம் தொன் வாழைப் பழம் உற்பத்தி செய்யப்படுகிறது.

வாழையின் மற்றொரு சிறப்பு என்ன வென்றால், வாழை மரத்தின் அனைத்து பாகங்களும் மக்களுக்கு பயன்படுகிறது. பூ, இலை, காய், கனி, தண்டு, நார்ப் பகுதி எனற எதுவும் வீணாகாது.

வாழைப் பழக் கழிவுகள் காகிதமாக மாற்றப்படுகின்றன. வாழை இழை களைக் கொண்டு பட்டுப்போன்ற மென்மையான துணிகள் நெய்யப்படுகின்றன. ஜப்பானில் பாரம் பரிய கிமானோ ஆடைகளை உருவாக்கவும், நேபாளத்தில் கம்பளம் தயாரிக்கவும் வாழை இழைகள் பயன்படுத்தப்படுகின்றன.





"1990 முதல் 17 வருடங்களில், சந்தனமரத்தின் விலை தொன்னொன்றுக்கு 4,000 அமெரிக்க டொலரிலிருந்து 100,000 அமெரிக்க டொலருக்கு அதிகரித்துள்ளது."
(வருடாந்தம் 22% கொண்ட வருடாந்த வளர்ச்சி)

"Touchwood ஒரு உலகளாவிய அடையாளச் சின்னம்"

"மரங்கள் மீது பணம் வளர்வதில்லை" எமது மரங்களுடன் அது வளருகின்றது.




Cumulative nominal returns for timberland investment, measured by the NCREIF, relative to other assets in the investable universe between 1987 and 2006.

பிணையங்கள் மற்றும் முக்கிய அம்சங்கள்

உங்கள் இலாபம் எவ்வளவாக இருக்கும்?

| சந்தன மரங்களின் எண்ணிக்கை | ஆரம்ப கட்டணம் (ரூபா) | வருடாந்த பராமரிப்பு கட்டணம் (ரூபா) | மொத்த பராமரிப்பு கட்டணம் (ரூபா) | மொத்த முதலீட்டுத் தொகை (ரூபா) | குறைந்தபட்சம் உத்தரவாதப்படுத்தப்பட்ட அறுவடை வருமானம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 6 | 99,000 | 9,900 | 148,500 | 247,500 | 3,000,000 |
| 12 | 195,000 | 19,500 | 292,500 | 487,500 | 6,000,000 |
| 25 | 385,000 | 38,500 | 577,500 | 962,500 | 12,500,000 |
| 50 | 732,000 | 73,200 | 1,098,000 | 1,830,000 | 25,000,000 |
| 100 | 1,397,000 | 139,700 | 2,095,500 | 3,492,500 | 50,000,000 |
| 200 | 2,662,000 | 266,200 | 3,993,000 | 6,655,000 | 100,000,000 |



TOUCHWOOD

Regional Branch Office
No.207, Navalar Road, Jaffna.
Tel : +94 21 7 390 200
Fax : +94 21 7 390 203
Hotline : +94 77 7 569 615
E-mail : investments.lk@touchwood.com / Web : www.touchwood.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மின் கலப்பான் ஒரே தெரிவு

- கலவைகளுக்கு பயன்படுத்தக்கூடிய தட்டு
- துருப்பிடியாத மினு மினுப்பான பாத்திரங்கள்
- பொலிகாபனைற் மூடிகள்
- 100% முறுக்கிடப்பட்டது வெளியீடு 550W
- MRP. Rs. 6,490 /- இலிருந்து

1 YEAR WARRANTY

தெரிவுசெய்யப்பட்ட நிலையங்களிலும் நாடு பூராகவுள்ள மின் உபகரண நிலையங்களிலும் விற்பனைக்குண்டு.
விபரங்களுக்கு - 0772 991 996, 0115 565 657/8

Product of The TRADESMANN 1956

# தரம் ஐந்து மாணவர்களின் ஜப்பான் பயணக் கனவு



இலங்கையில் தரம் ஐந்தில் புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோற்றும் மாணவர்களில் பலர் ஜப்பான் செல்லும் கனவுடன் தமது கல்வியைத் தொடர்கின்றனர். இலங்கைத் தமிழர் என்ற நிலையில் வருடம் ஒன்றில் ஒருவருக்கு மட்டுமே இக்கனவு கைப்படுகிறது. இந்த வகையில் இவ்வாண்டில் இலங்கைத் தமிழருக்குரிய வாய்ப்பைப் பெற்றிருப்பவர் தாரணி பாலேந்திரன். உடுவில் மகளிர் கல்லூரியில் கல்வி கற்று 187 புள்ளிகளைப் பெற்றுத் தற்போது யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கல்வியைத் தொடர்கின்றார்.

ஜப்பான் நாட்டின் புக்கோகா நகரை மத்திய நிலையமாகக் கொண்டு இயங்கும் நிறுவனம் ஆசிய பசுபிக் சிறுவர் கூட்டமைப்பாகும். இந்த அமைப்பு 1988 இல் நிறுவப்பட்டது. ஜப்பானில் புக்காகோ நகர் நிறுவப்பட்டு நூற்றாண்டு கண்டமையை ஒட்டி இதன் முதல் மாநாடு புக்காகோ நகரில் 1989 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. அது முதல் ஒவ்வோர் ஆண்டிலும் ஜூலை மாதத்தில் ஆசிய பசுபிக் சிறுவர் கூட்டமைப்பின் மாநாடு புக்காகோ நகரில் இடம் பெற்று வருகின்றது.

ஆசிய பசுபிக் நாடுகள் என்ற தகைமையைப் பெற்ற 50 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 400 இற்கும் மேற்பட்ட 11 வயது சிறுவர்கள் இந்த மாநாட்டுக்காக ஒன்று கூடுகின்றனர். இலங்கையின் சார்பில் கலந்து கொள்ளும் வாய்ப்புள்ள எட்டுப் பேரைப் புலமைப் பரிசில் பரீட்சையை அடிப்படையாகக் கொண்டு கல்வி அமைச்சு தெரிவு செய்கின்றது. இந்த எட்டுப் பேரில் நால்வர் ஆண்களாகவும் நால்வர் பெண்களாகவும் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையும் உண்டு. அத்துடன் இலங்கைத் தமிழர் ஒருவர் மலையகத் தமிழர் ஒருவர் முஸ்லிம் ஒருவர் என மூன்று இடங்கள் வழங்கப்படுகின்றன. ஏனைய மாணவர்கள் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவராக அமைகின்றனர். இவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்கள் ஒருவருக்கும் இந்தச் சந்தர்ப்பம்வழங்கப்படுகின்றது.



சிறுவர் மாநாட்டில்பங்கேற்கச் செல்லும் சிறார்கள் ஒரு வாரத்துக்கு மரேன் இல்லத்தி லும் ஒரு வாரம் ஜப்பானியக் குடும்பம் ஒன்றின் அங்கத்தவ ராகவும் தங்கவைக்கப்படுகின் றனர். ஆசியருக்கும் இத்தகைய அனுபவமேற்படும். அவரும் தன்னை ஒத்த ஆசிரியக் குடும்பம் ஒன்றுடன் தங்கவைக்கப் படுகின்றார். மரேன் இல்லத்தில் பல்வேறு நாடுகளின் கலாசார ஆற்றுகைப் பரிமாறல் கள் மற்றும் விளையாட்டு அனு பவங்கள் ஏற்படுகின்றன. அடுத்த ஒரு வாரத்தில் ஜப்பானியக் குடும்ப அங்கத்தவராக இணைந்து தன்னை ஒத்த ஜப்பானியச் சிறு வருடன் அவர்களது பாடசாலைக் குச் செல்லும் வாய்ப்பு வழங்கப் படுகின்றது. தாய் நாட்டிலிருந்து பெற்றோரைப் பிரிந்து செல்லும் பிள்ளைகளுக்கு இது ஒரு புதுவித அனுபவமாகவும் அமை கின்றது. இந்த அனுபவம் பற்றி பா.தாரணி தெரிவிக்கையில்:

ஜப்பான் வீடுகளின் வெளியே செருப்பைக் கழற்றி விட்டுச் செல்வது கூடப் புதுமையான அனுபவமாக இருந்தது. செருப்பை வீட்டுக்கு வெளியே கழற்ற வேண்டும். அதன் பின் நாம் உள்நுழையும் திசைக்கு எதிர்ப்புறம் செருப்பின் முனை இருக்கத்தக்கவாறு செருப்பை ஒழுங் காக வைக்க வேண்டும். பாடசாலைக்குச் செல்லும் போதும் காலணி தொடர்பாக இந்த நடைமுறையே கையாளப் படுகின்றது. பாடசாலைக்குள் வேறு பிரத்தியேகக் காலணிகளையே அணிந்து செல்கின்றனர் என்றார்.

இலங்கைக் கல்வி முறை ஜப்பானியக் கல்வி முறை தொடர்பாக எவ்வித உணர்வுகளைப் பெற்றீர்கள் எனக் கேட்ட போது, இலங்கையில் இலவசக் கல்வி வழங்கப்படுவது நாம் பெற்ற வரப்பிரசாதம். ஆனால் ஜப்பானில் கட்டணம் செலுத்தியே கற்க வேண்டும். மற்றப்படி இரு நாட்டுப் பாடசாலை முறைகளிலும் என்னால் பெரிய அளவிலான வேறுபாடுகளைக் காண முடியவில்லை. ஆனால்ஜப்பானில் சீருடை முறை இல்லை என்றார்.

எனக்குக் கற்பித்த வே.அன்பழகன் ஆசிரியர் இந்த வகுப்பில் இருந்து ஒருவரே ஜப்பான் செல்லப் போகிறார் என்று அடிக்கடி கூறுவார். அப்படி அவர் கூறியது எனக்கு ஜப்பான் பற்றிய கனவை வளர்த்தது. இன்று அது கைகூடிவிட்டமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன் என்றார்.

மாநட்டின் ஓரங்கமாக பாலம் கழகம் என்ற அமைப்பு உருவாக்கப்படுகிறது. இது 1988 ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகின்றது. பாலம் கழகத்தினர் தங்களுக்குள் ஒன்று சேர்ந்து சமூகப் பணிகளை முன்னெடுக்கின்றனர். புக்கோகாவில் சந்தித்துப் பாலம் கழகத்தில் அங்கத்துவம் பெற்றவர்கள் தொடர்பூடகங்கள் வாயிலாகத் தமது உறவுகளைப் பலப்படுத்திக் கொள்கின்றனர். இந்தக் கழகத்துக்குத் தற்போது வயது 23. சமய பொருளாதார அரசியல் அழுத் தங்களுக்கு உட்படாத உலகளாவிய சகோதரத்துவத் தை நிறுவும் பணியில் பாலம் கழகம் கடுமையாக உழைக்கின்றது. இலங்கையிலும் இக்கழகம் வினைத்திறன் மிக்க பணிகளை ஆற்றி வருகின்றது. சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்தல், மருத்துவ முகாம்களை நடத்துதல், வறியவர் களுக்கு ஆதார மூட்டல், இரத்ததான முகாம், கல்விசார் கருத்தரங்கு களை நடத்துதல் முதலிய பணிகள் பாலம் கழகத்தினரால் முன்னெடுக் கப்படுகின்றன. புக்கோகா சென்று பாலம் கழக அங்கத்துவத்தைப பெறறுக் கொள்ளும் இலங்கைத் தமிழ் மாணவர்கள் பெரும்பாலும் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பதை நோக்க முடிகிறது.

தலைமைத்துவப் பண்புகளை இளவயதில் கற்றுக் கொள்வதற்கு இந்த மாநாடு வழிவகுப்பதுடன், புதிய உறவுகளைப் பெற்றுக் கொள்ள வும் உலகளாவிய சகோதரத்துவத்தை அனுபவிக்கவும் வாய்ப்பளிக்கின் றது. பாலம் கழக அங்கத்துவமும் இங்கு முக்கிய விடயமாகும். இத்தகு அரிய வாய்ப் பைப் பெற்றுவிட வேண் டும் என்ற உள உந்துகையுடன் ஒவ்வொரு மாணவரும் கனவு காண்பதில் தவறில்லைத் தானே.

**ச.லலீசன்,**
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.




புதியதோர்
பயணத்திற்கான
புதியதோர் சக்தி

உங்களின் முன்னேற்றப் பாதையில் உங்களுடன் கைகோர்த்து சேவை புரிய
சேர்வோ பிரிமியம் CF4 டீசல் இன்ஜின் ஒயில்
இப்போது உங்கள் அருகில்

கனரக வாகனங்களின் இன்ஜினை அதிக வெப்பநிலையில் இருந்து பாதுகாப்பதோடு, எண்ணெய் படிதல் மற்றும் துருப்பிடித்தலையும் தடுக்கும் சேர்வோ பிரிமியம் CF4 டீசல் இன்ஜின் ஒயில் வடக்கு, கிழக்கு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் பெறறுக்கொள்ளலாம்.
அத்தோடு நாடளாவிய ரீதியில் காணப்படும் IOC பெற்றோல் நிலையங்கள், அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் விநியோகத்தர்களிடமும் பெறறுக்கொள்ளலாம்.

அம்பாறை மாவட்டம்
பிரதான வீதி,
அக்கரைப்பற்று-01.
067 3 672315
067 2 277419
0777 664869

பொலன்னறுவை & திருகோணமலை மாவட்டம்
மட்டக்களப்பு வீதி,
பொலன்னறுவை.
027 2 223032
0772 689061

வவுனியா மாவட்டம்
202, குடை பிள்ளையார் குளம்,
வவுனியா.
024 2 222 555
0777 488 222

யாழ்ப்பாண மாவட்டம்
74, ராஜா பிளாஸா, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.
021 5 677777
021 2 228 032
0773 169488

Rediffusion - Y&R

SERVO




## ஓராண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



பிறப்பு: 22.09.1947
இறப்பு: 03.08.2010



**அமரர் பொன்னன் நல்லையா**

கடந்த ஆண்டு 03.08.2010 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது அன்புத் தந்தையின் ஓராண்டு நினைவுதினம் எதிர்வரும் 24.08.2011 புதன்கிழமை நடைபெறும். அன்றைய தினம் மதியம் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நடைபெறும் இடம்:
Mrs.J.R.Albert, Prince Akam
Nagamal Lane, Uduvil, Chunnakam.
T.P: 0777041322

நல்லையா
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org